
கல்கி







இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப் படுத்தும்—இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், இதர நோய்கள் உங்களைப்பாதிக்கக்கூடும். எனவே தவறாது வாடர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த்தடுப்புச்சக்தியை அளிக்கும் ஊட்டப்பொருள்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட். அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வயாகால் இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.


வாடர்பரீஸ் காம்பவுண்ட்—மிகவும் நம்பகமான டானிக்

வார்னர்-ஹிந்துஸ்தான் லிமிடெட்

WH 7985 TM

இவை இரண்டும் நல்லுணவுக்கு இன்றியமையாதவை





உங்கள் சமையலறையில் சுதாவும், விமலாவும் இருந்தால் சமைய லுக்குத் தேவையான முக்கிய சாமான்கள் இருப்பதாகக் கருதலாம். இனிப்புப் பண்டங்கள், கறி வகைகள், மற்றும் பொரித்தெடுக்க வேண்டியவைகளுக்குச் சுதா வனஸ்பதியை உபயோகிக்கலாம். வறுத் தெடுப்பவைகளுக்கு விமலா வெஜிடபிள் ஆயிலே உபயோகிக்கலாம்.

நீங்கள் சமைக்கும் உணவுப் பண்டங்களிலுள்ள இயற்கையான மணம், ருசி இவைகளைச் சுதாவும் விமலாவும் மேலும் அதிகரிக் கின்றன.

சுவையை நன்குணர்ந்தவர்கள், ருசி யறிந்தவர்கள் தங்கள் உணவு சுதா, விமலா இவைகள் கொண்டே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டு மென்று வற்புறுத்துகிறார்கள்.

சுதாவையே கேட்டு வாங்குங்கள்
விமலாவையே கேட்டு வாங்குங்கள்

ஹைட்ரோஜனேஷன் பாக்டரி டிவிஷன்
கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிமிடெட்
கோழிக்கோடு – 5 கேரளா

A KERALA GOVERNMENT PRODUCT

ஏஜண்டுகள்

வடஆற்காடு ஜில்லா : பெருமாள் & கம்பெனி, 41, பெரிய தெரு, வேலூர்-4 ○ கோயமுத்தூர் & நீலகிரி : புரொவிஷன் ஸ்டோர்ஸ், 403, ராஜா தெரு, கோயமுத்தூர் ○ திண்டுக்கல் நகரம் மதுரை தாலூக்கா, நிலக்கோட்டை, திருமங்கலம் & மேலூர் : வசனி ஸ்டோர்ஸ், ஜெனரல் மர்ச்சன்ட்ஸ், கச்சேரி தெரு, திண்டுக்கல் ○ திண்டுக்கல் நகரம் (தாலூக்கா தவிர) பாலே, கோடைக்கானல் தாலூக்கா & பெரியகுளம் : சந்திரா டிரேடிங் ஏஜன்ஸீஸ், 23, மேற்கு கார் தெரு, திண்டுக்கல் ○ சென்னை நகரம் & செங்கற்பட்டு ஜில்லா : லாலா கோபிகிருஷ்ண கோகுல்தாஸ், 3வது மாடி, பாட்லிபாய் ஹவுஸ், 93-A, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1 ○ திருச்சி ஜில்லா : கிருஷ்ணு டிரேடர்ஸ், அருணாசலபுரம், 50-C, போர்ட், ஸ்டேஷன் ரோடு திருச்சிராப்பள்ளி ○ மாஹி : கௌசால A. கிருஷ்ணன்.


KSO. 47

கல்கி

பொருளடக்கம்

கீலக, தைமீ, 6 ஜனவரி, 19உ.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



உன்னை எப்படி நம்புவது?
அமெரிக்கா
பிரிட்டன்
ருஷியா
ராஜமானிய வாக்குறுதி
ஆட்சிமொழி வாக்குறுதி
எச்சரிக்கிறேன்! நீ வளர்ந்தபின் உன்னைப் பிடிக்கப் போகிறேன்!
சவான்
நாசவேலைக்காரர்கள்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 25

இந்தியாவைப் பிளக்காதீர்!

புத்தாண்டு பிறந்த தினத்தில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அகில இந்தியாவுக்கும் ஹிந்தி தொடர்பு மொழியாக வேண்டியதன் அவசியத்தைக் கூறியிருக்கிறார்.

பிரதமரின் கருத்துக்குத் தமிழக முதலமைச்சர் உடனடியாக எதிர்க் கருத்து தெரிவித்துள்ளார். ஆங்கிலமே அகில இந்தியத் தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்பதே ஆரம்பத்திலிருந்து தமது அரசாங்கத்தின் கருத்து என்றும், இக் கருத்தையே இனியும் பின்பற்றப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஹிந்தி மொழி பேசாதோர் விரும்பும் வரையில் ஆங்கிலமே நீடிக்கும் என்பது நேருஜி தந்த வாக்குறுதி. அதைக் காற்று வாக்கில் விட்டு விடலாகாது.

ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்று தமிழக முதன் மந்திரி கூறியிருப்பதுதான் பன்மொழி நாடாகிய இந்தியாவின் மொழிப் பிரச்னையை நல்ல முறையில் தீர்க்கக்கூடிய ஒரே உபாயம்.

ஆங்கிலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாட்டு நடப்புக்கள் அனைத்திலும் முக்கியமாக இருந்து வந்திருக்கிறது. சரித்திரம் செய்துள்ள ஒன்றை நாம் அழிக்க முடியாது. தென் இந்தியாவைப் பொறுத்த மட்டில் ஹிந்தி ஆங்கிலத்தைவிட அந்நியமானது. ஹிந்தியைத் திணிக்கும் முயற்சி இந்தியாவை இரண்டாகப் பிளக்கும். ஆங்கிலம் இந்திய ஐக்கியத்தைக் காக்கும் என்பதோடு, இந்தியாவை வெளி உலகுடனும் இணைக்கும்.

இந்தியாவின் பிரதேச மொழிகளில் ஏதேனும் ஒன்று அகில இந்திய மொழியாகிற அந்தஸ்தைப் பெற முடியுமா என்பதை அம்மொழியின் இயற்கையான வளர்ச்சிக்கே விட வேண்டும்; இதில் சர்க்காரின் தலையீடு கூடாது. சர்க்கார் தலையிட்டால் ஏதோ ஒருவிதத்தில் நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும். இதனால் எதிர்ப்பு தூண்டி விடப்படும். இயற்கையாக ஏற்படக்கூடிய மொழி வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

பார்லிமென்டிலுள்ள பெரும்பான்மை பலத்தைத் துஷ்பிரயோகம் செய்து, ஹிந்தி பேசாதோரின்மீது ஹிந்தியரின் ஆதிபத்தியத்தை ஏற்படுத்தி விடலாம். இதன் விளைவாக, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாத பெரும்பான்மையினரிடமிருந்து — உண்மையான ஜனநாயகத்தை உணர்ந்து சிறுபான்மையின் நலனை மதிக்கக் கற்காத பெரும்பான்மையினரிடமிருந்து — தென் இந்தியா சமாதான முறையில் தனியாகப் பிரிந்து போகக் கோருவதற்கு நேரிடும்.

தென் இந்தியாவில் நீண்டகாலமாகத் தொடர்பு முறியாமல் கிராமங்களில் சுயாட்சி இருந்துள்ளது. இது சிறுபான்மையினரின் உணர்ச்சிகளை மதிக்கும் பாங்கைத் தென் இந்தியர்களுக்கு அளித்துள்ளது. சரித்திர பூர்வமான காரணங்களால், வட இந்தியாவில் இத்தகைய கிராம சுயாட்சி இல்லை. இது துரதிருஷ்டமானது. சிறுபான்மை உணர்ச்சியை மதிக்கத் தெரியாததாலேயே, யாரும் குறுக்கிடாமல் தானாகத் தீர்வு உண்டாகியிருக்க வேண்டிய பிரச்னையை அநாவசியமாகத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். தங்களுக்கென சாம்ராஜ்ய அதிகாரம் பெற விரும்பிக் கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்கள், தேவையற்ற பிரச்னையைக் கிளப்பிவிட்டு, ஒழுங்கான முன்னேற்றத்தைக் குளறுபடி செய்திருக்கிறார்கள். இதனால் ஒற்றுமை இருந்த இடத்தில் வேற்றுமை உண்டாகியுள்ளது. பகுத்தறிவு இருந்த இடத்தில் வெறுப்புணர்ச்சி உண்டாகியுள்ளது.

ஆங்கிலத்தைத் தவிர வேறு எம்மொழியாலேனும் அகில இந்தியத் தொடர்பு மொழியாக முடியுமாயின், அது இவ்வளவு காலத்தில் தானே உரிய இடத்தைப் பெற்றிருக்கும்! ஒரு மொழி இயற்கை வளர்ச்சி பெற்றால் நீண்ட காலம் பின்னணியில் தூங்கி வழியாது.

ஆங்கிலம் ஏற்கனவே நல்ல முறையில் தொடர்பு மொழியாகப் பணியாற்றி

புள்ளது: அது அப்படியே நீடிப்பதில் சிரமமேதும் இல்லை. புதிதாக ஒரு தொடர்பு மொழியைச் செயல்படுத்த விரும்பினால் அது நிர்ப்பந்தத்தினாலேயே நடக்கும். இவ்விதம் அரசாங்க பூர்வமாகப் பலவந்தம் செய்தால் அது மக்களிடை ஒருமைப்பாடு உண்டாக்கும் சக்தியாக இராது. மாறாக, தேசம் பிளவுண்டு போவதற்கும், பிராணாபத்தான பேதம் ஏற்படவுமே ஊக்கம் தரும்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள எல்லா மக்களையும் எட்டும் இந்திய மொழி ஏதும் இல்லை. இவ்வாறு நாட்டு மக்கள் அனைவரையும் எட்டும் விதத்தில் எந்த இந்திய மொழியையும் உருவாக்க முடியாது. ராஜ்ய சர்க்கார்களும், சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள மக்களும் கையாளக்கூடிய பொதுவான தொடர்பு மொழி இருந்தாலே போதும். இதற்கு இப்போது உதவி வருகிற தொடர்பு மொழியை நீடித்தாலே போதும். ஏதோ ஓர் இந்திய மொழியை அனைவரின் மீதும் கட்டாயமாகத் திணித்து, நாட்டைப் பிளக்க வேண்டிய தேவை சிறிதும் இல்லை.

இது பற்றி நிறைய எழுதியாயிற்று. பலர் விவேகமான போதனை தந்துள்ளனர். அறிவு விளக்கம் பெற்ற ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரதமரானபோது, அவர் ஹிந்தியரைக் கட்டுப்படுத்தும் சக்தியாகச் செயலாற்றுவார் என்று நம்பினேன். ஆனால் ஜனநாயகத்தின் காரியக்கிரமம், ஒருவர் தம் கருத்தை வலுவாகப் பின்பற்றுவதற்கு வாய்ப்புத் தருவதாக இல்லை. ஸ்ரீமதி இந்திராவின் சகாக்களும், பார்லிமென்ட் அங்கத்தினர்களும் அவரை மிகவும் நெரிக்கிறார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பதவி வகிப்பதை ஸ்ரீமதி இந்திரா வெறுக்கக் காணோம்.

சுபிட்சம், சமநீதி, முன்னேற்றம் இவற்றுக்கெல்லாம் ஜனநாயகமே வழி என எண்ணினோம். ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல நம் ஜனநாயகத்தில் உண்மையான தேசப்பற்றின் இடத்தில் சுய முன்னேற்ற உணர்வு அமர்ந்துவிட்டதைப் பார்க்கிறோம். ஜனநாயகத்தின் செயல்முறையைப் பயன்படுத்திக்கொண்டு சாதுரியசாலிகள் அதிகாரம் பெற்றுள்ளனர். இதைக் கண்டு, செல்வாக்குப் பெறக்கூடியவர்களுக்கெல்லாம் பெரும் சபலம் ஏற்படுகிறது. வகுப்புப் பிரிவுகள் நிறைந்தது நம் தேசம். இதில் ஜனநாயகமும், வயதுவந்தோர் அனைவரும் பெற்றுள்ள வாக்குரிமையும் தந்துள்ள தவிர்க்க முடியாத முதற் பலன், ஒருசில சாதுரியசாலிகள் பெற்றுள்ள அதிகார பலமே. எனினும் இதைக் கண்டு நாம் ஜனநாயகத்தை விட்டுவிடலாகாது. மற்ற முறைகளையெல்லாம் நாம் விட்டாகி விட்டபடியால், ஜனநாயகத்தையும், பார்லிமென்ட் ஆட்சிமுறையையும் விடாமல் பற்றிக் கொண்டு அவற்றிலிருந்து அதிகபட்சமாகப் பெறக்கூடிய நற்பலனைப் பெறவேண்டும். இதுவே விவேகத்தின் குரல். பொறுமை இழக்கக் கூடாது. விவேகத்தின் குரலை ஒடுக்கவும் அனுமதிக்கலாகாது. எத்தனை இடுக்கண் ஏற்பட்டாலும் விவேகத்தின் குரலை அயராது எழுப்பி, அதிகாரப் பிரியர்களுக்கு மக்கள்பாலுள்ள கடமைகளை நினைவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டப்போவதாக ஸ்ரீ நிஜலிங்கப்பா வாக்குத் தந்திருக்கிறார் எனச் செய்தி வந்துள்ளது. புத்துயிரூட்ட வேண்டிய அளவுக்குக் காங்கிரஸ் ஜீவசக்தி இழந்திருப்பது உண்மை. ஆனால் அதற்குப் புத்துயிரூட்டுவதில் நிஜலிங்கப்பா வெற்றி பெறுவாரா என்பது சந்தேகம்.

செயற்கையாக பிராண வாயு கொடுப்பது வேறு; புதிதாக ஜீவசக்தி உண்டாக்குவது வேறு. பெர்மிட், லைசென்ஸ்களை நம்பி அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டுள்ள தொழில் துறையினரிடமிருந்து நன்கொடை பெற்றுச் செயற்கையாகக் கட்சிக்குப் பிராண வாயு செலுத்துவது அதற்குப் புது ஜீவன் ஊட்டுவதாகாது. இது கலப்படமற்ற லஞ்ச ஊழல்.

காங்கிரஸை விட மிகக் குறைந்த அளவில் இருப்பினும், சுதந்திரக் கட்சியும் தொழில் துறையினரிடமிருந்து நன்கொடை பெறுகிறதே என்று சிலர் கேட்கின்றனர். அதிகாரத்திலுள்ள கட்சிக்குக் கொடுப்பதே லஞ்சம். பதவியில் இல்லாத கட்சிக்கு — பதவி வகிக்கும் கட்சியை எதிர்க்கும் ஒரு கட்சிக்கு — நன்கொடை தருவது லஞ்சமல்ல; அது பாராட்டுக்குரிய தைரியத்தின் சின்னமாகும்.

ஃஃஃ

கம்பெனிகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிவிகிதம் நியாயமானது என்று சொல்லப்படுகிறது. இந்தியாவின் இன்றைய நிலையில் இந்த விகிதம் தேசத்துக்கு நன்மை தராது என்பது தெளிவு. உயர்ந்த வரி விகிதம் செலுத்த வேண்டியுள்ளதன் காரணமாகவே கௌரவம் வாய்ந்த முதலீட்டாளர்களும், நேர்மை குன்றிக் கருப்புப் பணம் சேர்த்துக் கொள்ளத் தலைப்படுகின்றனர். கருப்புப் பணத்தைச் சட்டப்படி, அமைந்த தொழில் விஸ்தரிப்புக்குப் பயன்படுத்த முடியாது. கருப்புப் பணம் தேச அபிவிருத்திக்கு மாறான இனங்களில் செலவாகிறது.

உயர்ந்த வரி விகிதம் பட்ஜெட்டைச் சரிப்படுத்த உதவினாலும் தேசத்துக்குப் பலவிதங்களில் தீமை விளைவிக்கிறது. இந்த விஷ அம்சத்தை விலக்கினால் முன்னேற்றம் காண்பதோடு, நன்னெறி வளர்வதையும் காண்போம். தொழில்கள் வளர உதவி செய்தால் முதலீட்டாளர் பயன் பெறுவது மட்டுமின்றி, வேலை வாய்ப்புக்கள் பெருகிப் பொதுநலனும் வளரும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இதுகாறும் சர்க்கார் செய்துள்ளதை மாற்றுவது சிரமமாகவே தெரியும். ஆயினும் போதிய அரசியலறிவு இருந்தால் அற்புதங்களையும் சாதித்துவிடலாம்.

கம்பெனியின் வருமானம் எப்படித் தொழில் வளர்ச்சிக்குப் பயனாகவிருக்கிறது என்று காத்திருந்து பாராமலே, அந்த வரு

மானத்துக்கு வரி விதிப்பது அறிவுக்குப் பொருந்தவில்லை. மேலும், தனிப்பட்டவர்களுக்கு லாபம் பகிர்ந்து தரப்படுமுன் கம்பெனிக்கு வரி விதிக்கப்படுவதால் இத் தனி மனிதர்களின் வருமானம் பாதிக்கப்படுகிறது. இந்த வருமானத்துக்கான வரியில் தமக்கு உள்ள பங்கை ராஜ்யங்கள் இழக்க வேண்டியதாகிறது.

* * *

சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ராட்சதத் தொழிற்சாலையான ஹிந்துஸ்தான் உருக்காலை எப்போதும்போல் நோயாளியாக இருக்கிறது என்கிறது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. சென்ற ஆண்டு போல இவ்வருடமும் அது ரூ. 40 கோடி நஷ்டப்படுகின்ற சாதனையை நிகழ்த்திக் காட்டக்கூடும் என்கிறது.


உள்நாட்டில் உருக்கின் விலையை உயர்த்தியும் பயன் இல்லை. அந்நியரின் போட்டியுடன் ஈடு கொடுப்பதற்காக உருக்கு ஏற்றுமதிக்குப் பெரிய மானியங்கள் தர உத்தேசித்திருக்கின்றனர். இதற்குத் தேவைப்படும் ஏராளமான பணத்தை ஆண்டுதோறும் நம்முடைய எளிய மக்கள்தான் வரிகளின் உருவில் செலுத்துகின்றனர் என்பதை மறப்பதற்கில்லை.

* * *

மக்கள் சபைக்கான நாகர்கோயில் தொகுதியில் காங்கிரஸ் தனது கணிசமான பெரும்பான்மை பலத்தை நிலைநாட்டிக் கொண்டு விட்டது. தொகுதி வாக்காளர்களில் எண்பது சதவிகிதத்தினர் வாக்குப் பதிவு செய்தவர். நாகர்கோயில் தொகுதியில் காங்கிரஸின் சார்பான மனப்பான்மை நீடித்து வருவதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இப்போது நிலைமையை அலசிப் பார்ப்பதால் ஒரு பயனும் இல்லை.

திரு காமராஜ் வென்றாலும், டாக்டர் மத்தியாஸ் வென்றாலும், காங்கிரஸ்காரர்கள் தேர்தல் சமயத்தில் பின்பற்றிய வன்முறையும், பயமுறுத்தலும் (ஒரு தி. மு. க. தொண்டர் கொல்லப்பட்டிருக்கிறார்) மிக்க அவமான

சங்கீத வித்வத் சபை இம்முறை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு சங்கீத கலாநிதி என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்ததில் எல்லோருக்குமே மகிழ்ச்சிதானென்றாலும் தமிழகப் பெண்மணிகள் அடைந்த குதூகலமும் பெருமிதமும் அலாதியானவைதான். இதனை நிரூபிக்கும் வகையில் மாதர் குலத்தவர் சங்கீத கலாநிதி பட்டம் பெற்ற முதல் பெண்மணியைப் பாராட்ட விசேஷக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார்கள். சென்னை மியூஸிக் அகாடமி அரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சர்தாரிணி உஜ்ஜல் சிங் தலைமை தாங்கினார். ஸ்ரீமதி விசாலாட்சி நாராயணசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஸ்ரீமதி ருக்மிணி தேவி, ஸ்ரீமதி இளப்வாலா ஜாதவ், ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம், ஸ்ரீமதி வசுமதி ராமசாமி ஆகியோர் ஸ்ரீமதி எம். எஸ்ஸின் சிறப்புக்களை நவின்றனர். ஸ்ரீமதி ருக்மிணி ராஜகோபாலன் ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்குப் பாராட்டிதழை இன்னிசையாகவே வாசித்தளித்தார். இந்தப் பாராட்டு விழாவினை நடத்திய குழுவினர் சங்கீத ரசிகர்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டு இரண்டு நிதிகளை அறிவித்தனர். ரூபாய் ஆறாயிரம் கொண்ட ஒரு நிதி ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் தாயார் வீணை ஷண்முகவடிவு அவர்களின் பெயரால் ஆண்டுதோறும் வித்வத் சபை மகாநாட்டின்போது சிறந்த இளம் வீணை வித்வானுக்குப் பரிசு வழங்குவதற்காக அளிக்கப்பட்டது. இரண்டாவது நிதியான ரூபாய் இரண்டாயிரம் ஸ்ரீமதி எம். எஸ் அவர்களின் பெயரால் சத்குரு தியாகராஜருக்கு அன்றாட பூஜை நடைபெறுவதற்காக மயிலை தியாகராஜ வித்வத் சமாஜத்துக்கு வழங்கப்பட்டது.



கரமானவை. இது ஜனநாயகத்துக்கு நிச்சயம் பிற்போக்கான நடவடிக்கை. விடுதலை பெற்றுத் தந்தது என்பதற்காகக் காங்கிரஸிடம் அபிமானம் வைத்தவர்களும், ஜனநாயகத்தை நம்புகிறவர்களும் இக் குற்றங்களுக்குக் காரணமாக மாட்டார்கள். காமராஜ் தோற்றுவிடக் கூடும் என்று அஞ்சியவர்கள், நல்லறிவை இழந்து செய்த செயலே இது.

திரு காமராஜுக்கே வாக்குத் தரவேண்டும் என்று திரு சி. என். அண்ணாதுரை கேட்டுக் கொள்வதாக ஒரு பொய்யறிக்கை தேர்தலுக்கு முன்பு பரப்பப்பட்டிருக்கிறது. அதே போல், ஒரு காங்கிரஸ் சார்புள்ள தமிழ் பத்திரிகையில் நான் திரு காமராஜரே வெற்றிபெறுவார் என்று முன்கூட்டியே கூறியதாக ஒரு பொய்ச் செய்தி பிரசுரமாயிற்று.

காங்கிரஸை எதிர்க்கும் வேட்பாளரின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்க வேண்டும் என்பதற்காகவே காங்கிரஸ் அபிமானிகள் இதுபோல் பொய் அறிக்கை விடுவது அக் கட்சிக்குப் பெருமை தராது. இடைத் தேர்தல் விளைவு எதுவாயினும் வன்முறையும் பொய்யும் ஜனநாயகத்தைப் பின்னுக்குத் தள்ளுவதாகும்.

ஏற்கெனவே காங்கிரஸ் வசமிருந்த தொகுதியைத் தமதாக நீடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் முன்னாள் காங்கிரஸ் அக்கிராசனரின் வெற்றி காங்கிரஸ் வட்டாரத்துக்கே அதிசய மகிழ்ச்சியாயுள்ளது. லண்டனிலிருந்து ஸ்ரீமதி இந்திரா காந்தி 'எல்லை மீறி மகிழ்வதாக'க் கேபிள் செய்கிறார். காங்கிரஸின் இன்றைய பலவீன நிலைக்கு இது அடையாளம்.



எஸ். ராமசாமி நாயுடு

***

நாகர்கோயில் இடைத் தேர்தல் அநுபவத்திலிருந்து, வாக்காளர்களைச் சட்ட விரோதமாக வண்டிகளில் ஏற்றிச் செல்வதால் ஏற்படும் பிரச்னைகளுக்கு எவ்வளவு பெரிய கூலி தரவேண்டியுள்ளது என்பது வெளிப்பட்டிருக்கிறது. கட்சிக்காரர்கள் வாக்காளர்களுக்கு வண்டியமர்த்தி அழைத்துச் செல்வதால் அச்சுறுத்தலுக்கும் வன்செயலுக்கும் இடம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கப் போலீஸின் நடவடிக்கை தேவைப்படுகிறது. இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க ஒரே வழி, சர்க்காரின் சார்பில் வண்டிகளில் (Van) வாக்குச் சாவடிகளை அமைத்து, அந்த வண்டிகள் வீடு வீடாகச் சென்று வாக்காளரிடமிருந்து வாக்குப் பெறுவதேயாகும்.

சர்க்காரே வாக்காளருக்கு அவர்களது வாக்குப் பட்டியல் இலக்கத்தையும், மற்ற விவரங்களையும் கொண்ட சீட்டுக்கள் வழங்க வேண்டும். தற்போது இவ்வேலையை வேட்பாளர்களுக்குத் தந்திருப்பது சரியல்ல.

***

திரு எஸ். ராமசாமி நாயுடுவின் மரணத்தில் தமிழக சுதந்திரக் கட்சி ஒரு பெரும் சக்தி வாய்ந்த துணையை இழந்து விட்டது. அவர் தமிழக சட்ட சபையில் சாத்தூர் தொகுதி அங்கத்தினராக இருந்தார். தமிழக சுதந்திரக் கட்சியின் உபதலைவராக இருந்த திரு ராமசாமி நாயுடுவின் மரணம் கட்சிக்கு மகத்தான துர்ப்பாக்கியம்.



டாக்டர் சம்பூர்ணானந்த் மறைவு

உத்தரப் பிரதேசத்தின் பெருந் தலைவர் டாக்டர் சம்பூர்ணானந்த் முதிர்ந்த பிராயத்தில் காலமானார். அவர் பாரதப் பண்பை அரசியல் துறையில் வற்புறுத்தி வந்த பெரியார்களில் ஒருவர். உத்தரப் பிரதேசத்தில் முதன் மந்திரியாகவும் ராஜஸ்தானத்தின் கவர்னராகவும் காங்கிரஸ் தலைவராகவும் பதவிகள் வகித்து அரும் பணியாற்றியிருக்கிறார். எனினும் அவரை முக்கியமாக மதிப்பது அவர் பெற்றிருந்த அறிவுச் செல்வத்துக்காகவும், பாரதப் பண்பை ஒட்டி அவர் இறுதிவரை வாழ்க்கை நடத்தி வந்திருப்பதற்காகவும்தான். அவர் நல்ல சம்ஸ்கிருதப் பண்டிதர். ஹிந்தியைத் தாய் மொழியாகப் பெற்றிருந்ததால், அதிலும் அவர் புலமை பெற்றிருந்தார். உருது, பார்ஸி, பிரஞ்சு முதலிய மொழிகளும் அறிந்திருந்தார். சரித்திரம், தத்துவம், சமுதாய வளர்ச்சி, வான சாஸ்திரம், சோதிடம், கணிதம் ஆகிய பல துறைகளிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. கடைசி நாட்களில் வேதத்துக்கு உரை எழுதிக் கொண்டிருந்தார். இவர் மறைவைப் பற்றி ராஜாஜி குறிப்பிடுகையில் ''ஒரு தர்மாத்மா மறைந்து விட்டார். நமது தார்மிகச் செல்வத்துக்கு விளைந்த நஷ்டம்'' என்கிறார். இதிலிருந்தே நாட்டுக்கு விளைந்த நஷ்டம் எத்தகையது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

கண் மருத்துவர் மகாநாடு

பம்பாய் மாநகரில் சென்ற 9ந் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடைபெற்ற அகில இந்திய கண் டாக்டர்களின் இருபத்து ஒன்பதாவது மகாநாட்டுக்குத் தலைமைதாங்கி மகாநாட்டை நடத்தி வைக்கும் கௌரவம் சென்னையைச் சேர்ந்த கண் மருத்துவர் லெப்டினண்ட் கர்னல் வி. ரங்காச்சாரிக்கு அளிக்கப்பட்டது குறித்துத் தமிழகம் பெருமை கொள்ளுகிறது.

கண் டாக்டர்களில் பிரபலமான காலஞ் சென்ற ஈ. வி. சீனிவாசாச்சாரியாரின் சிஷ்யர்களில் டாக்டர் ரங்காச்சாரி முக்கிய மாணவர். "சிஷ்யர்" என்று சொல்வது எவ்வளவு பொருத்தம் என்பதை அவருடைய தலைமை உரையிலிருந்து நாம் அறிகிறோம். கண் டாக்டர்களுக்குள்ள போதனைமுறையைப் பற்றி அழகாகச் சுவைபட விவரித்துள்ளார்.

குருகுல வாசம் செய்து வித்தையைக் கற்க வேண்டும் என்பது சங்கீதக் கலைக்கு மட்டும் தான் பிரத்யேகமாக உரியது என்று எண்ணி விட வேண்டாம். மருத்துவத் துறையில், குறிப்பாகக் கண் மருத்துவர்களுக்கு இந்த முறை ஒன்றுதான் சமீப ஆண்டுகள் வரையில் நடைமுறையிலிருந்தது. பண்டைய வைத்திய நூல்களில் கண் சிகித்சையைப் பற்றிப் பிரத்தியேகமாகக் கூறுமிடத்து குருகுலவாசம் செய்வது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதே முறையைப் பெரும்பாலும் பின்பற்றியே இக்காலத்திலும்கூட போதனை முறைகள் உள்ளனவென்கிறார் டாக்டர் ரங்காச்சாரி. தாமே ஏழு ஆண்டுகள் இப்படித்தான் டாக்டர் ஈ. வி. சீனிவாசன் அவர்களிடம் குருகுலவாசம் செய்தாராம்.


இரண்டாவது யுத்தத்தின்போது ராணுவ மருத்துவத்துறையில் சேர்ந்து ஸூடான், எரிட்ரியா, போர்முனைகளில் மருத்துவராகப் பணியாற்றியவர் டாக்டர் ரங்காச்சாரி. காயமடைந்து யுத்தக் கைதியாகக்கூடச் சிறிது காலம் பிரஞ்சு நாட்டு (அந்தக் காலத்திய) விச்சி சர்க்காரால் காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் புகழ்பெற்ற போர் முனைகளில் சிறப்புப் பணியாற்றி, "மிலிடரி க்ராஸ்" பதக்கமும் நற்சான்றுகளும் பெற்றுத் திரும்பினார். சென்னையிலுள்ள கண் டாக்டர்களின் சங்கத்தைத் தொடங்கி வைத்தவர்களில் டாக்டர் ரங்காச்சாரி முக்கியமானவர். 1935 லும் 1949 லும் இரண்டு மகாநாடுகள் நடத்தி 1965ம் ஆண்டில் அகில இந்திய கண் டாக்டர்கள் சங்கத்தின் வெள்ளி விழாவையும் சென்னையில் வெற்றிகரமாக நடத்தி அனுபவம் பெற்றவர்.



டாக்டர் வி. ரங்காச்சாரி

இத்தகைய அனுபவசாலி தலைமை தாங்கும் மகாநாட்டில் எந்தப் பிரச்னையைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டுப் பேசுவார் என்று சுலபமாகவே யூகிக்கலாம். இக்காலத்திய இளம் கண் டாக்டர்களுக்கு அளிக்கப்படும் போதனை முறை, பயிற்சி வாய்ப்புகள், திறமையை உயர்த்திக் கொள்வதற்கான வழி வகைகள், சேவா உணர்ச்சி — இவைகளே அவருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன. இப்போதுள்ள எம். பி. பி.எஸ். பட்டப் பரீட்சையில் "கண் மருத்துவ"த்திற்கெனத் தனிப் பிரிவு ஒதுக்கப்படவில்லை. தனியான ஒரு பாட முறையும் இல்லை. இதைச் செய்ய வேண்டும் என்று டாக்டர் ரங்காச்சாரி வற்புறுத்தினார். பொதுவாக "சீனியர்"கள் தங்களை ஒரு தனி இனமாகவே கருதித் தொழில் நடத்தி வருவது துரதிருஷ்டவசமானது, விரும்பத் தகாதது என்று மிக நாசூக்காகக் கண்டித்து, ஜூனியர்களுடன் ஒத்துழைத்து உதவும் மனப்பான்மை சீனியர்களிடம் வளரவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

நம் நாட்டில் எத்துறையிலும் திறமைக் குறைவு இல்லை என்பது நாமறிந்த விஷயம். இத்திறமை உயர்வதற்கு, ஆதரவு, வசதிகள், ஆராய்ச்சிகள் நடத்துவதற்குப் பூரண சுதந்திரம் போன்ற சலுகைகளும் சூழ்நிலைகளும் தேவை. இவை போதிய அளவு கிடைக்குமேயானால் ஆராய்ச்சிகள் பெருகுவதல்லாமல் அவற்றின் விளைவான நற்பயன்கள் நாட்டு மக்களுக்குப் பயன்பட ஏதுவாகும். இந்த உண்மை கண் மருத்துவத் துறைக்கும் முற்றிலும் பொருந்தும். முந்திய மகாநாடுகளில் கண் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றித்தான் விசேஷமாகப் பேசுவார்கள். போதனை முறைகளைப் பற்றியோ, பயிற்சி வசதி, வாய்ப்புப் பற்றியோ, ஆசிரிய-மாணவ உறவு பற்றியோ அதிகமாகப் பிரஸ்தாபிப்பது இல்லை. இவ்வகையில் டாக்டர் வி. ரங்காச்சாரி புதியதொரு துறையில் மகாநாட்டின் கவனத்தைத் திருப்பியது பாராட்டுதற்குரியது. தேச முழுதிலும் பரவலாகக் கண் நோயுற்றவர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்குத் தக்க வைத்திய வசதி கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டினார் அவர்.



கம்ப்யூட்டர் அருகே ஸ்ரீமதி இந்திரா காந்தி. உடன் திரு மேனனும், பேராசிரியர் நரசிம்மனும்.

விண்வெளி முதல் புதை பொருள் வரை!

டாக்டர் ரா. விஜயராகவன்

(பார் புகழும் பாபாவைப் பற்றி டிசம்பர் 29ந் தேதி கல்கியில் எழுதிய இக்கட்டுரை ஆசிரியர் இந்த இதழில் பாபாவினால் உருவாக்கப்பட்ட டாட்டா ஆராய்ச்சிக் கழகம் விஞ்ஞான உலகுக்கு ஆற்றி புள்ள பணிகளை விவரிக்கிறார். இக்கழகத்தின் இன்றையத் தலைவர் பேராசிரியர் மேனன் அவர்கள். -- ஆ-ர்.)

"என்னிடம் இரண்டு கைக் கடிகாரங்கள் இருக்கின்றன. ஒன்று ஓடவேயில்லை. மற்றொன்று ஒரு நாளைக்கு ஐந்து நிமிஷம் வீதம் வேகமாகச் செல்கிறது. இரண்டில் எது தேவலை?"

இப்படி ஒரு கேள்வி உங்களிடம் கேட்கப் பட்டால் நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்? 'ஓடாத கடிகாரத்தை விட வேகமாகச் செல்கிற கடிகாரமே நல்லது' என்பீர்கள்.

ஆனால் இதே கேள்வியை ஒரு கம்ப்யூட்டரிடம் கேட்டால் அது என்ன சொல்லும் தெரியுமா? "ஓடாத கடிகாரமே மேல்" என்று கூறும். அதற்குக் காரணமும் கொடுக்கும்: "ஓடாத கடிகாரம் இருபத்திநாலு மணி நேரத்தில் இரண்டு தடவை சரியான நேரத்தைக் காட்டும். ஆனால் வேகமாக ஓடும் கடிகாரம் சரியான நேரத்தை எத்தனையோ பல மாதங்களுக்கு ஒரு முறைதான் காண்பிக்கும்!"

கம்ப்யூட்டர்கள் பற்றி இப்படிப் பல வேடிக்கைக் கதைகள் இருந்த போதிலும் இன்றைய விண்வெளி யுகத்தில் மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ள விஞ்ஞானத்துக்கு கம்ப்யூட்டர்கள் அளப்பரிய சேவை புரிந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

கம்ப்யூட்டர் என்றால் என்ன? இது ஒரு மின் கணக்கன். ஒரு செகண்டில் சுமார் ஆறு லட்சம் காரியங்கள் செய்யும். ஒரு செகண்டில் வரிக்கு 136 எழுத்துக்கள் கொண்ட ஆயிரம் வரிகளை அடித்துத் தள்ளும். இது போன்ற காரியங்களை மனிதன் செய்வதென்றால் எவ்வளவு நாளாகும் என நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். நம் வீட்டு ரேடியோவில் சுமார் எட்டு டிரான்ஸிஸ்டர் இருந்தால், கம்ப்யூட்டரில் பல லட்சங்கள் உள்ளன. இவை கணக்குப் பகுதி, நினைவுப் பகுதி, கண்ட்ரோல் பகுதி, வெளியிடும் பகுதி ஆகியவற்றில் வலை போல் பின்னப்பட்டு இருக்கின்றன.


எந்தப் பிரச்னையையும் கணித முறைப்படி பிரித்து, கோவைப்படுத்தி, சங்கேத மொழியில் கார்டுகளில் துளையிட்டு கம்ப்யூட்டரிடம் விட்டுவிட்டால் பிறகு நாம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் கணித ரீதியான சரியான பதில் கிடைக்கும்.

சுலபமாக விளங்குவதற்காக வாத்திய இசையை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு வாத்தியத்துக்கும் ஓர் அடிப்படை அதிர்வு எண் (Fundamental Frequency) உண்டு.... ஜலதரங்கத்தின் அடிப்படை சுருதி 98 ஸைக்கிள். அதுமட்டுமல்லாமல், 180, 300, 400, 650, 900, 1100, 1300 அதிர்வு எண்களும் அதற்கு உண்டு. மற்றவை வடிகட்டப்படும். நமக்குக் கேட்காது. இதே போல் வயலின், வீணைக்கும் தனித் தனி நிறமாலை

(Spectrum) உண்டு. இனி ஒலி எழுப்பும் நேரம் அரைக் கால் செகண்ட். ஒரே ஸ்வரத்தில் நிலையாக நிற்கும் நேரம் கால் செகண்டு. ஒலி அலை அழியும்நேரம் அரைக் கால் செகண்டு. இந்தச் செய்திகளுடன் பாடல்களுக் கான ஸ்வர வரிசைகளையும் கம்ப்யூட்டருக்குத் தந்தால், இதே ஸ்வர வரிசைகளில் அதன் ராகம் ஜலதரங்கத்தில் இசைப்பது போல வரும். ஒருசில மாற்றங்களுடன் 'கமகம்', 'பிர்க்கா'வையும் பெறலாம். எனவே எல்லாப் புள்ளி விவரங்களை மட்டும் தந்து விட்டால் கம்ப்யூட்டர் பாடவே ஆரம்பித்துவிடும்!


மின் அலைகள் பிறக்கின்றன. இவை ஒலிபெருக்கி மூலம் காற்றில் வரும் ஒலி அலைகளாக வருகின்றன. இந்த இசை சுருதி மாறாது. வயோதிகத்தால் இனிமை வாடாது. அபஸ்வரம் பிறக்காது. புது வாத்தியங் களைச் சிருஷ்டிப்பதுபோல் நாம் பார்த்திராத இசைக் கருவியிலிருந்தும் இசை பெறலாம்!

இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கக் கம்ப்யூட்டர் வந்ததாகப் பலர் கூறுகின்றனர். ஆட் குறைப்புக்கு இதை உபயோகப்படுத்தாமல், ஆளு வோரின் தீர்மானத்தை உருவாக்க (Decision automation)



ராட்சஸ பலூன். ^


இதைப் பயன்படுத்தலாம். இதையே மேல் நாட்டில் 'செயல் முறை ஆராய்ச்சி' (Operations Research) என்கின்றனர். எந்த நிறுவனமும் சிக்கனமாகவும் பய னுடனும் பல காலம் விளங்க இக்கணித முறையைப் பயன் படுத்தினால் நாடு பொருளாதா ரத்தில் வேகமாக முன்னேறும். ஆட் குறைப்புக் கோணத்தில் மட்டும் கம்ப்யூட்டரைப் பார்க் கக் கூடாது.




காக்கேட் ஜெனரேட்டர். சக்தி வாய்ந்த துகள்களை அனுப்பி அணுக் கருவில் மாறுதல் செய்யும். >

நம் வீட்டு ரேடியோ எவ்வளவு இடத்தை அடைத்துக் கொள் கிறது என்பது உங்களுக்குத் தெரி யும். டிரான்ஸிஸ்டர் ரேடியோ சிறிது அளவில் குறைவு. இதையே நம் கண்ணால் பார்க்க முடியாத அளவுக்குக் குறைக்க முடியுமா? ஒருமிக்கப்பட்ட ஸர்க்யூட்களால் (Integrated Circuits) முடியும். ஒரு முழு ஸர்க்யூட், ரேடியோவின் எல்லாப் பணியையும் செய்வ தோடு, ஸெண்டிமீட்டரில் பத்தில் ஒரு பாகமே இடம் பெறும். மைக் ராஸ்கோப் மூலம்தான் 'இருக் கிறதா' என்றே பார்க்க முடியும். இப்படிப்பட்ட ஸர்க்யூட்டுகளால் நிர்மாணிக்கப்பட்ட கம்ப்யூட்டர், விண்வெளி ஆராய்ச்சியில் பெரி தும் பயன்படுகிறது. ராக்கெட்டில் உள்ள மின் சாதனங்கள் எவ் வளவு இலேசாக இருக்க வேண் டும் தெரியுமா? டாட்டா ஆராய்ச் சிக் கழகம் இந்தக் கம்ப்யூட்டர் துறையில் பெரும் வெற்றி கண் டுள்ளது. சரி, இனி சுத்த பௌதி கத் துறையில் டாட்டா ஆராய்ச் சிக் கழகத்தில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இவை கோட்பாட்டு பௌதிகம், பரிட் சார்த்த பௌதிகம் என இரு வகைப்படும்.

நாம் பார்க்கும் திட, திரவ, வாயுப் பொருள்களை மூலக் கூற் றின் (Molecules) சேர்க்கை என லாம். சில அல்லது பல அணுக்கள் (Atoms) சேர்ந்து ஒரு மூலக் கூறு. அணுக்களில் எலக்ட்ரான்களும் (Electrons) நடு மையத்தில் (லட் சத்தில் ஒரு பாகம்) அணுக் கரு வும் (Nucleus) இருக்கும். இக் கருவில் ப்ரோடான்களும் (Protons) நியூட்ரான்களும் (Neutrons) உள் ளன. சுமார் முப்பதாண்டுகள்





சென்னை மவுண்ட்ரோட்டில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் அமெரிக்க கான்ஸல் ஜெனரல் கட்டடம் மூன்று தளக் கட்டடமாக எழும்பியுள்ளது. இந்த வண்ண மாளிகையில், நூலகம், அமெரிக்கத் தகவல் நிலையம், இந்தியாவிலுள்ள அமெரிக்கக் கல்விக் கழகம், அமெரிக்க கான்ஸல் ஜெனரல் அலுவலகங்கள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. சென்னையின் ஒரு மையமான பகுதியில் அழகுற எழும்பியுள்ளது. இந்தப் புதிய கட்டடம். திறப்பு விழாவில் அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்ஸூம், சென்னை கவர்னர் உஜ்ஜல் சிங்கும், கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியனும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். புதிய மூன்று தளக் கட்டடத்தில் அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்ஸோடு சென்னை கவர்னரும் கல்வி அமைச்சரும் உரையாடி மகிழ்வதைப் படத்தில் காணலாம். ●

வரை இவையே அடிப்படைத் துகள்கள் (Fundamental Particles) எனப்பட்டன. சக்தி வாய்ந்த மெஷின்கள் மூலம் ஆராயத் தொடங்கிய பின் இவற்றின் எண்ணிக்கை பெருகிவிட்டது. இவற்றின் குண விசேஷங்களையும், இத்துகள்களை சார்ந்த புலங்களையும் (Fields) ஆராய்வதே கோட்பாட்டு பௌதிகத்தின் சிறப்பு மிக்க வேலையாகும்.

நம்மிடையே காணும் பொருள்களைச் சுமார் 92 மூலகங்களாகப் பிரிக்கலாம். உதாரணம்: கார்பன், தாமிரம், வெள்ளி, தங்கம், யுரேனியம். இந்த மூலகங்களின் கருவை ஓரளவுக்கு ஒரு நியூட்ரானையோ, புரோடானையோ ஏற்கும்படி செய்ய முடியும். பல சமயங்களில் இப்படி மாற்றப்பட்ட கரு, கதிரியக்கத்தின் மூலம் (Radio Activity) பழைய நிலைக்கோ, புது நிலைக்கோ சென்றுவிடலாம். கதிரியக்கத்தின் காலவரை சக்தி நிலைகள் இவற்றையும், கருவின் அகச்சுற்றையும் (Spin) கண்டு பிடிப்பதே கருப் பௌதிகம் (Nuclear Physics) மேற்கொண்டுள்ள பணியாகும். கருக் கிரியைகளும் (Nuclear reactions) இவ்வாறே ஆராயப்படுகின்றன. இதற்கு உதவும் ஒரு மில்லியன் வோல்ட் காஸ்கேட் (Cascade) ஜெனரேட்டரை நீங்கள் படத்தில் காணலாம்.

திடநிலை பௌதிகம் (Solid state physics) பல பிரிவுகள் கொண்டது. ஜலத்தைக் குளிர வைத்தால் ஐஸ் ஆகிறது. காற்றை மிகக் குளிர வைத்தால் திரவமாகிவிடும். இதே போல் ஹீலியம் வாயு நான்கு டிகிரி கெல்வினில் (அதாவது ஐஸைக்காட்டிலும் கீழ் 269 டிகிரி குறைவு) திரவமாக மாறும். இத்திரவம் பெரும்பாலான பொருள்களைத் திட நிலைக்குக் கொண்டு வந்து, அவற்றின் காந்த நிலை, ஸ்படிக நிலை (Crystal Structure) முதலியவற்றில் அதிசயிக்கத் தக்க மாறுதல்களை உண்டுபண்ணும். இவற்றை ஆராயப் பலவிதமான நிறமாலை மானிகள் (Spectrometres) இருக்கின்றன. எக்ஸ்ரே சாதனமும் உண்டு. மூலக் கூறுகளை ஆராய்வதே ரஸாயன பௌதிகப் பிரிவின் (Chemical Physics) நோக்கமாகும். மூலக்கூறு உயிரின இயல் (Molecular Biology) சமீபத்தில்தான் இங்கு தோன்றியது. ஸ்ரீ கொரானா இப்பிரிவில் ஆராய்ந்தே நோபல் பரிசு பெற்றார். சந்ததிகளின் குண இசயங்களை ரஸாயனப் பொருள்களின் சேர்க்கை, பிரிவு இவற்றின் மூலம் சொல்ல முடியுமா என்பதுதான் பிரச்னை. இந்தத் துறைக்குக் கணிதம், பௌதிகம், ரஸாயனம் தெரிந்தவர்கள் தேவை. நல்ல எதிர்காலம் இருக்கிறது.

இவற்றை விட்டு அதிசக்தி பௌதிகத்துக்கு (High Energy physics) வருவோம். பாபாவின் ஆராய்ச்சி இத்துறையில்தான் இருந்தது. காஸ்மிக் கிரணங்களை ஆராய இந்தியா பல வகையில் ஏற்றது. ஒன்றுக்கு அப்புறம் பதினேழு சைபர் எலக்ட்ரான் வோல்ட் சக்தியுள்ள துகள்கள் நம் பூமிமீது பாய்கின்றன. இதை போட்டோகிராபிக் எமல்ஷன் மூலமாயும், மேகப் பெட்டி (Cloud Chamber) மூலமாயும் பிரத்தியேக "எண்ணி"

கள் (Counters) மூலமாயும் ஆராய்கின்றனர். இந்த எலக்ட்ரானிக் சாதனங்களை ஒரு லட்சம் அடிக்கு மேலாக எடுத்துச் செல்லும் ராட்சஸப் பலூனும் இங்கேயே தயாரிக்கப்படுகிறது. (படம்) கோலாரிலும் உதகையிலும் தனி ஆராய்ச்சிச் சாலைகள் அமைத்துள்ளனர். சக்தியுள்ள துகள்கள் அணுக் கருவை எப்படிச் சிதறடிக்கின்றன? வெளிவரும் அடிப்படைத் துகள்கள் யாது? அவற்றுக்குள்ள தொடர்பு என்ன? என்றெல்லாம் ஆராய்கின்றனர். பொருள் சக்தியாகவும், சக்தி பொருளாகவும் மாறும் என்ற ஐன்ஸ்டைனின் கோட்பாட்டை இவ்வாறு பல வகையிலும் நிருபிக்கின்றனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டுரைகளை வழங்கியுள்ளனர். உதகையில் ஒரு பெரிய வானிலை ஆராய்ச்சி நிலையமும் (Radio Astronomy) அமைக்கப்பட இருக்கிறது.

பூகோள பௌதிகம் (Geo-physics) என்ற துறை காஸ்மிக் ஆராய்ச்சியின் எதிர்பாராத விளைவுகளுள் ஒன்று. காஸ்மிக் கிரணங்கள் பல கோடி வருஷங்களாகப் பூமியைத் தாக்குகின்றன. இவற்றால் பல புதிய அணுக் கருக்கள் தோன்றுகின்றன. இவற்றில் சில பல லட்சம் வருஷம் ஆயுட்காலம் உள்ளவை. ஒரு வகை கார்பன் கரு சில ஆயிரம் ஆண்டுகளே இருக்கும். ஒரு பொருளின் வெவ்வேறு வகைக் கதிரியக்கங்களைக் கொண்டு புதை பொருளின் காலத்தை மிகவும் துல்லியமாகக் கூறி விடலாம். இவ்வாறு ஹரப்பா நாகரிகத்தை அறுதியிட்டுள்ளனர். அநாதி காலத்திலிருந்து கடலின் அடிப் பாகம் எவ்வாறு மாறியுள்ளது என்றும் கூறுகின்றனர். பூமிக் கடியில் உள்ள நீர் வளத்தைக் கணக்கிடவும் உதவுகின்றனர்.

சுத்த கணித ஆராய்ச்சித் துறையைப் பற்றி நிறைய எழுதலாம். இதில் உள்ள பேராசிரியர்கள் இளைஞர்கள். இவர்களால் வெளியிடப்படும் புத்தகங்கள் வெளிநாட்டாரால் வியந்து பாராட்டப் பெற்றவை. மறைந்த மாமேதை ராமானுஜத்தின் பிரசுரிக்கப்படாத ஆராய்ச்சிகளை இக்கழக மூலம் வெளியிட்டனர். பல முறை சர்வதேச கணித மகாநாடு நடத்தி நாட்டுக்குப் பெருமை தந்துள்ளனர்.

''கழகத்திலுள்ள யாவும் நாட்டுக்கு நலன் விளைவிக்க'' என்ற கோட்பாடு உண்டு. எனவே, தேவையாயின் சர்வகலாசாலைகள் கம்ப்யூட்டர் வசதியைக் கோரிப் பெறலாம். ஆராய்ச்சியாளரை அனுப்பி மேலும் பயிற்சி பெறச் செய்யலாம். இங்குள்ள ஆராய்ச்சியாளரைச் சர்வ கலாசாலைகளுக்குப் பேருரை நிகழ்த்த நிரந்தரமாகவும் தாற்காலிகமாகவும் அனுப்புகிறோம். பம்பாய் சர்வகலாசாலைப் பௌதிகப் பிரிவு மாணவர்களுக்கு இங்குள்ள ஆராய்ச்சியாளர்கள் இலவசமாகப் பேருரை நிகழ்த்துகிறார்கள். இங்குள்ள வாய்ப்புக்களைப் பலரும் காண வரும்படி பலவகையில் அழைக்கிறோம். கழகத்தில் இளமையில் பணியாற்றிய பேராசிரியர்கள் சுதர்சன், ஸிங்வி, ஹரிஷ் சந்திரா, ராகவன், நரசிம்மன், கே. சந்திரசேகர் முதலியோர் மேனாட்டுப் பலகலைக் கழகங்களை அலங்கரிக்கிறார்கள்.

இங்குள்ள புற வசதிகளைப் பார்ப்போர் வியப்பில் ஆழ்ந்து போவார்கள். 'இவையெல்லாம் தேவையா?' என்றுகூடக் கேட்பார்கள். பாபாவின் நோக்கமே வேறு. ''குறைவில்லாத சூழ்நிலையில் சாதாரண விஞ்ஞானியும் தலைசிறந்த பணியாற்றக் கூடும்'' என்று ஒரு நோபல் பரிசு பெற்ற அறிஞர் கூறினார். இதுதான் பாபாவின் தத்துவமும்கூட.

இந்த இருபது ஆண்டுகளில் டாடா ஆராய்ச்சிக் கழகம் பெரிதும் வளர்ந்து வெளிநாட்டாரால் மதிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பெறத் தமிழக இளைஞர்களைத் தயார் செய்து கொள்ளும்படி அழைக்கிறேன். இங்குள்ள புதிய ஆராய்ச்சியாளர்களை ஏதேனும் ஒரு வகையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு தமிழக சர்வகலாசாலை, கல்லூரித் தலைவர்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

கலைஞர் எஸ். பாலசந்தர் தம் வீணை வாத்தியத்தின் வாயிலாக வெள்ளிவிழாக் காலம் கர்நாடக இசைக்குச் செய்துவரும் சேவையைச் சங்கீத ரசிகர்களும், சங்கீத வித்வான்களும் திரு பி. வி. ராஜமன்னார் தலைமையில் பாராட்டிக் கௌரவித்தனர். சென்னை லாயிட்ஸ் ரோட்டில் உள்ள 'ஹேமமாலினி' கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தமிழக முதல் அமைச்சர் திரு அண்ணாதுரை வீணைக் கலைஞர் திரு பாலசந்தருக்குப் பொன்னாடை போர்த்தினார். அவருக்கு 'வீணா வரப்பிரசாதி' என்ற கௌரவப் பட்டம் அன்று வழங்கப்பட்டது. ★





நிந்திக்கத் தெரியாதவர்

ஜீஜாபாய்க்கு ஒரே ஆத்திரம். எவ்வளவு புலம்பியும், தூஷித்தும் ஆத்திரம் அடங்குவதாக இல்லை.

அவளது ஆத்திரத்துக்கு இலக்கானவர் வேறு யாருமில்லை; அவளது கரம் பிடித்த கணவர் துகாராம் தான்.

'ஓடியாடி வேலை செய்யாமல் குத்துக்கல்மாதிரி உட்கார்ந்து கொண்டு பாடிப் பாடிப் பொழுதைப் போக்கியாகிறது. வீடு என்ன ஆவதாம்?' என்று புலம்பினாள் ஜீஜா.

கல்லானாலும் கணவன் என்கிற தேசத்தில் பிறந்த ஒரு பெண் தன் நாயகனிடம் பகை கொள்ளலாமா எனில், ஜீஜாபாயின் கஷ்டமே அவளது கணவர் அசல் குத்துக்கல்லாக இராததுதான். அவர் ஒரு மனிதராக இருந்தார். அவரது மனம் கல்லல்ல. மாறாக, அவரே கல்லையும் உருக்கும் விதத்தில் பண்டரிநாதனைப் பாடுவார். ஊரெல்லாம் அந்தப் பாடல்களைக் கேட்டு உருகிற்று.

ஜீஜாபாய் உருகவில்லை. எப்போது பார்த்தாலும், 'பாண்டு ரங்கா, பண்டரிநாதா' என்று பாடிக் கொண்டிருந்தால் வீட்டை எப்படி நடத்துவது? துகாராமோ ஒரு தொழிலிலும் நிலைத்து நிற்பவராக இல்லை. அவருக்குத் தொழில் பக்தியாகவே இருந்தது. வீடு வறுமையில் வாடிற்று. மற்றவர்கள் அவர் பாடு வதைக் கேட்டு 'ஆஹா' என்றனர். ஜீஜாபாயோ குழந்தைகள் வாடுவதைப் பார்த்து 'ஐயோ' என்றாள்.



பல பரம்பரையாகப் பண்டரிநாதனிடம் பக்தி பூண்ட குடும்பத்தில் வந்தவர் துகாராம். மகா ராஷ்டிரத்தில் இந்திராயணி நதிக் கரையில் தேஹு என்ற கிராமத்தில் 'வார்க்கரி' குடும்பம் பக்திக்குப் பெயர் பெற்றது. ஆஷாட மாதத்திலும் கார்த்திகை மாதத்

திலும் சுக்கில ஏகாதசிகளில் அக்குடும்பத்தினர் பண்டரிபுரத்துக்குச் செல்வார்கள். இந்த யாத்திரைக்கு 'வாரி' என்று பெயர். யாத்திரை செய்பவர்கள் 'வார்க்கரி' துகாராம் இந்த பரம்பரையில் வந்தவரே.

ஆனால் அவரது முன்னோர்கள் பக்தர்களாயிருப்பினும், குடும்ப வாழ்வை மறந்துவிடவில்லை. மளிகைத் தொழில் நடத்தி வந்தனர். துகாராமுக்கு வியாபாரம் செய்ய இயலவில்லை. துரதிருஷ்ட வசமாக கிருஹஸ்தராகி விட்டார். மக்கள் வேறு இருந்தனர் அவர் பராமரிப்பதற்கு. ஆனால் அவராலோ எத்தொழிலும் ஏற்க முடியவில்லை. 'பாடும் பணியே' அவரது பணியாயிருந்தது. பாடுகிற குத்துக்கல்லாக அவரைக் கருதி ஜீஜாபாய் அலுத்துச் சலித்துக் கொண்டாள்.

''அம்மணி! சாமியைக் கோபித்துக்கொள்ளாதீர்கள்'' என்று கூறிக் கொண்டே வீட்டின் உள்ளே வந்தார் பண்ணையார். ''சாமி ஓடியாடி வேலை செய்யாமல் பாடிப் பொழுதைப் போக்குனர் என்று நீங்கள் குறைப்பட்டுக் கொண்டது காதில் விழுந்தது. அவர் ஓடியாட வேண்டாம். என் நிலத்தில் பரண் மேட்டில் இருந்த இடத்திலேயே உட்கார்ந்து பாடிக் கொண்டிருக்கட்டும். அதோடு, அவ்வப்போது கையிலுள்ள தடியை ஆட்டி வயலில் வருகிற பட்சிகளை விரட்டினுல் போதும். உங்கள் குடும்பத்தினரின் பசி தீர நெல் தந்துவிடுகிறேன்'' என்றார் பண்ணையார்.

ஜீஜாபாய்க்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

அவளுடைய புலம்பலைக் கவனியாது கண்ணனிடம் வேறு எதற்காகவோ புலம்பிக் கொண்டிருந்த கணவரிடம் சென்றாள்.

''எழும்புங்கள். வீடு தேடி வந்திருக்கிறார் பண்ணையார்! வீடு தேடி வந்திருக்கிறது வேலை! உட்கார்ந்த இடத்திலிருந்து பாடிக் கொண்டே வயலைக் காவல் காத்தால் போதுமாம். ஏதோ நம் வயிற்றுப்பாட்டுக்குப் பார்த்துக் கொள்கிறாராம்! புறப்படுங்கள்'' என்றாள்.

''பாண்டுரங்க விட்டலா! உன் சித்தப்படியே நடக்கட்டும்'' என்று கூறியபடி எழுந்திருந்தார் துகாராம்.

தெள்ளிய நீல வானத்தின் கீழ் விஸ்தாரமான வயலைக் காணக் காண துகாராமின் நெஞ்சில் தெய்விகம் நிரம்பியது.

வயலில் பச்சை இல்லை. பயிர் முதிர்ந்து பொன்னிறமாகி யிருந்ததும் ஓர் அழகாகவே இருந்தது. பச்சை இல்லாக் குறையைப் போக்குவது போல் கூட்டம் கூட்டமாகக் கிளிகள் பறந்து வந்தன.

அவற்றின்பின் காக்கை, குருவி, காடை, கௌதாரி எல்லாம் வந்தன.

காக்கை, குருவியையும் தன் சாதியாக — உலக முழுவதையும் வாசுதேவனின் குடும்பமாகப் பார்க்கும் துகாராம், பரண்மீதிருந்து இக்காட்சியைக் கண்டு சொக்கிப்போனார்.

பட்சிகள் பயிரை ஆசை ஆசையாகக் கொத்தி உண்டன.

துகாராம் திவ்விய பாடல்களைப் பாடிய படியே, அவை விருந்துண்ணும் அழகை ரசித்துக் கொண்டிருந்தார்.

அந்த வயல் பண்ணையாருடையதாக அவருக்குத் தோன்றவில்லை. கிருஷ்ணனின் நிலமாகவே தெரிந்தது. 'கிருஷ்' என்றாலே உழுவது என்று பொருள். நிலத்துக்கு நலம் செய்பவனே கிருஷ்ணன். பூமிதேவியின் மணாளன் அல்லவா?

கிருஷ்ணனின் நிலத்தில் விளைந்த தானிய மணிகளைக் கிருஷ்ணனின் குழந்தைகளான பட்சிகள் தமது உருண்டை வயிறு நிரம்ப, அழகிய அலகால் குதப்பித் தின்னுகின்றன. அவற்றை எப்படி விரட்டுவது?

வயலில் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த துகாராம், பரணிலிருந்து இறங்கி, அப்பட்சிகள் உண்பது போதாது என்று, தாமே வேறு முற்றிய கதிர்களிலிருந்து மணிகளை உருவி அவற்றுக்கு வீசினார் — கண்ணனின் மணிப் பெயர்களைப் பாடியபடியே.

பட்சிகளுக்கு வயிறு நிரம்பியது.

துகாராம் பரணில் வந்து அமர்ந்தார்.

பட்சிகளும் கூட்டம் கூட்டமாக அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டன.

அவற்றோடு சேர்ந்து பஜனை செய்யலானார் அவர்.

அவர் முதலில் பாடுவார். பிறகு பட்சிகள் அதையே திரும்பப் பாடும்.

கதிர்கள் பாடின; கேணிகள் பாடின; மேகங்கள் பாடின.

மனிதர்களுக்கு மட்டும் இப்பாட்டின்பம் கிட்டவில்லை. பண்ணையாரின் ஆட்கள் வயலுக்கு வந்தனர். பட்சி மந்தைக்கிடையில் துகாராம் பஜனை புரிவதைப் பார்த்தனர். அந்த ஆச்சரியத்தில் சொக்கு முன்பே வயலையும் பார்த்தனர்.

'ஹரி ஹரி' என்று பரணில் பஜனை நடந்தது. வயலிலோ தானியம் அவ்வளவும் 'அரோகரா'வாகியிருந்தது.

அதைக் கண்ட பின் பண்ணையாட்களால் துகாராமின் பண் இன்பத்தை ரசிக்க முடியுமா? பண்ணையாரிடம் புகார் செய்தனர்.

பண்ணையாருக்கும் பொருள் நஷ்டம் என்றவுடன் மரியாதை மறைந்தது. ஆத்திரத்துடன் வயலுக்கு வந்தார். ஆத்திரம் வந்தவுடன் பட்சிகள் பறந்தோடி விட்டன.

''சாமீ, இப்படிச் செய்து விட்டீர்களே! உங்கள் குடும்பத்தின் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டேன். என் குடும்பத்தின் வயிற்றிலேயே அடித்து விட்டீர்களே!'' என்றார்.

துகாராமிடம் என்றுமே அன்பிராத பண்ணையாரின் காரியஸ்தன், ''இந்த ஆள் செய்த அநியாயத்துக்குக் கட்டி வைத்து அடிக்க வேண்டும்'' என்றான்.

''அடித்தாலும் சரியே! நெல் கதிர், தான் வாடி வாடி மற்றவர்களுக்கு நெல்லைத் தருகிறது. அதைக் களத்தில் அடித்தாலும் சிரித்துக்கொண்டு தானியத்தை உதிர்க்கிறது. என்னை அடித்தால் பிரயோசனமற்ற கண்ணீர் தான் சிந்துவேன்'' என்றார் துகாராம்.

அவரை அடிக்கவில்லை பண்ணையார்.

எனினும் துகாராம், குற்றவாளியாக நின்றார். ''அறுவடை நடக்கட்டும். வழக்கத்தை விட எவ்வளவு குறைந்திருந்தாலும் அதற்கு நான் எப்படியாவது ஈடுகட்டி விடுகிறேன்'' என்றார்.

சொன்னாரே ஒழிய, எப்படி ஈடுகட்டுவது?



மகாத்மாவின் மணிமொழி

இன்னமும் என் முன்னே கடக்கக் கடினமான பாதை கிடப்பதாகவே கருதுகிறேன். எனவே நான் என்னை ஒன்றுமே இல்லாதவனாக, வெறும் சைபராக, ஆக்கிக் கொள்ள வேண்டும். மனிதன் தானாகவே தன்னை மிக மிக இழிய ஜீவராசிகளுடன் ஒன்றாக இசைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தாலன்றி மனிதனுக்கு விமோசனம் கிடையாது.

'விட்டலா! நீ என்னைக் கைவிட்டதில்லை' என்றே சிரித்துக் கொண்டு கூறினார்.

விஷயம் கேள்விப்பட்டு ஜீஜாபாயும் அங்கு வந்து சேர்ந்தாள்.

கணவனை நோக்கிக் குமுறினாள். "இத்தனை நாட்களாக உங்கள் குடும்ப தர்மத்துக்கு பக்தி இடையூறாக நின்றது. எங்களையெல்லாம் வயிறு காய வைத்தீர். இன்று அந்தப் பக்தி அதைவிடக் கொடுமை செய்துவிட்டது. கர்மத்தை ஒழுங்காகச் செய்வதே தர்மம், அதுவே பக்தி என்பதை மறந்தீர்கள். பண்ணையாரின் விளைச்சலைப் பாழாக விட்டீர்கள். இத்தனைக்கும் காரணமான விட்டலை இனியாவது விடுவீர்களா? வந்தனை செய்த வாயால் இன்றாவது அந்தப் பழிகாரனை வாயார நிந்தனை செய்வீர்களா?" என்றாள்.

துகாராம் அப்போதும் சிரித்தார். "எவன் பண்ணையாருக்கு நிலம் தந்தானோ, எவன் நிலத்தில் பயிராக விளைந்தானோ அவனே விளைச்சலை எடுத்துக் கொண்டான். 'கர்மத்தை ஒழுங்காகச் செய்வதே தர்மம், அதுவே பக்தி' என்று உன் மூலம் பேசுவதும் அவன்தான். நான் செய்த தவறும் அவன்தான். அதற்கு நான் அநுபவிக்கப் போகும் தண்டனையும் அவன்தான். அவனை நான் விடுவதாவது, பிடிப்பதாவது? வந்திப்பதாவது, நிந்திப்பதாவது?" என்று கூறிவிட்டுத் தமக்குள்ளேயே முழுகிக் கொண்டார்.

அங்கே ஓர் அற்புதமான அறுவடை நடந்து கொண்டிருந்தது. ஆன்மப் பயிர் முற்றி மணி மணியாகத் தானியத்தைச் சொரிந்து கொண்டிருந்தது. இந்திரியப் பட்சிகள் அதை நெருங்கவொட்டாமல் கவண் கற்களாகப் பறந்தன கண்ணன் நாமங்கள்.

வெளியே பண்ணையிலும் அறுவடை தொடங்கிற்று. 'வெறும் வைக்கோல்தான் மிஞ்சப் போகிறது. துகாராம் எப்படி நஷ்டத்தை ஈடு செய்ய முடியப் போகிறது?' என்று எண்ணியவாறே ஆட்கள் கதிர்களை அடித்துக்கொண்டிருந்தனர்.

என்ன ஆச்சரியம்! தானியம் குவிந்து கொண்டே யிருந்தது! வழக்கத்தை விட விளைச்சல் குறையாதது மட்டுமல்ல; கூடியே இருந்தது. தமிழ்நாட்டு நந்தனுக்கு நடராஜன் விளைவித்துக் காட்டியதுபோல், நந்தநந்தனன் மராட்டிய பக்தருக்கு அருளிவிட்டான்.

"சாமீ! எப்படி இந்த அற்புதம் செய்தீர்கள்?" என்று துகாராமைப் பணிந்து கேட்டார் பண்ணையார்.

"கண்ணன் யமுனையில் கையை விட்டு அளைந்து ஒரு முறை நீர்த்துளிகளை வாரி இறைத்தால் அண்டவெளியில் ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் உருவாகும். நெல் மணியை உண்டு பண்ணுவதுதானா அவனுக்குப் பெரிது?" என்றார் துகாராம்.

"அப்படிப்பட்ட கண்ணனை நீங்கள் வசியம் செய்து கொண்டிருக்கிறீர்களே! எந்த சாதனையால் இதைச் செய்தீர்கள்? எனக்கும் சொல்லுங்கள்" என்றார் பண்ணையார்.

"சாதனையா? அற்பர்களாகிய நாம் என்ன சாதனை செய்ய முடியும்? எனக்கு ஒரு சாதனையும் தெரியாது. யாரையும் எப்போதும் நான் நிந்திப்பதில்லை. என்னைப் படைத்தவனை நிந்திப்பதில்லை. என்னையும் நிந்தித்துக்கொள்வதில்லை. இதற்கு மேல் எனக்கு எதுவும் தெரியாது. இதற்கு மேல் எதுவும் இல்லை என்றே நினைக்கிறேன். நிந்தனை இல்லாவிடத்தில் நந்தநந்தனன் தானே வந்து நர்த்தனம் செய்வான்" என்றார் துகாராம்.

ஜீஜாபாய் தலையைக் குனிந்து கொண்டாள். வெறும் லஜ்ஜை மட்டுமல்ல. முன்பு தான் நிந்தனை செய்த கண்ணனுக்கு வந்தனை செய்யும் முகமாகவே முகத்தைக் குனிந்து கொண்டாள்.

முன்பு வாக்களித்த நெல்லோடு, விளைச்சலில் கூடுதலாகியிருந்த தானியத்தையும் துகாராமுக்கே தந்தார் பண்ணையார்.

ஜீஜாபாய் வண்டி வண்டியாகச் சமைத்தாள். ஊரிலுள்ள ஏழை எளியவர்களுக்கெல்லாம் படைத்தாள்.

வெகு விரைவிலேயே துகாராம் மீண்டும் அன்னக்காவடியானார்.

ஆனால் இப்போது ஜீஜாபாய் அவரை நிந்திக்கவில்லை; பண்டரிநாதனையும் நிந்திக்கவில்லை. வயிறு காய்ந்தாலும் அவள் மனத்தில் பூஞ்சோலை வந்துவிட்டது. அதில் குளிரக் குளிரக் குழலூதினான் ஸ்ரீ வேணுகோபாலன்.

— **ரா. கணபதி**

'வைஷ்ணவ ஜனதோ' பாடலில் 'நிந்தா ந கரே' என்ற வாக்குக்கு துகாராமையே உருவகப்படுத்திச் சித்திரிக்கிறார் கனுதேசாய்.



தேனடை

ஒரு சமயம் கானகத்திலுள்ள நீர் நிலைகளெல்லாம் வற்றி வரண்டு விட்டன. தண்ணீரே இல்லை. குடிப்பதற்குத் தண்ணீருக்கு என்ன செய்வதென்ற கவலையால் மிருகங்களெல்லாம் வாடின. கடைசியில் காட்டில் எங்கோ ஒரு மூலையில் ஒரு சின்னஞ் சிறிய சுனை இருப்பதைக் கண்டு வந்து சொல்லின சுண்டெலிகள். உடனே மிருகங்களெல்லாம் ஒரு முடிவுக்கு வந்தன. 'அந்தச் சின்னச் சுனையை எல்லா மிருகங்களும் பாடுபட்டுத் தோண்டிப் பெரிய கிணறாக்க வேண்டியது. அதில் என்றும் வற்றாதபடி நீர் நிறைந்திருக்கும். தண்ணீர்த் துன்பமும் தீரும்' — இந்த முடிவுக்கு எல்லா மிருகங்களும் ஒப்புக் கொண்டன. ஆனால் நரி மட்டும் இதில் கலந்து கொள்ளவில்லை. அதற்கு வேலை செய்வதென்றால் பிடிக்காது. பிறரது உழைப்பில் தான் 'சந்தோஷமாக வாழுவதையே விரும்பும் அது.

சுனை பெரிதாக்கப்பட்டு அதில் நீர் தளதளத்துக் கொண்டிருந்தது. எல்லா மிருகங்களும் ஒரு திட்டமிட்டன. 'உழைக்காத சோம்பேறி நரிக்கு இந்தக் கிணற்றில் நீர் குடிக்கும் உரிமை கிடையாது. இதன் அருகில்கூட அது வரக் கூடாது' என்று கூறிக் குழி முயலைக் கிணற்றுக்குக் காவலும் போட்டன.

மிருகங்கள் தம் தம் அலுவல்களைக் கவனிக்கப் போக, கிணற்றைக் குழி முயல் காவல் காத்து வந்தது. அப்போது தோளில் ஒரு சாக்குப் பையுடன் நரி அங்கு வந்தது. "அடேடே! முயலாரே! சௌக்கியமாப்பா?" என்று கேட்டபடியே ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டது நரி. "சௌக்கியம் தான்" என்றது முயல். நரி, சாக்குப் பையிலிருந்து ஒரு தேனடையை எடுத்துச் சுவைக்கலாயிற்று. முயலின் நாக்கில் நீர் சுரந்தது.

"முயலண்ணா, எனக்கு உங்கள் தண்ணீரே வேண்டாம். இந்தத் தேனடை இருந்தால் போதும். தாகமே எடுக்காது. ஆகா, என்ன ருசி?" என்று சப்புக் கொட்டியது.

ஆசை வெட்கமறியாது அல்லவா? "எங்கே எனக்குக் கொஞ்சம் கொடேன், ருசித்துப் பார்க்கிறேன்" என்றது முயல். நரி தேனடையில் ஒரு துக்கணியூண்டு கடித்து முயலுக்குப் போட்டது. அதை ருசித்த முயல் "ஆகா! என்ன ருசி! என்ன ருசி!" என்று புகழ்ந்து விட்டு "தம்பி! இன்னும் கொஞ்சம் கொடேன்!" என்றது. நரி இதைத்தானே எதிர்பார்த்திருந்தது.

"அண்ணே, நான் நிறையத் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. தேன் வீணாகக் கூடாதல்லவா? ஆகவே, உன் கைகால்களைப் பின்பக்கமாக வைத்துக் கட்டி உன்னை மல்லாக்கப் படுக்க வைப்பேன். உன் வாயில் தேனடையைப் பிழிகிறேன். ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் நீ ருசித்து மகிழலாம்" என்றது.



முயலும் கட்டுப்பட்டது. ஆனால் அதன் திறந்த வாயில் தேனா விழுந்தது? நரி தேனடையைப் பைக்குள் வைத்துக் கொண்டு கிணற்று நீரை நிறையக் குடித்து விட்டு முயலுக்கு 'டாடா' கூறி ஓடி விட்டது. மாலையில் மிருகங்கள் கிணற்றடிக்கு வந்த போது முயல் கட்டுண்டு கிடப்பதைக் கண்டன. கண்ணீர் வழிய முயல், தான் ஏமாந்ததைக் கூறியது. அடுத்த நாள் முயலுக்குப் பதில் கரடிக் குட்டியைக் காவலுக்கு வைத்தன. ஆனால் நரியின் தந்திரத்துக்கு முன்னால் கரடிக் குட்டி எம்மாத்திரம்? தேனடையின் ருசிக்கு அதுவும் அடிமையாகி விட்டது.

மூன்றாவது நாளாக ஆமையைக் காவலுக்குப் போட்டன மிருகங்கள். வழக்கப்படி நரி வந்தது. பேச்சுக் கொடுத்தது ஆமையிடம். ஆனால் அதன் ஜம்பம் பலிக்கவில்லை. ஆமையார் பேசவேயில்லை. இதனால் கோபம் கொண்ட நரி, "ஆமையாரே நீர் ஒரு முட்டாள். இந்த நரியாரிடம் உம் வீறாப்புப் பலிக்காது. உம்மை ஒரு உதை கொடுத்து உருட்டி விட்டு நான் நீர் அருந்துகிறேன் பாரும்" என்று அருகே வந்தது. அமைதியாக இருந்த ஆமை




'லபக்'கென்று நரியின் காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டுவிட்டது. இப்படியொரு திகைப்பை நரி எதிர்பார்க்கவில்லை. ஏதேதோ கூறித் தாஜா செய்தது நரி. ஆனால் ஆமையின் பிடி இறுகிற்றே தவிரத் தளரவில்லை. நரிக்கு வலி தாங்கவில்லை. அதன் அடி உதை எதும் ஓட்டிக்குள் புகுந்து கொண்ட ஆமையை ஒன்றும் செய்யவில்லை. மாலையில் நரித் திருடனைக் கையும் களவுமாக மிருகங்களிடம் ஒப்படைத்த பிறகே ஆமை அதன் காலை விட்டது. பிறைப்பட்ட நரிக்குத் தண்டனை தர முடிவு செய்தது சிங்க ராஜா! மரண தண்டனைதான். ஆனால் எந்த விதமான சாவை அது விரும்புகிறதோ அதன் படியே அதை நிறைவேற்றுவதாகச் சிங்கம் அறிவிக்க அதற்கு நரி, 'நான் ஒரு சமயம் ஒரு குரங்கு ஒரு கன்டெலியின் வாலைப் பிடித்துக் கிறு கிறுவென்று சுழற்றி மரத்தில் அடித்துக் கொன்றதைப் பார்த்தேன். அப்படியே என்னையும்........"என்றது. சிங்கமும் அதற்கு ஒப்புக்கொண்டு மறு நாள் காலையில் அதன்படி தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பைக் கழுதைப் புலியிடம் ஒப்புவித்தது. இரவு சாகப்போகும் நரிக்கு விருந்து படைத்தன மிருகங்கள்.

நள்ளிரவில் நரி தனக்களிக்கப்பட்ட விருந்திலிருந்து கொழுப்பைப் பிரித்தெடுத்துத் தனது வால் முழுவதும் தடவிக் கொண்டு விட்டது. தந்திரசாலியல்லவா ?


மறு நாள் காலை கழுதைப் புலி நரியின் வாலைப் பற்றிச் சுழற்றும் போது அது வழுக்கியது. இறுகப் பற்றிப் பார்த்தது. ஆனால் அதன் வால் இன்னும் வேகமாக வழுக்கிக் கொண்டுபோயிற்று. பல தடவை முயன்று தலை சுற்றி சாய்ந்தது கழுதைப் புலி. அதன் பலமற்ற பிடியிலிருந்து விசைப்பட்ட நரி எவ்வித அடியுமின்றிக் காட்டின் கோடியில் போய் விழுந்து தப்பி ஓடிவிட்டது. அதன் பிறகு அது அந்தக் குளத்துப் பக்கமே தலைகாட்டுவதில்லை. இன்றும்கூட நீர்நிலைகளின் அருகில் ஆமைகள் காவல் காத்து வருவதைக் காணலாம்.

தி கிராண்ட் பிரி! (க்விஸ்)

இது ஒரு சுவாரஸ்யமான 'க்விஸ்'. உங்கள் திறமைக்கொரு பரீட்சையுங்கூட. இது ஒரு மோட்டார் ரேஸின் காட்சி. மோட்டாரில் இலக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன இல்லையா? அந்த இலக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கேள்வி. அதற்கு 'அ. ஆ' என இரு விடைகள். இவ்விரு விடைகளுள் ஒன்றுதான் சரியானது. நீங்கள் சரியான விடையைக் கூறினால் அதிலிருந்து போகும் கோடு உங்களை அடுத்த சரியான காருக்குக் கொண்டு செல்லும். தவறான விடையானால் சுற்றிக் கொண்டே இருப்பீர்கள். மோட்டார் கார் வெற்றிக் குறியை விரைவில் அடையாது. எங்கே முயன்று பாருங்கள். முதல் காரில் ஆரம்பிக்க வேண்டுமே தவிர, கார் எண் வரிசைப்படி போகவேண்டுமென்பதில்லை. அந்தந்த எண்ணுக்கான கேள்வியைப் படித்து விடை இழுக்கும் செல்லும் பாதையில் போகவும். எதிர்படும் எண்ணுக்கான கேள்விக்கு விடை கூறிக் கொண்டே வெற்றி வாசலுக்கு வாருங்கள்.



1. உலகில் கம்பளி உற்பத்தியில் முதன்மையாக விளங்கும் நாடு எது?
அ. நியூஸிலாந்து ஆ. ஆஸ்திரேலியா.
2. ஹாக்கி விளையாட்டில் ஒரு பக்கம் எத்தனை ஆட்டக்காரர்கள் விளையாடுவார்கள்?
அ. பதினெட்டு ஆ. பதினொன்று.
3. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம்
அ. 1-1-1901 ஆ. 1-1-1900
4. பாரதத்தில் ஆண்ட முதல் பெண் அரசி யார்?
அ. சுல்தானா ரஸியா ஆ. விக்டோரியா
5. பெங்குவின் பறவைகளை எங்கு காணலாம் ?
அ. அண்டார்டிக் ஆ. ஆர்டிக்
6. வேகமாக ஓடக்கூடிய பிராணி எது?
அ. சிறுத்தை ஆ. முயல்
7. எந்தப் பிரபல நகரம் ஒரு காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிள் என்று அழைக்கப்பட்டது?
அ. அலெக்சாந்திரியா ஆ. இஸ்தான்புல்
8. மிகவேகமாய்ப் பறக்கக் கூடிய பறவை
அ. அன்னம் ஆ. ராஜாளி
9. வெண்கலத்தில் கலந்துள்ள உலோகங்கள்
அ. பித்தளை, துத்த நாகம் ஆ. தாமிரம், வெள்ளீயம்
10. அமெரிக்க தேசியக் கொடியில்...
அ. 55 நட்சத்திரங்கள் 17 கோடுகள்.
ஆ. 50 நட்சத்திரங்கள் 13 கோடுகள்.
11. பூமத்திய ரேகையில் பூமியின் சுற்றளவு எத்தனை மைல்கள்?
அ. 24,902 ஆ. 27,830
12. விண்வெளியில் முதலில் பறந்தவர்
அ. கர்னல் க்ளென் ஆ. யூரி ககாரின்
13. இங்கிலாந்தின் கடைசி மன்னர் யார்?
அ. ஆறும் ஜார்ஜ் ஆ. ஆறும் எட்வர்டு.





பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

கிழவன் கலியாணம்

மாமல்லபுரத்துக் கடற் கரையில் சிறிய சிறிய கற்பாறைகள் பல உண்டு. சிலசமயம் கடல் பொங்கி வந்து அப்பாறைகளின் மீது அலைகள் மோதிக் கொண்டிருக்கும். சில சமயம் கடல் பின்வாங்கிச் சென்று அப்பாறைகள் உலருவதற்கு அவகாசம் அளிக்கும். அவற்றில் ஒரு சிறிய பாறையையேனும் மாமல்லபுரத்து மகாசிற்பிகள் சும்மா விட்டுவிடவில்லை. அந்தந்தப் பாறைக்குத் தகுந்தபடி பெரிதாகவும் சிறிதாகவும் காட்சிகளைக் கற்பனை செய்து அழியாச் சிற்ப உருவங்களை அமைத்து வைத்தார்கள்.

அவ்விதம் சிறிய பாறைகள் இரண்டு எதிரெதிராக அமைந்திருந்த இடத்தை ஆதித்த கரிகாலனும் மற்ற இருவரும் அணுகினார்கள். ரதத்திலிருந்து இறங்கிச் சென்றார்கள். இரண்டு பாறைகளையும் இரண்டு சிம்மாசனங்களாகக் கருதிக் கரிகாலனும் மலையமானும் அமர்ந்தார்கள். பார்த்திபேந்திரன் அவர்களுக்குச் சற்று அப்பால் நின்றான். அடிக்கடி அலைகள் வந்து அவர்களுடைய முழங்கால் வரையில் நனைத்துக் கொண்டிருந்தன. அலைகள் பாறைகளில் மோதியபோது எழுந்த திவலைகள் சிலசமயம் அவர்கள் மீது

முத்து மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் படகுகள் வரிசை வரிசையாகப் பல்வகைப் பண்டங்களைச் சுமந்து கொண்டு கடலைக் கிழித்துக்கொண்டு சென்றன. அப்பண்டங்களைப் படகிலிருந்து இறக்கிப் பாய் மரம் விரித்து நின்ற பெரிய மரக்கலங்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

''இரட்டை மண்டலப் படையெடுப்புக்காகச் சேகரித்து வைத்த பண்டங்களெல்லாம் இலங்கைக்குப் போக வேண்டியிருப்பதை நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது!'' என்ருன் பார்த்திபேந்திரன்.

''பின்னே என்ன செய்வது? சோழ நாட்டின் பொறுக்கியெடுத்த வீரர் படைகள் இலங்கையில் இருக்கின்றன. அவர்கள் போர்க்களங்களில் வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து வருகிருர்கள். ஆயிரம் வருஷமாக இலங்கை அரசர்கள் வீற்றிருந்து அரசு புரிந்த அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஜெயக் கொடி நாட்டியிருக்கிருர்கள். அப்படிப்பட்ட வீரர்கள் பட்டினி கிடந்து சாகும்படி விட்டு விடுவதா?'' என்ருன் ஆதித்த கரிகாலன்.

''அப்படி விட வேண்டும் என்று யார் சொன்ஞர்கள்? உணவுப் பண்டங்கள் அனுப்ப வேண்டியதுதான். ஆனல் சோழ நாட்டிலிருந்து நாகப்பட்டினத் துறைமுகத்தில் ஏறிப் போக வேண்டும். அல்லது பாண்டிய நாட்டிலிருந்து சேதுக்கரையில் ஏற்றி அனுப்ப வேண்டும். இந்த வறண்ட தொண்டை மண்டலத்திலிருந்து போக வேண்டிய அவசியம் என்ன? அதிலும் நாம் வடக்கே படையெடுத்துச் செல்வதற்கு



இதனால் தடை ஏற்படுமே என்பதை எண்ணிச் சொன்னேன்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''அதை நினைத்தால் எனக்கும் உள்ளம் கொதிக்கத்தான் கொதிக்கிறது. அந்தப் பாவிப் பழுவேட்டரையர்களின் நோக்கம் என்னதான் என்று தெரியவில்லை. எத்தனை நாள் இதையெல்லாம் சகித்துக் கொண்டிருப்பது? தாத்தா! ஏன் இன்னும் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது வாயைத் திறந்து சொல்லுங்கள்!'' என்றான் கரிகாலன்.

''குழந்தாய்! இந்தக் கடல் அலைகள் ஓயாமல் 'ஓ'வென்று சத்தமிடுகின்றன. கடல் அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு உன் தோழன் பார்த்திபேந்திரனும் கூச்சலிடுகிறான். இதற்கு நடுவில் நான் என்னமாய்ப் பேசுவது? எனக்கோ வயதாகித் தள்ளாமை வந்துவிட்டது!...'' என்றார் மலையமான் மிலாடுடையார்.

''பார்த்திபேந்திரா! சற்று நேரம் நீ சும்மா இரு. தாத்தா அவருடைய கருத்தைச் சொல்லட்டும்!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''இதோ வாயை மூடிக் கொண்டு விட்டேன். பாவம், தாத்தா தள்ளாத வயதில் மலைக் கோட்டையிலிருந்து கீழே இறங்கி இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்திருக்கிறார். அவர் முன்னால் நான் வாயைத் திறக்கலாமா? இந்தக் கடலுக்குத்தான் கொஞ்சமும் புத்தியில்லை! ஓயாமல் இரைந்து கொண்டிருக்கிறது. இதை அடக்குவார் ஒருவரும் இல்லை. நம் மலை அரசரிடம் சமுத்திர ராஜனுக்குக் கொஞ்சம்கூடப் பயமில்லை போலிருக்கிறது!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''தம்பி! பார்த்திபேந்திரா! அப்படியும் ஒரு காலம் இருந்தது. திருக்கோவலூர் மலையமான் என்ற பெயரைக் கேட்டு இந்தக் காசினியில் உள்ள அரசர்களெல்லாம் நடு நடுங்குவார்கள். இரட்டை மண்டலத்துச் சளுக்கர்களும், வல்லத்து வாண கோவரையர்களும், வைதும்பராயர்களும், கங்கர்களும், கொங்கர்களும், 'மலையமான்' பெயரைக் கேட்டதுமே இடிமுழக்கம் கேட்ட சர்ப்பத்தைப் போல் பொந்தில் ஒளிந்து கொள்வார்கள். சமுத்திர ராஜனும் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகத்தான் இருப்பான். இந்த உடம்பு கொஞ்சம் தளர்ச்சி அடைந்ததும் இப்போது எல்லாரும் துள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயிரம் வருஷத்துப் பழங்குடியைச் சேர்ந்த என்னை நேற்றைக்கு மேற்கேயிருந்து வந்த பழுவேட்டரையர்கள் ஒழித்துவிடப் பார்க்கிறார்கள்! அது ஒரு நாளும் நடக்கப் போவதில்லை! கரிகாலா! பழுவேட்டரையர்களின் நோக்கம் இன்னதென்று தெரியவில்லை என்பதாகச் சற்று முன்னால் சொன்னாயல்லவா? அவர்களுடைய நோக்கம் இன்னதென்று நான் சொல்கிறேன், கேள்! உன்னையும் உன் சகோதரனையும் தனித் தனியே பலவீனப்படுத்துவதுதான் அவர்களுடைய நோக்கம். இலங்கையில் உன் தம்பி அருள்மொழி தோல்வி அடைய வேண்டும். அதனால் அவனுக்கு அவமானம் நேர வேண்டும். இங்கே உனக்கு உன் தம்பியின் பேரில் கோபம் ஏற்பட வேண்டும். நீங்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும். அதைப் பார்த்து இந்தக் கிழவன் வேதனைப்பட வேண்டும்! இதுதான் அவர்களுடைய அந்தரங்க நோக்கம்...'' என்று மிலாடுடையார் ஆத்திரத்துடன் சொல்லி வருகையில் கரிகாலன் குறுக்கிட்டான்.

''இந்த நோக்கத்தில் அவர்கள் ஒருநாளும் வெற்றி யடையப் போவதில்லை, தாத்தா! என் தம்பியையும் என்னையும் யாராகிலும் பிரிக்க முடியாது. அருள்மொழிக்காக நான் உயிரையும் விடுவேன். எனக்கு ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது; — கப்பல் ஏறி நானும் இலங்கைக்குப் போகலாமா என்று. அவன் அங்கே என்ன கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானோ, என்னமோ! நான் இங்கே சுகமாக உண்டு உடுத்து அரண்மனையில் தூங்கிக் கொண்டு காலம் கழிக்கிறேன். என் வாளும் வேலும் துருப்பிடித்துப்போகின்றன. ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. இங்கு இருக்கவே பிடிக்கவில்லை.. தாத்தா! சொல்லுங்கள்! இந்தப் பண்டங்கள் ஏற்றும் கப்பல்களில் ஒன்றில் ஏறி நானும் இலங்கைக்குப் போகட்டுமா?'' என்று கேட்டான் கரிகாலன்.

''அரசே! அருமையான யோசனை! பல நாளாக நான் நினைத்துக் கொண்டிருந்ததைத் தாங்களும் சொல்லுகிறீர்கள். புறப்படலாம், வாருங்கள்! இதற்குத் தாத்தாவை யோசனை கேட்பதில் பயனில்லை. இவரைக் கேட்டால் 'வேண்டாம் பொறு!' என்றுதான் புத்திமதி சொல்லுவார். நாளைக்கே நாம் புறப்படலாம். தொண்டை மண்டலப் படையில் பாதியை அழைத்துக்கொண்டு போகலாம். இலங்கை யுத்தத்தை ஒரு வழியாக முடித்துக் கொண்டு நேரே நாகப்பட்டினத்தில் வந்து இறங்கலாம். இறங்கித் தஞ்சாவூருக்குச் சென்று அந்தப் பழுவேட்

டரையர்களை ஒரு கை பார்த்து விடலாம்!...'' என்று பார்த்திபேந்திரன் பொரிந்து கொட்டினான்.

''கரிகாலா! பார்த்தாயா? நான் முதலிலேயே என்ன சொன்னேன்? இவன் வாயை மூடிக் கொண்டிருந்தால் தான் நான் பேசுவேன் என்று சொல்லவில்லையா?''

''இதோ வாயை மூடிக் கொள்கிறேன் தாத்தா! நீங்கள் சொல்வதையெல்லாம் சொல்லி முடியுங்கள்!'' என்று பார்த்திபேந்திரன் வாயைக் கையினால் பொத்திக் கொண்டான்.

''கரிகாலா! நீ வீராதி வீரன். உன்னைப் போன்ற பராக்கிரமசாலி இந்த வீரத் தமிழகத்திலே கூட அதிகம்பேர் பிறந்ததில்லை. என்னுடைய எண்பது பிராயத்துக்குள் நானும் எவ்வளவோ பெரிய யுத்த களங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் எதிரிகளின் கூட்டத்தில் தன்னந் தனியே புகுந்து சென்று உன்னைப் போல் சண்டையிட்ட இன்னொரு வீரனைப் பார்த்ததில்லை. சேவூர் பெரும் போர் நடந்தபோது உனக்குப் பிராயம் பதினறுகூட ஆகவில்லை. அந்த வயதில் பகைவர்களின் கூட்டத்தில் நீ புகுந்து சென்ற வேகத்தையும், இடது சாரி, வலதுசாரியாக உன் வாள் சுழன்ற வேகத்தையும், பகைவர்களின் தலைகள் உருண்ட வேகத்தையும் போல் நான் என்றும் பார்த்ததில்லை. இன்னும் என் கண் முன்னால் அந்தக் காட்சி நின்று கொண்டிருக்கிறது. உன்னைப் போலவே உன் சிநேகிதன் பார்த்திபேந்திரனும் வீராதி வீரன்தான். ஆனால் நீங்கள் இரண்டு பேரும் பதற்றக்காரர்கள்; முன் கோபம் உள்ளவர்கள். அதனால் உங்களுக்கு யோசிக்கும் சக்தி குறைந்து விடுகிறது. எது செய்ய வேண்டுமோ அதற்கு நேர்மாறான காரியத்தைச் செய்யத் தோன்றி விடுகிறது....''

''தாத்தா! இம்மாதிரி உபதேசம் தாங்கள் இதற்கு முன் எத்தனையோ தடவை செய்திருக்கிறீர்கள்...''

''செய்திருக்கிறேன். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை என்கிறாயா? பேசாமல் என்னை ஊருக்குத் திரும்பிப் போகச் சொல்கிறாயா?''

''இல்லை, இல்லை! இப்போது நடக்க வேண்டிய காரியம் என்னவென்று சொல்லுங்கள்.''

''உன் சகோதரன் அருள்மொழியை உடனே இவ்விடத்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். நீயும் உன் சகோதரனும் பிரிந்திருக்கவே கூடாது...''

''தாத்தா! இது என்ன யோசனை? அருள்மொழி இங்கே வந்துவிட்டால், இலங்கை யுத்தம் என்ன ஆகிறது?''

''இலங்கை யுத்தம் இப்போது ஒரு கட்டத்துக்கு வந்திருக்கிறது. அநுராதபுரத்தைப் பிடித்தாகி விட்டது. இனி அங்கே மழை காலம். இனி நாலு மாதத்துக்கு ஒன்றும் செய்ய முடியாது. பிடித்த இடத்தை விட்டுக் கொடாமல் பாதுகாத்து வர வேண்டியதுதான். இதை மற்ற தளபதிகள் செய்வார்கள். அருள்மொழி இச்சமயம் இங்கே இருக்க வேண்டியது மிகவும் அவசியம். கரிகாலா! உண்மையை மூடி மூடி வைப்பதில் பயனென்ன? விஜயாலய சோழரின் குலத்துக்கும் அவர் அடிகோலிய சோழ சாம்ராஜ்யத்துக்கும் பேராபத்து வந்திருக்கிறது. நீயும் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் இப்போது ஒரே இடத்தில் தங்கி சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய பலத்தை யெல்லாம் திரட்டி வைத்துக் கொள்ளவும் வேண்டும். எப்போது என்ன விதமான அபாயம் வரும் என்று சொல்ல முடியாது...''

''தாத்தா! இது என்ன இப்படி என்னைப் பயமுறுத்துகிறீர்கள்? என் கையில் வாள் இருக்கும்வரையில் எனக்கு என்ன பயம்? எப்படிப்பட்ட அபாயம் வந்தால்தான் என்ன? தன்னந்தனியாக நின்று சமாளிப்பேன். எத்தகைய அபாயத்துக்கும் நான் பயப்படுகிறவன் அல்ல...''

''பிள்ளாய்! நீ எப்படிப்பட்ட தைரியசாலி என்று எனக்குச் சொல்ல வேண்டுமா? ஆயினும், திருவள்ளுவர் பெருமான் சொல்லியிருப்பதையும் சில சமயம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்!''

என்று அந்த மகான் சொல்லியிருக்கிறார். போர்க்களத்தில் பகைவர்களுக்கு எதிரெதிரே நின்று போரிடும்போது அச்சம் கூடாது. அப்படிப் பயப்படுகிறவன் கோழை. அவ்விதம் பயப்படுகிற பிள்ளை என் வம்சத்தில் பிறந்தால் அவனை நானே இந்தக் கிழடாய்ப் போன வலிவிழந்த கையினால் வெட்டிப் போட்டு விடுவேன். ஆனால் மறைவில் நடக்கிற சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் கண்ணுக்குத் தெரியாத அபாயங்களுக்கும் பயப்பட்டேயாக வேண்டும். பயப்பட்டு, அந்தந்த நிலைமைக்குத் தகுந்த முன் ஜாக்கிரதையும் செய்துகொள்ள வேண்டும். அரச குலத்தில் பிறந்து சிம்மாசனத்துக்கு உரியவர்கள் இது விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. இருந்தால் நாட்டுக்கே நாசம் விளையும்.''

''தாத்தா! அப்படி என்ன இரகசிய அபாயங்களைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சற்று விளக்கமாகச் சொன்னால்தானே நாங்கள் ஜாக்கிரதையாக இருக்க முடியும்?...''

''சொல்லத்தான் வருகிறேன். சில நாளைக்கு முன்னால் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரி வேளையில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்குப் பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். இன்னும் தென்னவன் மழவராயர், குன்றத்தூர் கிழார், வணங்காமுடி முனையரையர், அஞ்சாத சிங்கமுத்தரையர், இரட்டைக் குடை ராசாளியார் — இவர்கள் எல்லோரும் வந்திருந்தார்களாம். என் காதுக்கு வந்தது இந்தப் பெயர்கள்தான். வேறு பலரும் வந்திருக்கலாம்...''

''வந்திருக்கட்டும்; அதனால் என்ன? எல்லாரும் நடு நிசி வரையில் கூத்தும் கேளிக்கையும் பார்த்துவிட்டு, வயிறு புடைக்கச் சாப்பிட்டு, அதற்கு மேல் மிடா மிடாவாய்க் கள்ளைக் குடித்துவிட்டுத் தூங்கப் போயிருப்பார்கள். அதைப் பற்றி நமக்கு என்ன? நீங்கள் சொன்ன தாடி மீசை நரைத்த கிழடுகள் எல்லாம் கூடிப் பேசி என்ன புரட்டி விடுவார்கள்?''

''கிழடுகளைப் பற்றி உனக்கு இவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருக்கும் பட்சத்தில் நான் என்ன சொல்லி என்ன பயன்? நானும் ஒரு கிழவன்தானே? அவர்கள் எல்லோரையும் விடத் தொண்டு கிழவன் நான்!...''

''தாத்தா! கோபம் வேண்டாம். அந்தக் கையினாலாகாத கிழங்களோடு தங்களை நான் சேர்த்துவிடுவேனா? சரி, அப்புறம் என்ன நடந்தது, சொல்லுங்கள்!''

''கையினால் ஆகாத கிழங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறாய்! அவர்களில் தலைமைப் பெரிய கிழவன் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கலியாணம் செய்து கொண்டான் என்பதை மறந்து விடாதே! இளம் பெண்ணை மணந்த கிழவனைப் போல் உலகில் அபாயகரமான இளைஞன் யாரும் இல்லை என்பதையும் தெரிந்து கொள்!''



கிழவனின் கல்யாணத்தைப் பற்றிய பேச்சுத் தொடங்கியதும் ஆதித்த கரிகாலனுடைய முகத்தில் ஒரு விசித்திரமான மாறுதல் உண்டாகியது. அவனுடைய கண்கள் திடீரென்று சிவந்து இரத்த பலி கேட்கும் க்ஷத்ர தேவதையைப்போல் விழித்தன. உதடுகள் துடிதுடித்தன. பற்கள் நறநறவென்று கடித்துக் கொண்டன.

இதையெல்லாம் மலையமான் கவனிக்கவில்லை. ஆனால் பார்த்திபேந்திரன் கவனித்துக் கொண்டான்.

''அந்தக் கல்யாணப் பேச்சு இப்போது என்னத்துக்கு ஐயா, சம்புவரையர் மாளிகையில் அப்புறம் என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்'' என்றான் பல்லவ வீரன்.

''அதைத்தான் சொல்ல வந்தேன். ஆனால் வயதாகி விட்டது அல்லவா? புத்தி தடுமாறி வேறு எங்கோ போய் விடுகிறேன். கேள், கரிகாலா! பார்த்திபேந்திரா! நீயும் கேட்டுக் கொள்! அந்த நள்ளிரவுக் கூட்டம் கிழவர்களின் கூட்டம் மட்டும் அல்ல. சில வாலிபர்களும் அதில் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் சம்புவரையன் மகன் கந்தமாறன். இன்னொருவன்...'' என்று தயங்கினதைப் பார்த்து, ''யார் தாத்தா? இன்னொருவன் யார்?'' என்று கரிகாலன் தூண்டிக் கேட்டான்.

''உன்னுடைய பெரிய பாட்டனார் கண்டராதித்தருடைய திருக்குமாரன்—

—உன்னுடைய சிற்றப்பன், — மதுராந்தகத் தேவன்தான்!''

இதைக் கேட்டதும் ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் கலகலவென்று சிரித்தார்கள்.

''இது என்ன சிரிப்பு? இந்தச் சிரிப்புக்குப் பொருள் என்ன? மறுபடியும் என்னைப் பரிகசிக்கிறீர்களா?'' என்று மிலாடுடையார் கேட்டார்.

''இல்லை, தாத்தா, இல்லை! மதுராந்தகனைத் தாங்கள் 'வாலிபன்' என்கிறீர்களே? அதற்காகத்தான் சிரிக்கிறோம். அவன் கிழங்களிலே யெல்லாம் தொண்டு கிழடு அல்லவா? பழுத்த சிவஞானக் கிழடு அல்லவா?'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''கிழவனுக்குச் சில சமயம் யௌவனம் திரும்பும் என்று நீ கேள்விப்பட்டது இல்லையா? அது போல் மதுராந்தகனுக்கும் இளமை திரும்பியிருக்கிறது. சில நாள் முன்பு வரையில் துறவியாகப் போகிறேன்; சிவ கைங்கரியம் செய்யப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தவன், ஒன்று, இரண்டு, மூன்று என்று கலியாணம் செய்து கொண்டு போகிறான் அல்லவா?...''

''செய்து கொள்ளட்டும். இன்னும் பல கலியாணங்கள் செய்து கொள்ளட்டும்; அதனால் என்ன?''

''தம்பி! மதுராந்தகனின் கலியாணங்கள் சாதாரணக் கலியாணங்கள் அல்ல. இராஜரீகக் கலியாணங்கள். பழுவேட்டரையர்களின் அந்தரங்கச் சூழ்ச்சியைச் சேர்ந்த கலியாணங்கள்.''

''தாத்தா! இன்னும் எதற்காக மர்மமாகவே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? விட்டுச் சொல்லுங்கள்! பழுவேட்டரையர்கள் என்ன தான் விரும்புகிறார்கள்? ஊர் ஊராய்ச் சென்று அவர்கள் கூட்டம் போடுவதன் நோக்கம் என்ன? மதுராந்தகத் தேவனை வைத்துக் கொண்டு என்ன செய்யப் பார்க்கிறார்கள்?'' என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

''வேறு ஒன்றும் இல்லை. உனக்கும் உன் தம்பிக்கும் இராஜ்ய உரிமை இல்லையென்று செய்து விட்டு, மதுராந்தகனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்ற எண்ணியிருக்கிறார்கள் அதற்கு உன் தந்தையின் சம்மதத்தைப் பெறுவதற்காகவே அவரைத் தஞ்சைக் கோட்டையில் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள்!'' என்றார் மிலாடுடையார்.

ஐம்பத்துமூன்றாம் அத்தியாயம்

மலையமான் ஆவேசம்

அறிவைப் போலவே ஆற்றலும் ஆற்றலைப் போலவே அநுபவமும் பெற்று முதிர்ச்சி யடைந்திருந்த திருக்கோவலூர் மலையமான் அரசர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டு ஆதித்த கரிகாலன் மூர்ச்சையடைந்து விழுந்து விடவில்லைதான்! ஆயினும் சிறிது நேரம் செயலிழந்து ஸ்தம்பித்து நின்று விட்டான். பார்த்திபேந்திரனும் வாய் அடைத்துப் போய் மௌனமாகி நின்றான். கடலும் ஓசை அடங்கிவிட்டதாகத் தோன்றியது. தூரத்தில் படகிலிருந்து பண்டங்களை இறக்கி மரக்கலங்களில் ஏற்றுவோரின் 'ஏலேலோ' சத்தங்கூட அச்சமயம் அடங்கி நின்று போயிருந்தது.

வியப்புக்கு இடம் கொடுத்து விட்டதற்காக வெட்கப்பட்ட ஆதித்த கரிகாலன், சட்டென்று பாட்டனார் முகத்தை நிமிர்ந்து நோக்கி, ''தாத்தா! இப்படியெல்லாம் நாடு நகரங்களில் சிலர் பேசி வருவதாக என் காதிலும் விழுந்தது. அது வெறும் பொய் வதந்தி என்று எண்ணி யிருந்தேன். நீங்கள் இவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்களே? தெரிந்து கொண்டுதான் சொல்கிறீர்களா? இப்படியும் நடக்கக் கூடுமா!'' என்றான்.

''ஏன் நடக்க முடியாது? உன் பாட்டனுக்கு முன்னால் உன் பெரிய பாட்டனார் கண்டராதித்த தேவர் தானே சோழ நாட்டை ஆண்டார்! அவருடைய குமாரனுக்கு உங்களைக் காட்டிலும் அதிக உரிமை இந்த ராஜ்யத்தில் உண்டல்லவா?'' என்றார் மலையமான் மிலாடுடையார்.

''இல்லவே இல்லை! அந்த முழு அசடன், நாலு வார்த்தை பேசத் தெரியாதவன், கையில் வாள் எடுத்து அறியாதவன், பெண்ணாகப் பிறக்கத் தவறி ஆணாகப் பிறந்தவன் — அவனுக்கு இந்த ராஜ்யம் உரிமையா? பால் மணம் மாறாத பன்னிரண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்தவர், வீர பாண்டியன் தலை கொண்ட சிங்கம், தோல்வி என்பதையே அறியாத வீராதி வீரர், ஆதித்த கரிகாலருக்கு உரிமையா? ஐயா! மிலாடுடையாரே! வயதாகி

விட்டபடியால் தங்களுடைய அறிவு கூட மழுங்கிவிட்டதா?'' என்று சீறினான் பார்த்திபேந்திரன்.

அவனைக் கரிகாலன் அதட்டி அடக்கிவிட்டு, ''தாத்தா! எனக்கு இந்த இராஜ்யம் ஒரு பொருட்டல்ல. வேண்டுமானால் என் கைவாளின் உதவிகொண்டு இதைப் போன்ற பத்து ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்வேன். ஆனால், இதில் நியாயம் எப்படி? முதலிலேயே மதுராந்தகனுக்குத்தான் இராஜ்யம் என்று சொல்லியிருந்தால் நான் குறுக்கே நின்றிருக்க மாட்டேன். நாடு அறிய, நகரம் அறிய, மக்கள் எல்லாரும் அறிய எனக்குத்தான் அரசுரிமை என்று இளவரசுப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு, இப்போது எப்படி மாறலாம்? உங்களுக்கு இது சம்மதமாயிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''எனக்குச் சம்மதமாயில்லை. ஒரு நாளும் நான் சம்மதிக்கப் போவதில்லை. நீ சம்மதித்து இராஜ்யத்தை மதுராந்தகனுக்குக் கொடுப்பதாகச் சொன்னால், முதலில் உன்னை இந்த வாளால் கண்ட துண்டமாக வெட்டிப் போடுவேன். பிறகு உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற உன் தாயை வெட்டிப் போடுவேன். பிறகு உன் தாயைப் பெற்றவனாகிய நானும் என் கையினாலேயே வெட்டிக் கொண்டு சாவேன். என் உடம்பில் உயிர் இருக்கும்வரை இந்தச் சோழ ராஜ்யம் உன்னை விட்டுப்



போக விடேன்!'' என்று அந்த வயோதிகர் கர்ஜித்தபோது, அவருடைய மங்கிய கண்களில் மின்னொளி வீசியது. உணர்ச்சி ஆவேசத்தில் தளர்ந்து போயிருந்த அவர் உடம்பெல்லாம் நடுங்கியது.

பார்த்திபேந்திரன், ''அப்படிச் சொல்லுங்கள், தாத்தா! அப்படிச் சொல்லுங்கள்!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்து மலையமானைத் தழுவிக் கொண்டான். அவனுடைய கண்களில் கண்ணீர் பெருகிற்று.

கரிகாலனும் சற்று நேரம் ஆழ் கடலை நோக்கியவாறு இருந்தான். பிறகு பாட்டனாரைப் பார்த்து, ''தாத்தா! தங்களுடைய எண்ணம் அதுவானால் தயக்கம் ஏன்? உடனே படை திரட்டிக் கொண்டு தஞ்சைக்குப் புறப்படுவோம். பழுவேட்டரையர்களையும் மற்றும் அவர்களைச் சேர்ந்த மழுவரையர், சம்புவரையர், முத்தரையர், முனையரையர் எல்லாரையும் ஒரேயடியாக ஒழித்து விட்டுத் தஞ்சைக் கோட்டையைப் பிடிப்போம். மதுராந்தகனைச் சிறையில் அடைப்போம். சக்கரவர்த்தியை விடுதலை செய்வோம். தங்களுடைய ஆசி எங்களுக்கு இருந்தால் போதும். நானும் பார்த்திபேந்திரனும் சேர்ந்தால், எங்களை வெல்லக் கூடியவர்கள் இந்தப் பூவுலகில் யார்?'' என்று பெருமிதத்துடன் கூறினான்.

''உங்களைப் போரில் வெல்ல முடியாது; உண்மைதான். ஆனால் சூழ்ச்சியும் சதியும் சேர்ந்து எதிர்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? படையுடன் நீங்கள் தஞ்சையை நெருங்கும் போதே, பெற்ற தகப்பனுடன் மகன் யுத்தம் செய்ய வருவதாகக் கட்டிவிடுவார்கள்! அந்த அவமானத்தைத் தாங்காமல் சக்கரவர்த்தி உயிரை விட்டு விட்டார் என்றும் சொல்லி விடுவார்கள். அதை நம்புகிற ஜனங்களும் இருக்கக் கூடும் அல்லவா ? அந்த நிலைமையில் நீதான் என்ன செய்வாய், குழந்தாய்? உன் மனமும் தளர்ச்சி அடைந்து விடும்! பெற்ற தகப்பனோடு யுத்தம் செய்ய வந்தவன் என்ற பழிச் சொல்லை உன்னால் தாங்க முடியுமா ?''

ஆதித்த கரிகாலன் தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, ''சிவ சிவா ! கேட்கச் சகிக்கவில்லை!'' என்றான்.

''அதனால்தான் முதலிலேயே நான் சொன்னேன்; — பெரிய அபாயம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது என்று !''

''உபாயம் என்ன, தாத்தா! உபாயம் என்ன?''

''முதலில் இலங்கைக்கு நம்பிக்கையான ஆள் ஒருவனை அனுப்ப வேண்டும். அனுப்பி, அருள்மொழியை அழைத்து வரச் செய்ய வேண்டும். அவன் போர்க்களத்தை விட்டுத் தன் கீழுள்ள போர் வீரர்களை விட்டு, இலேசில் வரமாட்டான். அவன் மனத்தைத் திருப்பி அழைத்து வரக்

கூடிய ஆற்றல் உள்ளவன் ஒருவனை அனுப்ப வேண்டும்....''

பார்த்திபேந்திரன் முன் வந்து, ''ஐயா! நீங்கள் சம்மதம் கொடுத்தால் நானே போய் அழைத்து வருகிறேன்!'' என்றான்.

''அது கரிகாலன் இஷ்டம்; உன் இஷ்டம். ஆனால் போகிறவன் வந்தியத்தேவனைப் போல் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிடக் கூடாது....''

''பார்த்தீர்களா? நான் சொன்னேனே?'' என்றான் பார்த்திபேந்திரன்.

''வந்தியத்தேவனைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, தாத்தா?'' என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

''அவனைப் பற்றி முதலில் எனக்குச் சந்தேகமாகக்கூட இருந்தது. அவனும் நம் எதிரிகளுடன் சேர்ந்து விட்டானோ என்று. அப்புறம் அந்தச் சந்தேகம் தெளிந்தது.''

''பார்த்தாயா, பார்த்திபேந்திரா!'' என்றான் கரிகாலன்.

''அவர் முழுதும் சொல்லட்டும். அதற்குள் அவசரப்படுகிறீர்களே? ஐயா! வந்தியத்தேவன் பேரில் தங்களுக்கு என்ன சந்தேகம் வந்தது?''

''சம்புவரையர் மாளிகையில் கூட்டம் நடந்த அன்று அவனும் அங்கிருந்தான் என்று அறிந்தேன். ஆனால் சதியில் அவனுக்குச் சம்பந்தமில்லையென்று பிறகு தெரிந்து கொண்டேன்.''

''தாத்தா! இதெல்லாம் எப்படித் தங்களுக்குத் தெரிந்தது?''

''கடம்பூர் மாளிகை விருந்துக்கு எனக்கு அழைப்பு வரவில்லை. அதிலேயே கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. பிறகு, அங்கு வந்து விட்டுத் திரும்பி ஊருக்குச் சென்ற குன்றத்தூர் கிழாரை வழியில் சிறைப் பிடித்து என் மலைக் கோட்டைச் சிறைக்குக் கொண்டு போனேன். அவரிடமிருந்து அங்கு நடந்தவைகளையெல்லாம் தெரிந்து கொண்டேன். வந்தியத்தேவன் சம்புவரையர் மகன் கந்தமாறனின் சிநேகிதனும்....''

''ஆமாம்; நம்முடைய சைன்யத்திலே இருவரும் இருந்தவர்கள்தானே? வடபெண்ணைக் கரையில் இருவரும் காவல் புரிந்தார்கள். அதிலிருந்து அவர்களுக்குச் சிநேகிதம் ஏற்பட்டிருந்தது எனக்குத் தெரியும்....''

''எப்படியோ, வந்தியத்தேவன் அன்றைக்கு அம் மாளிகையில் இருந்தான். அவன் சதியில் சம்பந்தப்பட்டானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. பிறகு அதற்கு ஒரு வழி கிடைத்தது. தஞ்சைக் கோட்டைக்குள் கந்தமாறனுடைய முதுகில் வந்தியத்தேவன் குத்திவிட்டுத் தப்பித்துச் சென்றுவிட்டான் என்று தெரிந்ததும்....''

''தாத்தா! இதை ஒருநாளும் நான் நம்ப மாட்டேன். வந்தியத்



தேவன் வேறு எது செய்தாலும் செய்யா விட்டாலும் ஒருவனுடைய முதுகில் குத்தக் கூடியவன் அல்ல. அதிலும் சிநேகிதனுடைய முதுகில் குத்தக் கூடிய சண்டாளன் அல்ல...''

''அந்தச் சிநேகிதன் தன் எஜமானுக்கு விரோதமான சதியில் ஈடுபட்டவன் என்று தெரிய வந்தால்? இவனையும் அந்தச் சதியில் சேர்ப்பதற்கு அந்தச் சிநேகிதன் ஒரு வேளை முயற்சி செய்திருந்தால்?....''

''எப்படியிருந்தாலும் முகத்துக்கு முகம் நின்று சண்டையிட்டிருப்பானே தவிர ஒருநாளும் முதுகில் குத்தியிருக்க மாட்டான்!''

''உன் சிநேகிதனிடம் உன்னுடைய நம்பிக்கையை வியக்கிறேன், தம்பி! உண்மை எப்படியோ இருக்கட்டும். கந்தமாறனுடைய முதுகில் குத்தியதாக வந்தியத்தேவன் பேரில் பழுவேட்டரையர்கள் குற்றம் சுமத்தி அவனை வேட்டையாடி வருகிறார்கள். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஆகையால், வந்தியத் தேவனுக்கும் கந்தமாறனுக்கும் ஏதோ ஒரு விதத்

தில் சண்டை வந்திருக்க வேண்டும். இதிலிருந்து அவன் உனக்கு எதிரான சதியில் சேர்ந்திருக்கவில்லை என்று நிச்சயமாகிற தல்லவா ?''

''அதற்கு இவ்வளவு தூரம் சாட்சியம் வேண்டியதில்லை. வந்தியத் தேவன் நம் விரோதிகளுடன் சேர்வது என்றால், அப்போது இந்தப் பூமியே தலைகீழாகிவிடும். அலைகடல் வறண்டு விடும். வானம் இடிந்துவிழும். சூரியன் இராத்திரியில் உதிப்பான். சோழர் குலம் சர்வ நாசத்தை அடையும்....'' என்று ஆதித்த கரிகாலன் பரபரப்போடு கூறினான்.

''இளவரசர் சொல்லுவதை நானும் ஒத்துக் கொள்வேன். வந்தியத்தேவன் ஒரு நாளும் நமக்குத் துரோகம் செய்து எதிரிகளுடன் சேர மாட்டான். அவனிடம் நான் சொல்லும் குற்றம் ஒன்றே ஒன்றுதான். அழகான பெண் முகத்தைக் கண்டால் வந்தியத்தேவன் தலை கிறுகிறுத்து விடுவான். அவனுடைய மதி மயங்கி விடும்!''

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் புன்னகை புரிந்தான். ''அது தெரிந்திருந்தபடியால்தான் சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு, இளைய பிராட்டியிடம் போகும்படி அவனை அனுப்பினேன். இளவரசியை ஒரு தடவை அவன் பார்த்து விட்டால், அப்புறம் தப்புவது ஏது? அவனுக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதானே ?'' என்றான்.

உடனே மலையமான் மிலாடுடையார், ''ஓகோ ! அப்படியா வந்தியத் தேவனுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறாய் ? எனக்குத் தெரியாமல் போயிற்றே ? தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய பிறகு வந்தியத்தேவனிடமிருந்து ஏதாவது செய்தி வந்ததா ? அல்லது இளையபிராட்டியிடமிருந்தாவது செய்தி வந்ததா?'' என்றார்.

''ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதுவரையில் ஒன்றும் செய்தி வரவில்லை....''

''அருள்மொழி இவ்விடம் வந்த பிறகு உன் சகோதரியையும் இங்கே தருவித்துவிட வேண்டியதுதான். அப்புறம் நமக்கு ஒரு கவலையும் இல்லை. இளையபிராட்டியிடம் எல்லா யோசனையையும் விட்டு விட்டு அவள் சொல்கிறபடி நாம் கேட்டு நடந்து வந்தால் போதும் !....''

''தாத்தா ! இது விஷயத்தில் வந்தியத்தேவனைக் காட்டிலும் தாங்கள் மோசமா யிருக்கிறீர்களே?''

''ஆம், கரிகாலா ! உன் சகோதரி இரண்டு வயதுக் குழந்தையாயிருந்த போதே கொடுங்கோலைக் கையில் பிடித்து விட்டாள். என்னையும் உன் பாட்டியையும் தாய் தகப்பனையும் தன் இஷ்டப்படி ஆட்டி வந்தாள். இப்போதும் என் வரையில் அப்படித்தான். அவள் வைத்ததே எனக்குச் சட்டம். கரிகாலா ! உன் சகோதரியைப் பற்றிச் சொன்னால் உனக்கு அது குறைவு என்று நினைக்காதே ! உனக்கு அது பெருமையே தவிர வேறில்லை. இளைய பிராட்டி குந்தவையைப் போன்ற அறிவுச் செல்வத்தைப் படைத்தவர் ஆண்களிலோ, பெண்களிலோ இது வரையில் பிறந்ததில்லை. நமது முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் எப்படிப்பட்டவர் என்பது உனக்குத் தெரியுமில்லையா? அவரே இளைய பிராட்டியிடம் யோசனை கேட்பார் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும் ?'' என்று மிலாடுடையார் ஒரே பரவசமாகப் பேசினார்.



ஒரு புதிர்

சமீபத்தில் இந்தியாவில் நடந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்கும் படத்தில் உள்ள சிறுவனுக்கும் ஒரு தொடர்புண்டு. அந்நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்பை அச்சுக் கோத்து வைத்திருந்த போது துரதிர்ஷ்டவசமாகச் சில எழுத்துக்கள் சிதறி உதிர்ந்து விட்டன. அந்த இடங்களில் வெறும் கோடுகளை வைத்து நிரப்பிவிட்டோம். உங்களால் சரியான எழுத்துக்களை உரிய இடத்தில் எழுத முடியுமா, பாருங்கள்.

இ—ன் தேசத் — ஷா — — — வும் அரசி — — — வும் தங்கள் — — நகரான டா — — னை விட்டுக் கிளம்பி — — வான்டு — — வரி 2உ பு — — — வி வந்து சே — — — ர்கள். ப — — — — டு நாள் — — — — பயணம் — — தார்கள். இவர்களுக்கு — ன் — கு — — — கள் — — டு. மூ — — பு— — வனை — — ரச குமாரனை, படத்தில் — — ரீக உடை களுடன் க — — — மாகக் காட் — தரு — தைக் கா — —ம்.

பி.கு.: இதையே சரியான முறையில் இரண்டாவது தடவை அச்சுக் கோத்து அதை அடுத்த பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

வந்தியத் தேவனிடம் அருவை கொண்ட பார்த்திபேந்திரன், "அதெல்லாம் சரிதான்; யார் இல்லை என்றார்கள்? ஆனால் ஒருவேளை வந்தியத்தேவன் இளையபிராட்டியைப் பார்ப்பதற்கு முன்னால் வேறு ஒரு பெண் முகத்தைப் பார்த்து மயங்கியிருந்தால் என்ன செய்வது? உதாரணமாக, அந்தப் பழுவூர் இளையராணி என்கிற மோகினியைப் பார்த்திருந்தால்?...." என்றான். கடைசி வார்த்தைகளை அவன் சற்றுத் தாழ்ந்த குரலில் கூறியபடியால், கிழவரின் காதில் அது விழவில்லை. ஆனால் ஆதித்த கரிகாலனின் காதில் விழுந்தது. அவன் சட்டென்று திரும்பிக் கண்களில் தீப்பொறி பறக்கப் பார்த்திபேந்திரனைப் பார்த்தான். அந்தப் பார்வை பல்லவ வீரனைக் கதிகலங்கச் செய்து விட்டது.


மலையமான் பாறையிலிருந்து எழுந்து நின்று, "பார்த்திபேந்திரா! நீ நாளைக்கே இலங்கைக்குப் புறப்படுகிறாய் அல்லவா? வாலிபர்களாகிய உங்களுக்குப் பேசுவதற்கு எவ்வளவோ இருக்கும். நான் கிழவன். மெள்ள மெள்ள அரண்மனைக்குப் போய்ச் சேர்கிறேன். நீங்கள் பேச வேண்டியதைப் பேசி விட்டுச் சாவகாசமாக வந்து சேருங்கள்!" என்றார்.

அவர் சற்றுத் தூரம் சென்ற பிறகு பார்த்திபேந்திரன் ஆதித்த கரிகாலனைப் பார்த்து, "அரசே! என் தலைவா! தங்கள் மனத்தில் ஏதோ ஒரு சங்கடம் குடி கொண்டிருக்கிறது. அது பழுவூர் இளையராணி சம்பந்தமானது என்பதை நான் அறிவேன். பெரிய பழுவேட்டரையரின் கலியாணத்தைப் பற்றியோ, பழுவூர் இளையராணியைப் பற்றியோ பேச்சு வரும்போதெல்லாம் தங்கள் தோற்றமே மாறி விடுகிறது. தங்கள் கண்கள் சிவந்து அனலைக் கக்குகின்றன. எத்தனை காலம் இந்த வேதனையைத் தங்கள் மனத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டு புழுங்கப் போகிறீர்கள்? என்னைத் தங்கள் 'உயிருக்கு உயிரான சிநேகிதன்' என்று ஆயிரந் தடவை கூறியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சிநேகிதனிடம் தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டக் கூடாதா? வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லக் கூடாதா? பரிகாரம் ஏதாவது கண்டுபிடித்துச் சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதா? தங்கள் மனத்துக்குள்ளே வேதனைப்பட்டுப் புழுங்குவதைப் பார்த்துக் கொண்டு எத்தனை நாள்தான் நான் சும்மா இருக்க முடியும்?" என்று அடங்கா ஆர்வத்தோடு கூறினான்.

ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, "நண்பா! என் மனவேதனை என்றும் தீராத வேதனை. என் உயிரோடு மடிய வேண்டிய வேதனை. அதற்குப் பரிகாரமே கிடையாது. ஆயினும் உன்னிடம் சொல்லக் கூடாது என்பதில்லை. இன்றிரவு சொல்லுகிறேன். இப்போது கிழவருடன் அரண்மனைக்குப் போய்ச் சேர்வோம். அவரைத் தனியாக அனுப்புவது உசிதமில்லை!" என்று கூறிப் பாறையிலிருந்து எழுந்தான். **(தொடரும்)**

முன்பக்கத்துப் புதிருக்கு விடை:

இரான் தேசத்து ஷாயின் ஷாவும் அரசி ஃபாராவும் தங்கள் தலைநகரான டாராஹ்னை விட்டுக் கிளம்பி இவ்வாண்டு ஜனவரி 2உ புதுதில்லி வந்து சேர்ந்தார்கள். பன்னிரண்டு நாள் சுற்றுப் பயணம் செய்தார்கள். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உண்டு. மூத்த புதல்வனை — அரச குமாரனை, படத்தில் ராஜரீக உடைகளுடன் கம்பீரமாகக் காட்சி தருவதைக் காணலாம்.



படம்: சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த இரான் தேச மன்னருக்கும் அரசி ஃபாராவுக்கும், புதுதில்லி விமான நிலையத்தில் வரவேற்பு.



ஷாலிமார்
க்ளுகோஸ்
பிஸ்கட்டுகள்

புதுமை குன்றாமல் இருக்க இப்பொழுது அலுமினியம் ரேக்குகளில் பேக் செய்யப்படுகிறது



ஷாலிமாரின் புஷ்டிமிக்க
புதிய க்ளுகோஸ் பிஸ்கட்டுகளை
உண்டு இன்புறுங்கள்.
அவை புரதங்களும், வைட்ட
மின்களும் நிரம்பியவை; என்றும்
புதுமை குன்றாமல்
இருப்பதற்கென, அலுமினியம்
ரேக்குகளில் பேக்
செய்யப்படுகின்றன.

ஷாலிமாரின் ஐதராபாத்
தொழிற்சாலையின் தயாரிப்பு

இரண்டு சைஸ்களில்
கிடைக்கின்றன.

ஷாலிமார் பிஸ்கட்ஸ் ப்ரை. லிட்.,
பம்பாய்-ஐதராபாத்

SB A7-T

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சென்னை : பிரமேஷ் குமார் ஏஜன்ஸீஸ், சென்னை-6 ○ கோயமுத்தூர் & நீலகிரிக்கு: ஆர். சந்திரசேகரன் & சன்., கோயமுத்தூர்-2 ○ மதுரை : எஸ்ஏ. ஏ. பாலகிருஷ்ண செட்டி & கோ., மதுரை-1 ○ திருநெல்வேலி & கன்யாகுமரி : தாஜ் ஹேராட்டல் & ஸ்டோர்ஸ், திருநெல்வேலி ○ திருச்சிராப்பள்ளி : ராஜன் ஸ்டோர்ஸ், திருச்சிராப்பள்ளி -2 சேலம் : வி. எஸ். ராமநாதன் செட்டியார், சேலம்.



தை பிறந்தால்

இந்தக் கல்யாண வீட்டினுள் நுழைய நமக்கு அழைப்பிதழ் வரவில்லை. இருப்பினும் நாம் உள்ளே பிரவேசிக்கத்தான் போகிறோம். காரணம், இத்திருமணத்துக்கு நாம் விருந்தினராகச் செல்லவில்லை. மாறாக, அவ்வைபவத்தில் பங்கு பெறும் சில முக்கியமான நபர்களைப் பேட்டி காணப் போகிறோம்.

தைத் திங்கள் பிறந்து விட்டதன் அறிகுறியாக அந்த மண்டபம் 'கல்யாணக் களை' யுடன் காண்பவர் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கிறது. நாம் உள்ளே நுழைகிறோம். தோடி ராக ஆலாபனை காற்றில் மிதந்து வருகிறது. ''மகாராஜபுரம் விசுவநாத அய்யர் சஷ்டியப்த பூர்த்திக்கு நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையுடன் நானும் வாசித்தேன்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் அங்கு நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருந்த மாம்பலம் எம். கே. சுவாமிநாதன். நாற்பத்தியெட்டு வயது நிரம்பிய இவர் தமது எட்டாவது வயதில் கலையைப் பயிலத் தொடங்கி விட்டார். பதின்மூன்றும் பிராயத்தில் தமது முதல் மேடைக் கச்சேரியையும் நிகழ்த்தி விட்டார்.

தைமாதம் பிறந்து விட்டால் அடுத்த ஆவணி வரையிலும் அவருக்கு 'பிஸி' சீஸன் தான். மாதத்துக்குக் குறைந்தது ஐந்து முகூர்த்தங்களுக்கு வாசிக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு சமயத்தில் ஒரே முகூர்த்தத்தில் மூன்று நான்கு கல்யாணங்களுக்கு இவரையே 'புக்' செய்வதுமுண்டு. அம்மாதிரி நேரங்களில் தாம் ஒரு கல்யாணத்துக்குச் செல்வார், தம் இரு புதல்வர்களை வேறு இரு கல்யாணங்களுக்கு அனுப்பி வைத்து நிலைமையைச் சமாளிப்பார். ஆறு பேர்களுக்குத் தந்தையான இவரது மற்றொரு புத்திரனே தந்தைக்குத் தவில் வாசித்துக் கொண்டிருக்கிறார். இவர்களைத் தவிர சுவாமிநாதனிடத்து இதுவரையில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் வித்தையைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சுவாமிநாதனின் வாத்தியம் வட இந்தியாவிலும் ஒலித்திருக்கிறது. கல்கத்தா, பம்பாய் டெல்லி, போபால் போன்ற ஊர்களுக்கெல்லாம் சென்று அங்குள்ள சபாக்களில் வாசித்திருக்கிறார்.

ஒருசில பட்டப் பெயர்களைப் பெற்றுள்ள இவர், சினிமாக்களுக்கும் வாசித்திருக்கிறார். ரேடியோக் கச்சேரிகளும் நிகழ்த்தியதுண்டு. இவரைச் சென்ற வருடம் தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தினர் திறமைமிக்க வித்வானாகத் தேர்ந்தெடுத்து ஒரு முழு நேரக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தனர் என்பதனையும் அறிந்து கொண்டு, சுவாமிநாதனிடம் நாம் விடை பெறுகிறோம். தோடி தொடருகிறது...

மண்டபத்தினுள் இன்னும் சிறிது முன்னேறுகிறோம். மல்லிகையின் நறுமணம் நம் சிந்தையைக் குளிர்விக்கிறது. ஜானவாசத்துக்காகப் பிரத்தியேகமாகக் கொண்டு வரப்பட்டுள்ள அந்தக் காரை மலர்களினால் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார் சாரங்கன். வேலை சரியாக நடக்கிறதா என்று மேற்பார்வை புரிந்து வரும் முதலாளி சிதம்பரத்திடம் நாம் பேச்சுக் கொடுக்கிறோம். அந்தக் கல்யாணத்துக்குப் பூ சப்ளை செய்பவர் இவர்தான்.


மயிலை கபாலீசுவரர் கோயிலுக்கு அருகில் காணப்படும் சாயிபாபா பூக்கடைக்கு உரிமையாளரான சிதம்பரத்துக்குப் பூர்வீகம் பூவிருந்தவல்லி. இருபத்தி ஐந்து வருடங்களாகச் சொந்தமாகக் கடை வைத்து நடத்தி வரும் இவர் கல்யாணங்களையே முழுக்க முழுக்க நம்பி வியாபாரத்தில்



இறங்கவில்லை. கல்யாணங்கள் ஒரு 'சீசனி'ல் தான். எனவே அதிக லாபத்தை எதிர்பார்க்க முடிவதில்லை என்கிறார். தவிர பூக்களின் விலை 'காண்டிராக்ட்' பேசும்போது மலிவாக இருக்கலாம். 'சப்ளை' செய்ய வேண்டிய தினத்தன்று விலை கூடிவிடும். அப்போது நஷ்டம் தான் இவருக்கு. தை பிறந்து விட்டால் இவருக்கு நல்ல கிராக்கிதான். இரண்டு,



வழி பிறக்கும்




மூன்று கல்யாணங்களுக்கு ஒரே சமயத்தில் சப்ளை செய்ய வேண்டிய நேரத்தில் இவரது மகன் ஆட்டோ ரிக்‌ஷாவிலும், டாக்ஸியிலும் பறந்து சென்று நேரத்துக்குப் பூ கொடுத்துவிட்டு வருகிறார். ஒரு திருமணத்தில் ஒவ்வொரு சடங்குக்கும் தேவைப்படக் கூடிய பூக்களுக்கான 'லிஸ்ட்' ஒன்று அச்சடித்து வைத்திருக்கும் இவர், கல்யாண வீட்டில் அதைக் காட்டி ஒரு வாரத்துக்கு முன்பே அவர்கள் வசதிக்கேற்ப ஆர்டர் பெற்று வருகிறார்.

அன்றாடம் வெளியூர்களிலிருந்து 'சரக்கு' வரவழைக்கும் சிதம்பரம் தமது கடையில் எட்டுப் பையன்களை வேலைக்கு அமர்த்தியுள்ளார். தினசரி இருபத்தி ஐந்து ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரையில் வியாபாரம் செய்யும் இவர் வெளியூர்களில் நடக்கும் திருமணங்களுக்கும் பூ சப்ளை செய்வதுண்டாம். தவிர, சினிமா ஸ்டூடியோக்களிலும் இவருக்குக் கிராக்கி உண்டு. கல்யாணம், முதலிரவுக் காட்சி இல்லாத சினிமா இக்காலத்தில் ஏது?

சிதம்பரத்திடம் அதிகம் பேச்சுக் கொடுத்தால் அவரது வேலை தடைப்படும் என்ற காரணத்தால் கையில் ஒரு ரோஜாவை எடுத்து முகர்ந்து கொண்டே சாப்பாட்டு அறையில் பிரவேசிக்கிறோம். அங்கு வாசனை மிக்க பன்னீர் ரசம் நம்மை வருக, வருக என்று வரவேற்கிறது.

பந்திக்கு இலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பக்கெட்டுகளில் பல்சுவை விருந்து பரிமாறுவதற்குப் பக்குவமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. சமையல் முடிந்து விட்டது. இனி கவலையில்லை என்ற ஒரு தெம்பில்! தம் களைப்பையும் மறந்தவராக ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை சீவல் போட்டுக் கொண்டிருக்கிறார் 'ஹெட் குக்' மகாலிங்கம்.





'மயிலாப்பூர் மாலி' என்று அழைக்கப்படும் மகாலிங்கம், சிதம்பரத்துக்கு அருகில் உள்ள மணக்குடி என்னும் கிராமத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர். தந்தை செய்து வந்த தொழிலையே மகனும் மேற்கொள்ள எண்ணித் தமது பன்னிரண்டாவது வயதில், அப்பொழுது ஆசிரியர் கல்லூரி முதல்வராக இருந்த கிருஷ்ணமூர்த்தி அய்யர் வீட்டில் வேலைக்கு அமர்ந்தார். தமது பதினைந்தாவது வயதில் காலஞ்சென்ற ஹரிஹர அய்யர் குழுவில் சேர்ந்து விட்டார் மாலி. ஹரிஹர ஐயரையே தமது குருவாகக் கொண்டு இலை போடுவதிலிருந்து 'கல்யாண'ச் சமையல் செய்வது வரை சகலத்தையும் கற்றுக் கொண்டார். முப்பத்தியெட்டு வயது நிரம்பியுள்ள இவர் முதன் முதலாக ஹெட் குக் என்ற ஹோதாவில் 'கோட்டை' அடுப்புக்கு முன் நின்றது நுங்கம்பாக்கம் ராதா கல்யாண உற்சவத்தில்தான்.

''கல்யாணத்தில் சமையல் செய்து ஆயிரக் கணக்கானவர்களுக்குச் சாப்பாடு பரிமாறுவதை நான் புனிதம் மிக்க ஒரு தொழிலாகக் கருதுகிறேன். கன்னிகாதானம் செய்பவர், புண்ணியம் மிக்க அன்னதானமும் செய்கிறார். அதில் எளியேனும் பங்கு பெற வாய்ப்புக் கிடைப்பதற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்'' என்று கூறும் மாலியின் அழைப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு சுமார் ஐம்பது உதவியாளர்கள்

இருக்கிறார்கள். கல்யாண சீசனில் மாதத்துக்கு ஆறு முகூர்த்தங்களுக்குக் குறையாமல் சமையல் செய்யும் இவர் ஒரே முகூர்த்தத்தில் இரண்டு, மூன்று மண்டபங்களுக்கு ஆட்கள் அனுப்பி ஆவன செய்யும் திறமையையும் பெற்றிருக்கிறார்.

''சம்பந்திகளுக்குக் காப்பி சாப்பாடு விஷயத்தில் எள்ளளவு குறையுமில்லாமல் கவனிக்க என் குழுவில் ஒருவனைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். 'சம்பந்தி சங்கரன்' என்றே அவனுக்குப் பெயர்'' என்கிறார் மகாலிங்கம் சிரித்துக் கொண்டே.

கல்யாணங்களில் அடுப்பு எரிய விடுவதற்கு முன் செய்யும் விநாயகர் பூஜையில் கிடைக்கும் தட்சிணைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் கற்பகாம்பாளுக்கு ஓர் அபிஷேகமும் தவறாமல் செய்து வருகிறார்.

இறுதியாகக் கல்யாண மண்டபத்தைப் பார்வையிடலாம் என்ற எண்ணத்தில் கண்களைச் சுழல விடுகிறோம். அதோ இளைஞர் ஒருவர் கையில் சாவிக் கொத்துடன் உதட்டில் புன்னகை தவழ நம்மையே கவனித்துக் கொண்டிருக்கிறார். அவர்தான் அம் மண்டபத்து 'கேர் டேக்கர்' திரு விசுவநாதன்.

எட்டு ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலியிலிருந்து இவர் சென்னைக்கு வந்தபோது இந்தக் கல்யாண மண்டபம் ஒரு சாதாரண வீடாகத்தான் இருந்தது. இதற்குப் பின்புறம் இருந்த 'அவுட் ஹவுஸி'ல் குடியிருந்தார் விசுவநாதன். இவர் வந்த நான்கு ஆண்டுகளுக்கெல்லாம் கட்டிடம் கல்யாண மண்டபமாக மாற்றப்பட்டது. தமது வீட்டில் குடியிருந்த விசுவநாதனையே மண்டப உரிமையாளர் 'கேர் டேக்க'ராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

'கல்யாண முகூர்த்தத் தேதியைக் குறித்துக்கொள்வதற்கு முன்பே சென்னையில் கல்யாணச் சத்திரத்துக்கு முன்பணம் கட்டிவிட வேண்டும்' என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் நடைமுறையிலும் அவ்வாறு செய்ய வேண்டிய நிலைமை விரைவில் ஏற்படும் என்கிறார் விசுவநாதன். சத்திரத்தைப் பார்வையிட வரும் பார்ட்டியிடம் ஒவ்வொரு அறையாகத் திறந்து காண்பித்து மண்டபத்துச் சௌகரியங்களை இவர் விவரிக்கவேண்டும். ரூபாய் ஐயாயிரத்துக்கு அதிகமான மதிப்புள்ள பாத்திரங்கள் இவரது பாதுகாப்பில் உள்ளன. அவைகளைக் கல்யாணப் 'பார்ட்டி'யிடம் ஒப்படைத்துப் பிறகு வாங்கி வைக்கும் பொறுப்பும் இவரைத்தான் சார்ந்தது.

நாம் இப்பொழுது பார்வையிட்டுக்கொண்டிருக்கும் தியாகராயநகரிலுள்ள சர்வமங்கள கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்கள் முகாமிட்டு வசந்த நவராத்திரி பூஜை செய்திருக்கிறார். இதை விசுவநாதன் பெருமிதத்தோடு தெரிவிக்கிறார்.

''ஒவ்வொரு திருமணத்துக்கும் வசூலிக்கப்படும் தொகையிலிருந்து ஒரு கணிசமான தொகை ஸ்ரீ காமகோடி சுவாமிகள் ஏற்படுத்தியிருக்கும் 'கன்னிகாதானம் டிரஸ்டு'க்குக் கைங்கரியமாகக் கொடுக்கப்படுகிறது. அதன் பலனாகத் திருமண தினத்தன்று சுவாமிகள் எங்கு முகாமிட்டிருந்தாலும் தம்பதிகளுக்கு ஆசியுடன் பிரசாதமும் வந்து சேருகிறது'' என்று ஒரு திட்டத்தை விளக்குகிறார் திரு விசுவநாதன்.

தைமாதம் பிறந்துவிட்டால் திருமணமாகாத பெண்களுக்கு மட்டுமல்ல; கல்யாண நிகழ்ச்சிகளில் இன்றியமையாதவர்களான வேறு எத்தனையோ பேர்களுக்கும் வழி பிறக்கிறது.

—குட்சீன்

புதிய பெரிய டின் வாங்கி

இலாபம் அடையுங்கள்

நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதிக போர்ன்விடா கிடைக்கிறது.

இந்தப் புதிய டின் வாங்கும்போது
நீங்கள் பருகும் ஒவ்வொரு
கப் போர்ன்விடாவிற்கும் குறைந்த
விலையே கொடுக்கிறீர்கள்.
பால், சர்க்கரை, மால்ட், கோகோ
இவை யாவும் நிறைந்த ஒரு போஷாக்கு
அளிக்கும் பானம் போர்ன்விடா.
குடும்பம் முழுமைக்கும் ஏற்ற உன்னத
உணவு பானம்

சக்திக்கும் வலிமைக்கும்—
மற்றும் தீஞ்சுவைக்கும்
காட்பரீஸ் **போர்ன்விடா!**



Bensons/1220 TAM

மகாபாரதம்

ராஜாஜி

“உலகத்தை சிருஷ்டித்து, ஜீவகோடிகளை உண்டாக்கிய பிரமன், வளர்ந்து கொண்டே போகும் பூ பாரத்தைக் கண்டு இதற்கு என்ன செய்வது என்று கவலைப்பட்டான். பெருகிக் கொண்டே போகும் உயிர்ச் சமூகத்தை எவ்வாறு தடுப்பது என்று யோசித்து ஒரு வழியும் தோன்றாமல் பிரமனுடைய உள்ளத்தில் கவலை ஏற்பட்டது. அந்தக் கவலையின் வேகம் ஒரு பெரும் சுவாலையாகக் கிளம்பி உலகத்தை ஒரேயடியாக நாசம் செய்வது போல் எழுந்தது. அதன் பின் உலகம் அழிந்து போகும் என்று ருத்திரன் வந்து வேண்டிக் கொள்ள பிரமன் தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டான். அடங்கிய கோபாக்னி மரணம் என்ற சாந்த உருவம் கொண்டு உலகத்தின் பிறப்பும் இறப்பும் சமமாவதற்கு வியாதியும் விபத்துக்களுமாக மக்கள் வாழ்க்கையில் ஓர் இன்றியமையாத பாகமாகவே வேலை செய்து வருகிறது. மரணம் என்பது உலக நன்மைக்காகவே ஏற்பட்ட ஓர் ஒழுங்கு. மரணத்தைக் கண்டு யாரும் துக்கப்படலாகாது. இறந்தவர்களைக் கண்டு பரிதாபப்படுவதற்குக் காரணமே இல்லை. உயிருடன் இருப்பவர்களைப் பற்றியே துக்கிக்க வேண்டும்'' என்று பூர்வ கதைகளையும் இதிகாசங்களையும் தத்துவ விளக்கங்களையும் சொல்லிப் பிதாமகரான கிருஷ்ணத் துவைபாயன ரிஷி யுதிஷ்டிரனைத் தேற்றினார்.

''உலகத்தில் மிக மேன்மை பெற்றுப் பாக்கியமும் மங்களங்களும் அடைந்தவர்கள் எல்லோருமே மாண்டார்கள் என்பது உனக்குத் தெரியாதா? மருத்தன், சுஹோதரன், அங்கன், சிபி, ஸ்ரீராமன், பகீரதன், திலீபன், மாந்தாதா, யயாதி, அம்பரீஷன், சசிபிந்து, கயன், ரந்திதேவன், பரதன், பிருது, பரசுராமன் புகழ் பெற்ற இந்தப் பதினாறு சக்கரவர்த்திகளும் கடைசியில் மரணத்தை அடைந்தார்கள் அல்லவா? நீ உன் புத்திரனைப் பற்றித் துக்கப்பட வேண்டாம். கால விளம்பமில்லாமல் சுவர்க்கத்தை அடைந்தவன் விஷயத்தில் துக்கித்தலே தகாது. துக்கப்படுகிறவனுக்குத் துக்கமே வளரும். விவேகியானவன் சோகத்தை விட்டுக் கடமைகளைச் செய்து நற்பேறு அடைய முயற்சி செய்ய வேண்டும்.'' இவ்வாறு தரும புத்திரனுக்குச் சொல்லி வியாசர் மறைந்தார்.

தனஞ்சயனும் கிருஷ்ணனும் சம்சப்தகர்களோடு போர் புரிந்து அவர்களை வதம் செய்து விட்டுப் பாசறையை நோக்கிச் சென்றார்கள்.

''கோவிந்தா! என்ன காரணமோ தெரியவில்லை. என் மனம் கலக்கம் அடைந்திருக்கிறது. பேச்சுத் தடுமாறுகிறது. காரணமில்லாமல் உள்ளத்தில் துக்கமாக இருக்கிறது. யுதிஷ்டிரர் க்ஷேமமாக இருப்பாரா? அவருக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டு விட்டதோ?'' என்றான் தனஞ்சயன்.

வாசுதேவன், ''தருமபுத்திரர் தம்பிமார்களுடன் க்ஷேமமாகவே இருப்பார். நீ கவலைப்படாதே'' என்றான்.

வழியில் சந்தியா காலத்துக் கடமைகளைச் செய்துவிட்டுத் தேர் ஏறித் தம்மவர்கள் தங்கியிருந்த இடம் சென்றார்கள். பாசறையை நெருங்க நெருங்க அருச்சுனனுக்குச் சந்தேகம் அதிகரித்தது.



''ஜனார்த்தனா! வழக்கம்போல் மங்கள வாத்தியம் ஏதும் காதில் விழவில்லை. எதிரில் காணப்படும் யுத்த வீரர்கள் தூரத்திலிருந்து என்னைப் பார்த்து விட்டுத் தலைகுனிந்து திரும்பிப் போகிறார்கள். இது விபரீதமாக இருக்கிறது. மாதவா! சகோதரர்கள் க்ஷேமமாக இருப்பார்களா? என் மனம் தெளிவு படவில்லை. அபிமன்யு தன் சகோதரர்களுடன் ஏன் சிரித்துக் கொண்டு என்னை இன்று எதிர்கொண்டு வரவில்லை?'' என்றான்.

இவ்வாறு பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

''ஏன் அனைவரும் முகத்தில் தெளிவில்லாமல் துக்கமாயிருக்கிறீர்கள்? அபிமன்யுவையும் இங்கே காணவில்லை. ஏன் ஒருவரும் என்னைக் கண்டு சந்தோஷமாகப் பேசவில்லை? துரோணர், பத்ம வியூகம் வகுத்தார் என்று கேள்விப்பட்டேன். *சௌபத்திரனைத் தவிர அதை உடைத்துப் பிரவேசிக்கத் தெரிந்தவன் உங்களுள் ஒருவனும் இல்லை. அபிமன்யு அந்த வியூகத்தைப் பிளந்து உள்ளே சென்றானா? உள்ளிருந்து வெளிவருவதை நான் அவனுக்கு உபதேசிக்கவில்லை. அவன் கொல்லப்பட்டானா?'' என்று நடந்த விஷயத்தைத் தானாகவே ஊகித்துவிட்டுக் கேட்டான்.

விஷயம் அறிந்ததும், ''ஐயோ! என் பிள்ளை யமனுக்கு அதிதியாகிவிட்டானா? யுதிஷ்டிரரும் பீமசேனனும் திருஷ்டத்யும்னனும் பராக்கிரமசாலியான சாத்யகியும் இருக்கையிலேயே சுபத்திரையின் மகனைப் பகைவர்களுக்குக் கொடுத்து விட்டீர்களா? சுபத்திரைக்கு என்ன சமாதானம் நான் சொல்லுவேன்? திரௌபதியைக் கண்டு என்ன சொல்லுவேன்? உத்தரைக்கு யார் என்ன ஆறுதல் சொல்ல முடியும்?'' என்று அருச்சுனன் புலம்பினான்.



புத்திர சோகத்தால் தவிக்கும் வீரனுக்கு வாசுதேவன், ''அப்பனே! நீ இவ்வாறு துக்கித்தல் தகாது. க்ஷத்திரியர்களாகப் பிறந்த நமக்கு ஆயுதங்களே உயிர். ஆயுதங்களே மரணம். யுத்தத்தில் பின்வாங்காத சூரர்களுக்கு எப்போதும் மிருத்யுவானவன் கூடவே இருக்கும் நண்பன். சூரர்களுக்கு அகால மரணம் ஏற்படுவது சகஜமல்லவா? புண்ணியம் செய்தவர்களுக்குரிய மேலுலகத்தை அபிமன்யு அடைந்தான். யுத்தத்தில் மரணத்தை அடைய வேண்டும் என்று வீரர்கள் விரும்பி ஆசைப்படுகிறார்கள் அல்லவா? அபிமன்யு அடைந்த மரணம் க்ஷத்திரியர்களுக்கு விதிக்கப்பட்ட சனாதன லட்சியம். நீ அதிகமாகத் துக்கப்பட்டால் உன் சகோதரர்களும் மற்ற அரசர்களும் மனநிலை இழப்பார்கள். மற்றவர்களுக்குச் சமாதானமும் தைரியமும் வழங்குவாயாக! சோகத்தை நீக்கு'' என்றான்.

வீரனான மகன் இறந்த முழுக் கதையைச் சொல்ல வேண்டும் என்று தனஞ்சயன் கேட்க யுதிஷ்டிரன் சொன்னான்:

'' 'பத்ம வியூகத்தைப் பிளந்து எங்களுக்கு வழி உண்டு பண்ணினாயானால் நாங்களும் உன்னைத் தொடர்ந்து உள்ளே புகுவோம். உன்னைத் தவிர இந்த வியூகத்தை உடைக்கத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. உன் தந்தைக்கும் மாமனுக்கும் பிரியமான காரியத்தைச் செய்வாயாக' என்று நான் அபிமன்யுவை ஏவினேன். உடைக்க முடியாத அந்த வியூகத்தைப் பிளந்து வழி செய்து கொண்டு உள்ளே பால வீரன் பிரவேசித்தான். முன்னால் தீர்மானித்திருந்தபடி நாங்கள் அவனைத் தொடர்ந்து சென்றோம். பாதகனான ஜயத்ரதன் தடுத்துவிட்டான். பிளக்கப்பட்ட வியூகம் மறுபடியும் அடைக்கப்பட்டு விட்டது. நாங்கள் உள்ளே போக முடியாதபடி ‡சைந்தவன் செய்துவிட்டான். க்ஷத்திரிய தர்மத்துக்கு விரோதமாக மகாரதர்கள் பலர் ஒன்று சேர்ந்து சூழ்ந்து கொண்டு தனியாக நின்ற அபிமன்யுவைக் கொன்றார்கள்.''

நடந்ததையெல்லாம் இவ்வாறு யுதிஷ்டிரன் சொன்னான்.

''ஆ, புத்திரனே!'' என்று கதறி அருச்சுனன் பூமியில் வீழ்ந்தான். மூர்ச்சை தெளிந்த பின் எழுந்திருந்து, ''என் மகன் மாய்வதற்குக் காரணமான ஜயத்

---

*சௌபத்திரன்-சுபத்திரையின் மகன் - அபிமன்யு.

‡ சைந்தவன்-சிந்து தேசத்து அரசன்-ஜயத்ரதன்.

ரதனை நாளைய தினம் கொல்லப் போகிறேன். யுத்த களத்தில் அவனைக் காக்க துரோணரும் கிருபரும் வந்தாலும் ஆசார்யர்களான அவர்களையும் அம்புகளுக்கு இரையாக்குவேன். இது என் பிரதிக்ஞை!'' என்று சொல்லிக் காண்டிபத்தை டங்காரம் பண்ணினான். கண்ணன் பாஞ்சஜன்யத்தை முழக்கினான்.

பீமசேனன், ''இந்த டங்காரமும் இந்தச் சங்கின் ஒலியும் தார்த்தராஷ்டிரர்களுடைய நாசத்தின் ஒலியேயாகும்'' என்றான்.

83. சிந்து ராஜன்

அபிமன்யுவின் வதத்துக்குக் காரணமாயிருந்த சைந்தவ ராஜனை அடுத்த நாள் சூரியாஸ்தமனத்துக்குள் கொல்லப் போகிறேன் என்று அருச்சுனன் பிரதிக்ஞை செய்தது சாரணர்களால் துரியோதனனுடைய கூட்டத்துக்குத் தெரிந்தது.

விருத்தக்ஷத்திரன் என்பவன் பிரசித்தி பெற்ற சிந்து ராஜன். பெரும் தவம் செய்து ஜயத்ரதனைப் புத்திரனாக அடைந்தான். குழந்தை பிறந்த போது அசரீரி, ''இந்த ராஜகுமாரன் புகழ் பெற்று விளங்குவான். உலகத்தில் 'எக் காலத்திலும் சூரர்களால் கொண்டாடப்பட்ட க்ஷத்திரிய சிரேஷ்டன் ஒருவனால் இவன் தலை வெட்டுண்டு தேக வியோகம் அடைந்து மேலுலகம் சேருவான்'' என்று சொல்லிற்று.

பிறந்த உயிர்களெல்லாம் இறக்க வேண்டும் என்பது தெரிந்திருந்த போதிலும், அறிவாளிகளுக்கும் தவம் செய்து ஞானம் பெற்றவர்களுக்கும் கூட மரணமானது துக்கத்தை விளைவிக்கிறது. விருத்தக்ஷத்திரன் புதல்வனுடைய மரணத்தைப் பற்றி அசரீரி சொன்னதைக் கேட்டு மிகவும் துயரப்பட்டான். ''இந்த வாக்கு உண்மையாயின், என் மகன் தலையை எவன் பூமியில் தள்ளுவானோ அவன் தலையும் அந்தச் சமயம் சுக்குநூறாக வெடித்துச் சாகவேண்டும்'' என்று சாபமிட்டான்.

ஜயத்ரதனுக்கு வயது வந்ததும், அவனை அரசனாக அமைத்து விட்டு விருத்தக்ஷத்திரன் நாட்டை விட்டு விலகித் தவத்தில் தன் வாழ்நாளைக் கழித்து வந்தான். குருக்ஷேத்திரம், என்று பின்னால் புகழ் பெற்ற ''சியமந்த பஞ்சகம்'' என்ற மைதானத்துக்கு அருகில் ஓர் ஆசிரமத்தில் இருந்து வந்தான்.

அருச்சுனனுடைய பிரதிக்ஞையைப் பற்றிக் கேட்டதும் தன் முடிவு அசரீரி வாக்கின்படி வந்து விட்டதோ என்று ஜயத்ரதன் சந்தேகப்பட்டுத் துரியோதனனிடம் சென்று, ''எனக்கு இனி இந்த யுத்தம் வேண்டாம். நான் என்னுடைய நாட்டுக்குப் போகிறேன்'' என்றான்.

''சைந்தவனே! நீ அஞ்ச வேண்டாம். இத்தனை க்ஷத்திரிய வீரர்களும் நின்று உன்னைக் காப்பாற்றுவார்கள். கர்ணன், சித்திரசேனன், விவிம்சதி, பூரிசிரவசு, சல்லியன், விருஷசேனன், புருமித்திரன், ஜயன்போஜன், காம்போஜன், சுதட்சிணன், சத்திய விரதன், விகர்ணன், துர்முகன், துச்சாதனன், சுபாஹு, காளிங்கன், அவந்தி ராஜாக்கள், துரோணர், துரோண புத்திரர், சகுனி, இவ்வளவு பேர்களும் நானும் இருக்க, நீ போவது சரியாகாது. என்னுடைய முழுச் சேனையும் உன் காப்புக்காகக் கட்டளையிடப்படும். நீ இந்தச் சமயம் விலகிப் போக வேண்டாம்'' என்று துரியோதனன் வற்புறுத்த ஜயத்ரதனும் ஒப்புக் கொண்டான்.

துரோணரிடம் சென்று, ஜயத்ரதன், ''குருவே! எனக்கும் அருச்சுனனுக்கும் நீர் ஆசாரியராக இருந்தீர். எங்களுக்குள் சிட்சையில் என்ன தாரதம்மியம் கண்டீர்?'' என்று கேட்டான்.

''அப்பா! உனக்கும் அருச்சுனனுக்கும் நான் பேதமின்றி ஆசார்யக் கடமைகளைச் செய்தேன். சிட்சை ஒன்றேயாயினும் அப்பியாசத்தினாலும் கஷ்டமான தவத்தாலும் உன்னைக் காட்டிலும் அருச்சுனன் மேலானவன். ஆயினும் பயப்பட வேண்டாம். அருச்சுனனால் தாண்ட முடியாத வியூகத்தை வகுத்து அதற்குப் பின்புறமாக உன்னை வைப்போம். உன் மூதாதைகளின் தருமத்தை அனுசரித்து யுத்தம் செய். நாம் எல்லோருமே ஏதோ ஒரு வரிசைக் கிரமப்படி யமனால் தொடரப் பட்டவர்களாகப் பரலோகம் போவோமல்லவா? தபஸ்விகள் அடையும் லோகத்தை க்ஷத்திரியன் சுலபமாகவே யுத்தத்தில் அடைவான். பயத்தை விடு'' என்றார்.

விடிந்ததும் ஆயுதம் தரித்தவர்களில் சிறந்தவரான துரோணர் சேனையை அணிவகுத்தார். ஜயத்ரதனும், அவனுக்குக் காப்பாக பூரிசிரவசும், கர்ணனும், அசுவத்தாமனும், சல்லியன், விருஷசேனன், கிருபர் இவர்களும் எல்லா விதப் படைகளுடன் பன்னிரண்டு மைல் தூரத்தில் பின்னால் விலகி நின்றார்கள். அதற்கும் பாண்டவ சேனைக்கும் இடையில் துரோணர் பெருஞ் சேனையைச் சகட வியூகத்தில் அமைத்தார். சகட வியூகத்துக்கு அப்பால் பத்ம வடிவத்தில் உள் வியூகம் ஒன்று ஏற்படுத்தினார்.

அந்தப் பத்ம வியூகத்துக்கும் அப்பால் ஊசி முக வியூகம் வகுத்தார். அந்த ஊசிமுக வியூகத்தின் காப்பில் ஜயத்ரதன் நின்றான். சகட வியூகத்தின் முகத்தில் துரோணர் நின்றார். வெண்ணிறக் கவசமும், வஸ்திரமும் தலைக் காப்பும் தரித்து நின்ற துரோணர் மிகவும் பிரகாசித்தார். சிவப்பு நிறக் குதிரைகள் பூட்டிய அவருடைய ரதத்தின் துவஜத்தில் யாக வேதிகையும், மான் தோலும் விளங்கின. அது காற்றில் ஆடியதைக் கண்ட கௌரவர்கள் உற்சாகம் கொண்டார்கள். வியூகத்தின் பலத்தைப் பார்த்துத் துரியோதனன் தைரியமடைந்தான்.

ஃ ஃ ஃ

ஆயிரம் தேர்களும், நூறு யானைகளும், மூவாயிரம் குதிரைகளும், பதினாயிரம் காலாட் படைகளும், விற்கள் பிடித்து நின்ற வீரர்கள் ஆயிரத்து ஐந்நூறு பேரும் கூடிய படையுடன் திருதராஷ்டிர புத்திரன் துர்மர்ஷணன் என்பவன் கௌரவ சேனைக்கு முன் நின்று கொண்டு சங்கம் ஊதி அறைகூவினான்.

''யுத்தத்தில் ஜயிக்க முடியாதவனும் கோபம் கொண்டவனுமான தனஞ்சயன் எங்கே? அவன் எங்கள் மேல் போர் புரிந்து கல் மேல் போடப்பட்ட மண் குடம் போல் உடைபடுவதை உலகம் இப்போது பார்க்கப் போகிறது'' என்றான்.

ஒன்றரை அம்புப் பாய்ச்சல் தூரத்தில் அருச்சுனன் தன் தேரை நிறுத்திச் சங்கை ஊதிப் பிரதித்வனி செய்தான். உடனே கௌரவ சேனையிலும் சங்கங்கள் ஊதப்பட்டன.

''கேசவா! துர்மர்ஷணன் இருக்கும் இடத்தை நோக்கித் தேரை நடத்து. அங்கிருக்கும் யானைப் படையைப் பிளந்து நுழைவோம்'' என்றான்.

துர்மர்ஷணுடைய படை அருச்சுனனால் சிதறியடிக்கப்பட்டது. பெருங் காற்றினால் அலைக்கப்பட்ட மேகங்களைப் போல் படையங்கங்கள் அங்குமிங்கும் பறந்தன. அதைக் கண்டு துச்சாதனன் மிக்க கோபம் கொண்டு பெரிய யானைப் படையுடன் வந்து அருச்சுனனைச் சூழ்ந்து கொண்டான்.

துச்சாதனன் கெட்ட பாபியானாலும் மிக்க பராக்கிரமசாலி. கடுமையாக யுத்தம் நடத்தினான். அருச்சுனனால் வீழ்த்தப்பட்ட யுத்த வீரர்களால் போர்க்களமானது கோரமான காட்சியாயிற்று. துச்சாதனனுடைய சேனை தைரியமிழந்து துன்பமடைந்து புறங்காட்டிற்று. துச்சாதனனும் பின்வாங்கித் துரோணர் நின்ற இடத்துக்குச் சென்றான்.

சவ்யசாசியினுடைய* தேரும் விரைவாகத் துரோணருக்கு அருகில் சென்றது. ''நரசிரேஷ்டரே! புத்திரனை இழந்த துக்கத்தால் பீடிக்கப்பட்டு சிந்து ராஜனை நோக்கி வந்திருக்கிறேன். என் பிரதிக்ஞையை நிறைவேற்ற அனுக்கிரகிப்பீராக!'' என்றான் தனஞ்சயன்.

ஆசார்யர் புன்னகை செய்து ''அருச்சுனனே! என்னை ஜயிக்காமல் ஜயத்ரதனை நீ அடைய முடியாது'' என்றார். யுத்தம் ஆரம்பித்தது. வில்லை வளைத்து அருச்சுனன் மேல் துரோணர் அம்புக் கூட்டங்களை இறைத்தார்.

பார்த்தனும் அம்புகளால் துரோணரை அடித்தான். அவற்றைத் துரோணர் தம் அம்புகளால் அநாயாசமாகத் தடுத்துவிட்டுக் கிருஷ்ணனையும் அருச்சுனனையும் நெருப்புப் போல் எரியும் பாணங்களால் பீடித்தார். பாண்டவன் துரோணருடைய வில்லை அறுப்பதற்கு நிச்சயித்தான். அதற்காக அம்பை எடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே துரோணர் அருச்சுனனுடைய வில்லின் நாணை அறுத்து விட்டார். பிறகு சிரித்துக் கொண்டே அவன் பேரிலும் குதிரைகளின் பேரிலும் தேரின் பேரிலும் நாலா பக்கமும் அம்புகளைப் பொழிந்தார். அருச்சுனன் கோபங் கொண்டு ஆசாரியரை அடக்க வேண்டுமென்று பல பாணங்களை ஒன்றாகத் தொடுத்துப் பிரயோகித்தான்.

துரோணர் ஒரு விநாடியில் சிஷ்யனை மிஞ்சுகிறவராகி அம்பு மழையைப் பொழிந்து அருச்சுனனையும் அவன் தேரையும் இருட்டில் மறைத்தார்.


கண்ணன் துரோணருடைய பராக்கிரமத்தைக் கண்டு, ''பார்த்தனே! கால விளம்பம் கூடாது. துரோணரை விட்டுச் செல்வோம். இந்தப் பிராமணருக்குச் சிரமமென்பதேயில்லை'' என்றான்.

அதன் பேரில் கண்ணன் அருச்சுனனுடைய தேரைத் துரோணருக்கு இடது பக்கமாக ஓட்டிச் சேனையை நோக்கிச் சென்றார்கள்.


''எங்கே போகிறாய்? யுத்தத்தில் சத்துருவை ஜயிக்காமல் நீ செல்பவனல்லவே! நில், நில்!'' என்று துரோணர் சொன்னதற்கு அருச்சுனன்,

''தேவரீர்! எனக்கு ஆசாரியர். சத்துருவல்ல! நான் உமக்கு சிஷ்யன். உம்முடைய மகனைப் போன்றவன். உம்மை யுத்தத்தில் தோல்வி அடைவிக்கக்கூடியவன் உலகத்தில் இல்லை'' என்று சொல்லி விட்டு விரைவாகத் துரோணரை விட்டு விலகிக் கௌரவ சேனையை நோக்கிச் சென்றான். [தொடரும்]

* சவ்யசாசி - அருச்சுனன்.



அழகுக்கும் ஒரு வரி!





கொறிப்பதற்குக் கொஞ்சம்..

இலங்கையின் உள்துறை அமைச்சரான ஸ்ரீ விஜயாநந்த தகநாயகே என்பவர் சமீபத்தில் ஓர் அற்புதமான யோசனையை வெளியிட்டிருக்கிறார்: அதாவது, 'பெண்களுக்கு அழகு வரி விதிக்க வேண்டும்!' என்று சொல்லியிருக்கிறார்.

உண்மையிலேயே அவர் சொன்னபடி செய்து பார்த்தால் என்ன?

அழகுக்கு வரி விதிப்பதென்று தீர்மானித்து விட்டால், உடனடியாக 'அழகு வரி இலாகா' என்று ஒன்றை ஆரம்பிக்கலாம். மந்திரிகள் முதல் எம். எல். ஏ.க்கள் வரை யார் யாரைச் சிபாரிசு செய்தாலும் அவர்களுக்கெல்லாம் அந்த இலாகாவிலே வேலை போட்டுத் தரலாம். அழகு வரிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக 'அழகுவரிக் கமிஷனர்', 'அழகு வரி அப்பீல் அதிகாரி', 'அழகு வரி ஸ்பெஷல் ஆபீசர்', 'அழகு வரி இன்ஸ்பெக்டர்கள்' என்று உத்தியோகங்களை 'உற்பத்தி' பண்ணலாம்.

'அழகு வரி' விதிப்பு வந்த பிறகு லேடீஸ் கிளப்புகளிலெல்லாம் அதைப் பற்றிய பேச்சே அடிபடும். அதிலும், ஸ்ரீ தகநாயகே சொல்லியிருப்பது போல் பெண்கள் தங்கள் அழகைத் தாங்களே நிர்ணயம் பண்ணி வரி செலுத்த வேண்டும் என்று ஏற்பாடு பண்ணி விட்டார்களானால் தீர்ந்தது!

''மிஸஸ் ராமநாதன் விஷயம் தெரியுமா உங்களுக்கு? இந்த வருஷம் ஒன்பது ரூபாய் ப்யூட்டி டாக்ஸ் கட்டியிருக்கிறாள்!... ஒன்பதாயிரம் என்று புளுகிக்கொண்டிருக்கிறாள்!'' இப்படிப் பேச்சை ஆரம்பிப்பாள் ஒரு பெண்மணி.

''அழகுவரி அதிகாரிகள் இவளுடைய 'அஸெஸ்மெண்ட்' சரிதான் என்று ஒப்புக் கொண்டார்களாமா?''

''ஒப்புக் கொள்ளாமல்? ஆனா மட்டும் சொல்லிப் பார்த்தாளாம். ஒரு பைசாகூட அதிகமாக வாங்க முடியாதுன்னுட்டானாம் ஆபீஸர். எவ்வளவோ 'இன்ஃப்ளுயன்ஸ்' பண்ணிப் பார்த்தாள் ..... ஒண்ணும் நடக்கவில்லை!''

இதைத் தொடர்ந்து மிஸஸ் ராமநாதன் அவ்விடம் வரும்வரையில் ஒரே சிரிப்பும் கொம்மாளமும்தான்!

அழகு வரி விதிப்புக்குப் பின் லோக் சபாவில் கேள்வி நேரம் படுசுவாரசிய மாக அமையக் கூடும்.

ஓர் உறுப்பினர்: அழகு வரி விதிப் புச் சட்டத்தின்கீழ் அதிகப்படியாக வரிகட்டியிருக்கும் முன்னணி சினிமா நடிகைகள் குறித்தும் அவர்கள் எவ் வளவு தொகை அதிகப்படி வரி செலுத்தியிருக்கிறார்கள் என்பது பற் றியும் கனம் நிதியமைச்சர் அவர்கள் தகவல் தர முடியுமா?

நிதியமைச்சர்: முன்னணி நடிகை யர் மட்டுமல்ல; நம் நாட்டில் இன் றைக்குச் சினிமாத் துறையில் இருக் கிற அத்தனை நடிகைகளுமே போட்டி போட்டுக் கொண்டு அதிகப்படியாக அழகு வரி கட்டியிருக்கிறார்கள்.

உறுப்பினர்: இம்மாதிரி உண்மைக் குப் புறம்பான விஷயங்களைச் சொல் லித் தங்கள் அழகை அதிகப்படியாக மதிப்பிட்டு, அதிக வரி செலுத்தி யிருப்பவர்களின் மீது என்ன நட வடிக்கை எடுக்க உத்தேசம்?

அமைச்சர்: குறைந்தபட்சம் அவர் களுக்கெல்லாம் ஏதாவது ஒரு விருது கொடுப்பதென்றும், இந்த விருதுக் குப் 'பத்ம சௌந்தரியம்' என்று பெயரிடலாம் என்றும் நினைக்கிறோம்.

உறுப்பினர்: இந்தப் புதிய சூழ் நிலையில் அழகுப் போட்டிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுபற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அழகுப் போட்டிகள் நடத்தப் பண உதவி செய்யலாமே?

அமைச்சர்: அதுபற்றி யோசித்து வருகிறோம்.

உறுப்பினர்: இந்த அழகு வரியை ஆண்களுக்கும் நீடித்தால் என்ன?

அமைச்சர்: கனம் உறுப்பினர் தமக்கும் அப்படி ஒரு வரி செலுத்தச் சந்தர்ப்பம் கிடைக்குமென்று எண்ணு கிறார் போலிருக்கிறது! (சிரிப்பு)

உறுப்பினர்: இல்லை; ஆளும் கட்சி யினரில் எத்தனை பேருக்கு வரி விதிப்பு விழுகிறதென்று பார்க்கலாம் என் பதே என் எண்ணம்! (பலத்த சிரிப்பு)

சினிமா நட்சத்திரங்கள் பெறும் ஊதியம் பற்றி இப்போது பல வதந்திகள் உலவுகின்றன அல்லவா?. அதேபோல, அவர்கள் அழகு வரி கட் டுவது பற்றியும் நிறைய வதந்திகள் உலவக் கூடும். ''ரீனு குமாரி வருடத்துக்கு மூன்று கோடி ரூபாய் அழகு வரி கட்டுகிறாளாமே!'' என்றோ, ''கன்ட்ராக்டில் கையெழுத் துப் போடும்போதே அந்த வருஷத்து அழகு வரியைத் தயாரிப்பாளர்தான் கட்ட வேண்டும் என்று லலிதஜெயா கண்டிஷன் போடுகிறாளாமே!.....'' என்றோ வதந்திகளை உலவ விடுவர்.

பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடு கிறவர்கள் பத்திரிகைகளில் செய்யும் விளம்பரங்களில் மற்றப் பெருமை களுடன், ''பெண் வருஷத்துக்கு ஐயாயிரம் ரூபாய் அழகு வரி கட்டு கிறாள்!'' என்ற வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். அதே மாதிரி, பெண் தேடுபவர்கள், ''இத் தனை ரூபாய்க்குக் குறையாமல் அழகு வரி செலுத்துகிற பெண்களின் தகப்ப னார்கள் மட்டுமே அணுகவும்'' என்று நிபந்தனை விதிக்கலாம்.

''இந்தியாவிலேயே அதிகமாக அழகு வரி கட்டும் சினிமா நடிகை... உபயோகிப்பது எங்கள் 'கொழ கொழா' சோப்பைத்தான்'' என்று சோப்புக் கம்பெனிக்காரர்கள் விளம் பரம் பண்ணலாம்.

இவ்வளவுக்கும் இடம் கொடுக்கிற இந்த வரி விதிப்பிலே சில கஷ்டங் களும் இருக்கத்தான் செய்கின்றன. ''வாங்குகிற சம்பளத்தையெல்லாம் ரேசிலேகொண்டுபோய்த் தொலைத்து விடுகிறார்!'' என்று பெண்மணிகள் இப்போது குறைப்பட்டுக் கொள்வது போகக் கணவன்மார்கள், ''அதை ஏன் கேட்கிறாய் போ! போன மாசச் சம்பளம் முழுவதையும் வரி கட்டித் தீர்த்துட்டாள்!'' என்று அழலாம்.

''அதெப்படி அறுபது வயதானவர் களுக்கு அழகு வரி கிடையாது என்று சொல்லலாம்? இளமை வேறு; அழகு வேறு...நான் இன்னமும் அழகாகத் தானே இருக்கிறேன்!'' என்று அழகு நட்சத்திரத்தின் அறுபத்தைந்து வய துப் பாட்டி அரசாங்கத்துடன் சண் டைக்கு வரலாம்.

''பவுடர், ஸ்நோ, லிப்ஸ்டிக், பொய்ப்பல், சவுரி இவற்றை வைத்து ஏமாற்றி அழகு வரி அதிகமாகக் கட்டியிருக்கிறார்கள்...எனவே, இவர் களைச் சட்டப்படி தண்டிக்க வேண் டும்!...'' என்று சிலரைக் குற்றம் சாட்டி அதிகாரிகளுக்கு மொட்டைக் கடிதாசுகள் வரலாம். அதைத் தொடர்ந்து எத்தனையோ வேடிக் கைகள் நிகழக் கூடும்.


இப்படி நம்முடைய நகைச் சுவை உணர்ச்சிக்குப் பெருமளவில் தீனி போடுகிற ஒரு சந்தர்ப்பத்தை நாம் நழுவ விடலாமோ?

மொரார்ஜி பாய், உங்களைத் தானே! இந்த விஷயத்தைக் கொஞ் சம் கவனியுங்களேன்! —**எஸ். வி. ஆர்.**





நேற்றும் நாளையும்



வேலைபார்க்கும் பெண்டிர்

ஸ்ரீமதி கோவிந்தம்மா சோமசுந்தரம்

மெட்ரிக் முடித்துவிட்டுத் திருச்சி ஹோலி கிராஸில் இண்டர் படித்தேன். அப்போது எனக்குக் கல்யாணமும் நடந்தது. இவர் திருச்சியிலேயே ஹாஸ்டலில் தங்கி செண்ட் ஜோஸப்பில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தார். ஊரில் புக்ககம். இருவரும் சனி ஞாயிறுகளில் ஊருக்குப் போவோம். அங்கே புருஷனும் மனைவியுமாய் ஒன்றாகக் கோவிலுக்குப் புறப்பட்டாலும் பெரியவர்கள் துணை வந்து விடுவார்கள் !

இவர் பி.ஏ. பரீட்சை எழுதியதும் கோடை விடுமுறைக்குப் பர்மாவில் என் அண்ணன் வீட்டுக்கு வந்தார். பரீட்சை முடிவு தெரியு முன்னரே அங்கே இவருக்கு வேலை கிடைத்து விட்டது! நமக்கு சிம்லா, ஊட்டி போல அங்கே மேமியோ. அந்த ஊரில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தொடங்கிய ஒரு பள்ளிக் கூடத்தில் இவர் தலைமை ஆசிரியர். நான் பார்த்த முதல் உத்தியோகம் இவர் பள்ளிக் கூடத்தில் ஓர் ஆசிரியையாகத்தான். இப்படி இரண்டு வருஷங்கள் வேலைபார்த்தேன். தமிழ் நாட்டிலிருந்து தொலைதூரத்தில், ரயில்வே, ராணுவம், தபால் இலாகாக்களில் வேலை பார்த்து வந்த பல தமிழ்க் குடும்பத்துக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் வேலை ஒரு தொண்டு போல இருந்தது.

கொஞ்ச நாளில் இவர் மிலிடெரி என்ஜினீரிங் சர்வீஸில் சேர்ந்து விட்டார். பல ஊர்களுக்குப் போனபடி இருப்பார். எங்கள் வாழ்க்கையில் ஒரு பெரும் பிரளயம் நேர்ந்தது. பர்மாவை ஜப்பானியர் ஆக்கிரமித்தனர். பர்மியர் இந்தியரை வெறுக்கத் தொடங்கினர். வேலையை இழந்து, பாடுபட்டுச் சேர்த்த சொத்துக்களை இழந்து, உடுத்த அரைத் துணியுடன் ஆயிரக்கணக்கானவர் தாய்நாட்டுக்குத் திரும்ப ஆரம்பித்தனர். கப்பல் ஏற அறுபத்து மூவர் கூட்டத்தைப் போல் நூறு மடங்குக் கூட்டம். இதிலே இருபத்தைந்து முப்பது பெண்கள் ஒரு கோஷ்டியாகப் புறப்பட்டோம். ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாக, நடந்த ஒவ்வோர் அடியும் ஒரு கண்டமாக, நான் குழந்தைகளுடன் எப்படி வந்தேனோ— ஒரு பயங்கரக் கனவு போல இருக்கிறது. ராணுவத்தில் இருந்த இவர் திரும்பிய அநுபவங்கள், அப்பப்ப, அது ஒரு தனிக் கதை !

பட்டேல் காட்டிய கருணையின் ஆணையால் பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு இந்திய அரசாங்க வேலைகள் கிடைத்தன. இவர் தபால் இலாகாவில் சேர்ந்தார்.

சில வருஷங்களுக்குப் பின் தபால் இலாகாவில் வேலைக்கு ஆள் எடுத்த போது நானும் மனுப் போட்டேன். குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு வேலையும் செய்து சிரமப்பட வேண்டுமா என்று இவர் ஆரம்பத்தில் தடுத்துப் பார்த்தார். ஆனால் புதிய குடும்பப் பொறுப்புக்கள் எதிர்நோக்கி இருந்தன. குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்கவும் ஆசைப்பட்டோம். 'இறந்த' கடிதங்களுக்கு 'உயிர் ஊட்டும்' டி. எல். ஓ. (டெட் லெட்டர் ஆபீஸ்) ஆதலால் வேலை ரசமாக இருக்கிறது.

எத்தனையோ விதங்களில் அனுசரித்துப் போக வேண்டியிருந்தது. விடியற்காலையில் எழுந்து சீக்கிரம் காப்பிக் கடையை முடித்து விட்டு, குழந்தைகளைக் குளிக்க அனுப்பி விட்டு, ஓர் அடுப்பில் உலையும் ஒன்றில் பருப்பும் போட்டுவிட்டு, சுற்று வேலைகளைக் கவனிப்பேன். குழந்தைகளைப் பள்ளிக்கூடம் போகத் தயாரிப்பது, சமையலை முடிப்பது, பகல் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்வது, சில சமயம் இரவுச் சமையலுக்கு முன்னதாகச் செய்ய வேண்டியவை எல்லாம் கவனித்து, ஒன்பது மணிக்குள் நானும் தயாராக வேண்டும். ஆள் இருந்தாலும் சமையலை நானேதான் கவனிப்பேன். இரண்டு பெண்களுக்குக் கலியாணம் செய்து அனுப்பி, வீட்டுக்கு நாட்டுப்பெண் வந்த பிறகும் இந்தச் சுறுசுறுப்புப் பழக்கம் உதவியாக இருக்கிறது.

குழந்தைகளுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியே போவது, காலையில் பூசை, மாலையில் கோவில் எல்லாம் உண்டு. வெள்ளிக்



கிழமை வீட்டுப் பகவுக்கு நானே அலங்காரம் செய்தால்தான் திருப்தி. என்னதான் ஆள் வைத்தாலும் நமது வீட்டை நாமே பார்த்துக் கொள்வது போலாகுமா?

முதலில் எங்கள் உறவினர் எல்லாரும் நான் வேலை பார்த்ததை ஆதரித்ததாகச் சொல்ல முடியாது. ஒரு மாதிரியாகச் சிலர் பேசினார்கள். ஆனால் அதெல்லாம் பாராட்டியிருந்தால் ஒரு பையனை டாக்டருக்குப் படிக்க வைத்திருக்க முடியுமா?

புதிதாக வேலைக்கு வரும் இளம் பெண்களின் பெற்றோருக்கு ஒன்று சொல்வேன். அவர்கள் அன்பாக இருக்கப் பழக வேண்டும். வேலைக்குப் போகும் பெண்கள் அடக்கத்திலும் ஆடையிலும் அக்கறை காட்டுவது மிகவும் அவசியம்.

குமாரி லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

எங்கள் குடும்பத்தில் நான்தான் மூத்த பெண். விமான உபசரணி ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்கேற்ற படிப்பு, சரளமான பேச்சு, உயரம், பர்ஸனாலிடி, ஆர்வம் எல்லாம் உண்டு. ஆனால் விமானப் பயணத்திலுள்ள ஆபத்தை நினைத்து என் பெற்றோர் இணங்கவில்லை. இத்தனைக்கும் அப்பா விமானப் படையில் இருந்தவர். இப்போது அமெரிக்காவில் வேலை பார்க்கிறார்.

கல்லூரிப் படிப்புக்குப் பின் முதலில் மவுண்ட்ரோடில் பிரபல கம்பெனியில் விற்பனைப் பிரிவில் வேலை பார்த்தேன். வாழ்க்கையின் பல தரங்களில் உள்ளவர்களும் வரும் இடம். 'விதம் விதமான ஜனங்கள். விதவிதமான பழக்கங்கள். பொறுமையுடன் அவர்களுக்கு விளக்கிச் சொல்வதும் விற்பனை செய்வதும் நல்ல பயிற்சிதான்.

எல்லாரும் அவசியத்துக்குத்தான் வேலை செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. என்னைப் போல் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதற்காகவே சிலர் உத்தியோகத்தில் இருக்கிறோம். இப்போது நான் விளம்பரக் கம்பெனி ஒன்றில் செக்ரடரியாக இருக்கிறேன். 'ரிஸப்ஷனிஸ்ட்' வேலை ஒரு தனி மாதிரி. நாம் பேசுவதையும் நடந்து கொள்வதையும் வைத்தே பலர் நமது ஸ்தாபனத்தைப் பற்றி எடை போடுவார்கள். பெரிய பெரிய புள்ளிகளுடன் பழக நேரிடும். பார்ட்டிகளுக்கும் போக வேண்டியிருக்கும். ''உன்னை யாரையும் விடவேண்டாம்'' என்று 'பாஸ்' சொல்லுவார். அப்போதென்று தேடி வருபவர் மரியாதைப் பட்டவராயிருப்பார்! இந்த மாதிரி தர்ம சங்கடங்களை நாசூக்காகச் சமாளிக்க வேண்டும். வேலைக்கு வந்த புதிதில் இப்படித்தான் ஒருவர் 'பாஸை'த் தேடி வந்தார். எனக்குக் கொடுத்திருந்த உத்தரவுப்படி அவரை வரவேற்பறையில் இருத்தி விட்டு, உள்ளே அவரது வருகையை அறிவித்தேன். வரச் சொன்ன பிறகுதான் முறையாக அவரை உள்ளே அனுப்பி வைத்தேன். அப்புறம் தான் தெரிந்தது, அவரும் கம்பெனியில் ஒரு 'பார்ட்னர்' என்பது !

பல ஆபீஸ்களில் பெண்கள் நிறையப் பேர் இருப்பதால் அவர்கள் தனிப் பிரிவாகப் பழக முடியும். தனி அறை, டாய்லட் என்று மொத்தமாகச் சில சௌகரியங்கள் பெற முடிகிறது. ஒரே ஒரு பெண் மட்டுமே இருக்கும் ஆபீசானால் கொஞ்சம் கஷ்டம்தான்.

எனக்குத் தெரிந்து எல்லா ஆபீசிலும் பெண்களை நன்றாகத்தான் நடத்துகிறார்கள். ஆனால் ஆபீஸுக்குப் போகவர பஸ் பிரயாணம் செய்யும்போதுதான் சௌகரியமாக இல்லை!

பல குடும்பங்களிலும் வேலை பார்க்கும் பெண்கள் இருப்பதால் இப்போது பெண்கள் வெளியே போய் வேலை பார்ப்பதைப் பற்றிப் பொதுவாக வம்பு பேசுவதில்லை. யாருக்கும் அக்கறையும் இல்லை.

எனக்குத் தெரிந்த செல்வ பெண் ஒருத்திக்குக் கல்யாணமானதும் அவள் கணவர், வேலையை விட்டுவிடச் சொன்னார். ''எதற்குக் கண்டவர்களோடு பழக வேண்டும்?'' என்றாராம். புருஷனின் அந்தஸ்தும் இருக்கிறதல்லவா ?


இவ்வாறாக வேலை பார்ப்பதைத் திருமணம் பாதிக்கிறது. அதே போல் திருமணத்தை வேலை பார்ப்பது பாதிக்கிறது.

கல்யாணம் பேசி, எல்லாம் சரியாக இருந்தாலும், ''இந்தப் பெண்ணா ! எல்லோரோடும் பழகுகிறாளே, வேலை பார்க்கிறாளே'' என்று பின் வாங்கும் மாப்பிள்ளைகளையும் நான் பார்க்கிறேன். உத்தியோகத்தில் பல பெண்களோடு பழகுவது சகஜமானாலும், தன் மனைவி என்று வரும்போது ஆண்கள் பார்க்கும் பார்வையே தனிதான். இதெல்லாம் மாற நாளாகலாம்.


கல்யாணமானாலும் வேலை பார்க்கலாம் என்பதே என் அபிப்பிராயம். ஏனெனில், என்னதான் புரட்சி மனப்பான்மை இருந்தாலும் சில அடிப்படை விஷயங்களில் நாங்கள் மாறவில்லை. மாறவும் மாட்டோம். குடும்பத்தை — வீட்டைக் கவனித்துக் கொள்வதற்கு எப்படியும் பொழுது கிடைக்கிறது. சமைப்பது, க்ளீனிங், வாஷிங், எல்லாம் 'ரொடீன்' தானே.

வேலை பார்க்கும் இடங்களில் பெண்கள் அளவாகப் பழகினால் பல பிரச்னைகள் எழுவதில்லை. அன்பாக, மரியாதையாக இருக்கலாம். யாருடன் பழகினாலும் 'பிஸினஸ் லைக்'காக இருக்க வேண்டும் என்பேன். அளவுக்கு அதிகமான அந்நியோந்நியம் ஆபத்துத்தான்! பேட்டி: **அம்பி ஆசீர்வாதம்**


அடுத்த பேட்டி: **பட்டணத்தில் வைத்தியர்**



007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
பம்பாய் விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரிகளும் போலீஸாரும் விஷயமறிந்து சுறுசுறுப்பு அடைவதற்கு முன் பாலு ஒரு டாக்ஸியில் ஏறி "சலோ!" என்றான். டாக்ஸி விமான நிலையத்தை விட்டுக் கிளம்பி விரைந்தது.
சற்று தூரம் சென்றபின் பாலு டிரைவரிடம் நயமாகப் பேசினான், தனக்குத் தெரிந்த அரை குறை ஹிந்தியில்.
எனக்கு நீ உதவி செய்வாயா? ப்ளீஸ்! நான் ஒரு பக்காத் திருடனைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.
விவரமாகச் சொல்ல இப்போது நேரம் இல்லை, என்னை நம்பு!
என்ன, தம்பி! 'ஜோக்' அடிக்கிறாயா?
டாக்ஸி ஓட்டிய சிங்ஜி நல்லவன். முதலில் ஏளனமாகப் பேசினாலும் பிறகு பாலுவின் முகத்திலிருந்த தெளிவு அவனைக் கவர்ந்தது.
FOR HIRE
தம்பி, என்ன செய்ய வேண்டும் சொல்!
காரைச் சாலை ஓரமாக நிறுத்திக் கொள்! பானெட்டைத் திறந்து வைத்து இஞ்சினில் ஏதோ ரிப்பேர் செய்வது போல் சற்று நேரம் பாசாங்கு செய்!
அச்சா!
டிரைவர் அவ்வாறே நடந்து கொண்டான். பாலு காரை விட்டு இறங்கி அதன் மறு பக்கம் மறைவாக நின்று கொண்டான். சற்று நேரத்தில்...
... ஒரு போலீஸ் ஜீப் அவ்வழியே பறந்தது.
ஆ! திருட்டுத் தனமாக விமானமேறி வந்திருக்கிறேன் என்பதற்காக என்னைப் பிடிக்கத் துரத்தி வந்தவர்களாய் இருக்க வேண்டும். நல்லவேளை! பழுதடைந்து போன டாக்ஸி பற்றி அவர்களுக்குச் சந்தேகம் எழவில்லை.
POLICE


ஜீப் சென்று மறைந்த சற்று நேரத்தில் பாலு எதிர்பார்த்தது நடந்தது! இன்னொரு கார் அவனைத் தாண்டி விரைந்தது.
அதோ சந்திரன்! அவனை அழைத்துப் போகக் கூட்டாளி ஒருவன் விமான நிலையத்துக்கு வந்திருந்தான் போலும்!
பாலு டாக்சியில் பாய்ந்து ஏறினான்.
சீக்கிரம் அந்தக் காரை 'ஃபாலோ' பண்ணு!
டீக் ஸாரு!
FOR HIRE
காரும் டாக்சியும் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றன. சந்திரனின் கூட்டாளி அனுபவஸ்தன்.
நம்மை யாரும் பின் தொடரக் காரணம் இல்லைதான். இருந்தாலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லதல்லவா? பின்னால் டாக்சியில் வருபவனை உனக்குத் தெரியுமா, பார்!
தலையைத் திருப்பிப் பார்த்தான் சந்திரன்.
ஆ! அட ராஸ்கல்! எப்படி என்னைப் பின் தொடர்ந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தான் இவன்!
சந்திரனின் கூட்டாளி தன் கோட்டின் உட்புறமிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்தான்.
யாரவன்? நமக்குத் தொல்லை தரக் கூடியவனா?
தொடரும்....









1. சென்னை துறைமுகப் பொறுப்புக் கழக ஊழியர் நல மன்றத்தினர் அமரர் கல்கியின் நினைவு நாளைக் கொண்டாடினர். ஸ்ரீமதி வசுமதி ராமசாமி, திருவாளர்கள் அகிலன், சாண்டில்யன், கொத்தமங்கலம் சுப்பு முதலானோர் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர்.

2. புதுதில்லி சௌத் இந்தியா கிளப்பின் ஆண்டு விழாவில் குமாரி விலாசினியின் பரதநாட்டியம் சிறப்பாக நடைபெற்றது. மத்திய சர்க்கார் ரயில்வே மந்திரி திரு புஞ்சா இவ்வைபவத்துக்குத் தலைமைவகித்தார்.

3. பம்பாய் பாரதிய கலா மன்றத்தினர் பாரதி விழாவோடு தமிழ் அறிஞர் சா. கணேசன் அவர்களின் மணி விழாவையும் நடத்திக் கௌரவித்தனர். தமிழக அமைச்சர்கள் திரு கருணாநிதி, திரு நெடுஞ்செழியன் ஆகியோர் இவ்விழாக்களில் பங்கு பற்ற பம்பாய் வந்திருந்தனர்.

4. தொல்பொருள் ஆய்வுத்துறை பதிப்பித்துள்ள 'மாமல்லை' நூலின் வெளியீட்டு விழாவில் தமிழக அரசு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் முதல் நூலைத் திரு டி. ஆ. பெ. விசுவநாதத்திடம் தருகிறார்.

5. சென்னை ஓவியக் கல்லூரியில் பயிற்சி பெறும் ஏழு சைத்ரிகர்களின் ஓவியக் கண்காட்சியைக் கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன் தொடங்கி வைத்து இளம் கலைஞர்களை வாழ்த்தினர். ●





கிளிஞ்சல் கோபுரம்

அத்தியாயம் பதினொன்கு

வந்தனா

முத்துசிவனுக்கு ஒரே வியப்பு, திகைப்பு! அந்த நாடகக் கொட்டகையில் நிறைந்திருந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்தே அவன் அவ்வாறு மலைத்தான்.

'ரட்சகனின் நாடகத்தைப் பார்க்க இவ்வளவு கூட்டமா? ஜனங்களிடத்தில் அவனுக்கு இத்துணை செல்வாக்கா?'

மலைப்படைந்த முத்துசிவன் மற்றொரு காட்சியையும் கண்டு அதிசயித்தான். அதாவது, அந்த நாடகம் பார்க்க வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் உயர் வகுப்பு டிக்கெட் வாங்கியவர்களாகவே இருந்தார்கள்; கீழ் வகுப்புக்களில் ஒரு பத்துப் பதினைந்து பேர்களே தென்பட்டனர். முதலாவது, இரண்டாவது வகுப்புக்களுக்குப் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் டிக்கெட் கட்டணம். இந்த வகுப்பு வரிசைகளில் பெண்களும் முதியவர்களுமே மிகுதியாகக் காணப்பட்டனர். பெண்கள் கூட்டம் அதிகமாய் இருந்ததால் இரைச்சலும் மேலோங்கி விட்டிருந்தது. பற்றாக்குறைக்குப் பிள்ளை குட்டிகளின் கூப்பாடு வேறு தியேட்டரையே கலகலக்க வைத்தது.

'ரட்சகன் பெரிய ஆள்தான்! நாடக உலகில் அவன் பெரும் புள்ளியாகப் பிரபலமடைந்து விட்டிருக்கிறான்



ஜெகஜ்ஜம்பயன்

என்பதற்கு இங்கே வந்திருக்கும் ஜனக் கூட்டமே சான்று !' என்று தனக்குள் பிரமிப்புடன் எண்ணிய வாறு டிக்கெட் கொடுக்கும் இடத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினான் முத்துசிவன்.

என்ன ஆச்சரியம் ! அங்கே ஓர் ஈ, காக்கைகூடக் காணோம்! டிக்கட் விற்க உட்கார்ந்திருந்தவர்கள் பரிதாபமாகக் கோட்டுவாய் விட்டுக் கொண் டிருந்தார்கள் !

சரிதான். டிக்கட்டெல்லாம் ஏற் கனவே விற்றுகி விட்டன போலும். இங்கு வந்திருப்பவர்கள் முன்பே டிக்கட்டுகளை வாங்கி ரிஸர்வ் செய்து விட்டவர்களா யிருக்கலாம்.

''ஹலோ, சார் ! வணக்கம் சார்!''

தன் ஜேபியிலிருந்த டிக்கட்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு முதல் வகுப்பு நுழைவாயிலை நோக்கி நடந்து சென்ற முத்துசிவன் இந்தக் குரல் கேட்டு மெல்லத் திரும்பினான்.

வக்கீல் வேடத்துக்குரிய அரை குறை மேக் — அப்புடன் இருந்த ரட்சகன் தியேட்டருக்குப் பின்னு விருந்து வெகு உற்சாகத்தோடு ஓடி வந்து முத்துசிவனின் கையைப் பிடித் துக் குலுக்கினான். ''வாங்க சார் ! நீங்க வருவீங்கன்னு நான் கனவுகூடக் காணலே சார் ! எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலே சார் ! உங்க வருகை என்னை ரொம்பப் பெருமைப் படுத்திடுச்சு சார் !''

முதலில் அவனை இன்னாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடி யாமல் விழித்த முத்துசிவன் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''அடடே, ரட்சகனா! என்னப்பா இது. ஆளே மாறிப் போயிருக்கிறே !'' என்று சிரித்தான்.

நாடகத்தில் பிரதான வேடமேற்று நடிக்கவிருப்பவனான ரட்சகனே ஓடி வந்து அத்தனை பணிவும் குழைவுமாக முத்துசிவனை வரவேற்றதைக் கண்ட ரசிக மகாஜனங்கள், 'யார் இந்தப் பெரிய மனிதன்?' என்று ஒருவரை யொருவர் இரகசியமாகக் கேட்டவாறு ஆவலும் வியப்புமாய் எட்டிப் பார்த்த னர். சிலர் அவர்கள் இருந்த இடத்தை நோக்கி வரவும் தொடங்கினர்.

இதையெல்லாம் ஜாடையாகக் கவ னித்த முத்துசிவனுக்கு உள்ளூறப் பெருமையா யிருந்தது. அதனால் அவன் இன்னும் கொஞ்சம் கம்பீரமாக நிமிர்ந்து, முகத்தில் பெரிய மனிதத் தோரணைக்கான புன்னகையைப் படர விட்டுக் கொண்டான்.

அரைகுறையான மேக்கப்புடன் இருந்த தன்னையும் ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதைக் கடைக்கண்ணால் நோட்ட மிட்டுக் கொண்ட ரட்சகனுக்கு மேலும் உற்சாகம் கிளர்ந்து விடவே, ''வாங்க சார் ! வந்து உட்காருங்க சார் !'' என்று முன்னைவிட அதிகக் குழை வுடன் தன் இரு கைகளையும் நீட்டிக் காட்டியவாறு தியேட்டருக்குள் செல்ல அவசரமாக முன்னால் சென்றவன், ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் சட்டென்று நின்று நாடக பாணியில் நெற்றியை வருடியபடி ஒரு கணம் யோசித்தான். பிறகு சடாரெனத் திரும்பி, ''சார், ஒரு சின்ன வேண்டு கோள் ! தயவுபண்ணி என்னோடு கொஞ்சம் வருகிறீங்களா ?'' என்று பவ்யமாகக் கேட்டான்.

அவனுடைய பேச்சும் பாவனைகளும் முத்துசிவனுக்குச் சிரிப்பை வரவழைத்

தன. ''என்னப்பா, விஷயம்?'' என்றான் சிரித்துக் கொண்டே.

''என் சக நடிகர்களெல்லாம் உங்களைப் பார்க்க ரொம்ப ஆவலாக இருக்கிறாங்க சார்!''

''என்னை அவர்களுக்குத் தெரியாதே!''

''நான் முன்னமே உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறேன், சார்! இந்த நாடகத்துக்கு நீங்க வந்தாலும் வருவீங்கன்னும் சொல்லி வைச்சேன். என் அதிர்ஷ்டம் வந்துட்டீங்க. அதனால் உங்களை அவங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கணும்னு ஆசைப்படறேன். அது எனக்கு ரொம்பப் பெருமையாயிருக்கும். தயவுபண்ணி ஓர் ஐஞ்சு நிமிஷம் வந்துவிட்டுத் திரும்பிடுங்க சார்!''

நயக்கப் புன்னகை புரிந்த முத்துசிவன் மறுத்துச் சொல்லக் காரணம் எதுவும் புலப்படாமல் போகவே, ''சரி; வா!'' என்றவாறு மேடையின் பின்புற வாசலை நோக்கி நடந்தான்.

ரட்சகனுக்குப் படுகுஷியாகி விட்டது. வெற்றிப் பெருமிதத்துடன் 'ராஜ நடை' போட்டு முன்னால் சென்றான் அவன்.

''ஏம்பா, ரட்சகன்! இப்பவே மணி ஆறே முக்காலுக்கு மேல் ஆகிப் போச்சே, இனி மேல் நாடகத்தை எப்ப ஆரம்பிக்கப் போறே? எப்ப முடிக்கப் போறே?'' என்று குறும்பாகச் சிரித்துக் கேட்டான் முத்துசிவன்.

''இதோ, இன்னும் பத்தே நிமிஷத்தில் நாடகம் ஆரம்பமாயிடும் சார்!''

''ஏன் இவ்வளவு தாமதம்? தியேட்டர்தான் நிரம்பி வழியறதே! குறிப்பிட்ட நேரப்படி ஆரம்பிச்சிருக்கலாமே?''

சுற்று முற்றும் பார்த்த ரட்சகன், ''ஒரு சின்னத் தகராறு சார்! அதான் கொஞ்சம் லேட்டாயிடுச்சு!'' என்றான் இரகசியக் குரலில்.

''தகராறா? என்ன நடந்தது?'' என்று சற்றே திடுக்குற்றாற் போல் கேட்டான் முத்துசிவன்.

''பயந்துடாதீங்க, சார்!'' என்று நகைத்த ரட்சகன், ''என்னைப் பார்த்தாலே அது தெரியலையா, சார்?'' என்றான் அலட்சியமாக.

''தெரியல்லையே! என்னப்பா விஷயம்?''

''ஒண்ணுமில்லே, சார்!.... எங்க மேக்-கப் மேன் நடுவாந்தரத்திலே 'திருப்பதி வேலை பண்ணிப்பிட்டான். அதாவது, எல்லாருக்கும் பாதிப் பாதி மேக்கப் போட்டுவிட்டு, பாக்கிப் பணம் இருபத்தஞ்சை இப்பவே வைச்சால்தான் மீதி மேக்-கப்பை முடிப்பேன்னு சொல்லி உட்கார்ந்துட்டான்.''

''அட, கஷ்டமே! அப்புறம் என்ன ஆச்சு?''

''எங்க நாடக மன்றத்தின் 'பேட்ர'னுக்கு ஆள் அனுப்பினேன்.''

''எதற்கு?''

''உடனே இருபத்தஞ்சு ரூபாய் பணம் கொடுத்து அனுப்பச் சொல்லி!''

''யாரப்பா அந்தப் பேட்ரன்?''

''என் மாமனார்தான் சார்!''

முத்துசிவன் இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தான். சிரித்துக் கொண்டே, ''அட, பாவி!'' என்றவாறு ரட்சகனின் முதுகில் ஒரு 'ஷொட்டு'ப் போட்டான். ''பணம் கொடுத்தனுப்பினாரா உன் மாமனார்?''

''பின்னே, கொடுக்காமல் இருப்பாரா? கொடுக்கலேன்னா என்ன ஆகும்னு அவருக்கே தெரியும்!''

''என்ன பண்ணுவே?''

''நாடகத்திலே ரெண்டு வசனங்களைப் புதுசாச் சேர்த்துக்குவேன்! அந்த வசனங்கள் என் மனைவியின் காதில் விழுறப்பலே உரக்கவும் பேசி விடுவேன்.''

''உன் ஒய்ஃபும் இந்த நாடகத்துக்கு வந்திருக்குதா, ரட்சகன்?''

''ஐயோ, அவளுக்கு நாடகம்னா உயிர் சார்! அதிலும் என் நாடகத்தைப் பார்க்கலேன்னா மூணு நாள் சாப்பிட மாட்டாள். நாடகக் கலை மேல் அவ்வளவு மோகம். பிரமாதமா விமர்சனமும் பண்ணுவாள்.''

''ஓகோ!'' என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்ட முத்துசிவன், ''அது சரி; உன் மாமனார் பணம் கொடுக்கலேன்னா என்னமோ டயலாக் பேசி விடுவேன்னு சொன்னயே, அது என்ன டயலாக்?'' என்று வினவினான்.

''அதெல்லாம் தொழில் ரகசியம் சார்!'' என்று கூறி ஒரு வில்லன் புன்னகை பூத்த ரட்சகன், 'கிரீன் ரூமு'க்குள் நுழைந்தான். முத்துசிவனும் அவனைப் பின்தொடர்ந்தான்.

காயலான் கடை போல் காட்சியளித்தது அந்த 'கிரீன் ரூம்'. அங்கே ஒரு பத்துப் பன்னிரண்டு நடிகர்களும், இரண்டு நடிகைகளும் காணப்பட்டனர். அவர்களில் சிலருக்கு அப்போது தான் வெகு ஜரூராக மேக்-கப் நடந்து கொண்டிருந்தது. மற்றும் சிலர் நிலைக் கண்ணாடிகளில் தங்கள் வேஷத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர், நாடக வசனங்களைத் தமக்குத் தாமே பேசிப் பார்த்து ஒத்திகை நடத்திக் கொண்

டிருந்தனர். இன்னும் சில நடிகர்கள், நடிகைகளிடம் நெருங்கி நின்று தமாஷ் பண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பெரிய அறையின் கால்வாசிப் பகுதியை ஓட்டுப் பலகையால் தடுப்புக் கட்டி மற்ருெரு சிறிய அறையாக்கப் பட்டிருந்தது. அவ்வறையின் வாசலில் அழுக்கேறிய திரையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அங்கேயும் யாருக்கோ மேக்-கப் போடும் வேலே நடந்து கொண்டிருக்கிறது போலும்.

உற்சாகத்துடன் உள்ளே வந்த ரட்சகன் அங்கிருந்த தன் சகாக்களே யெல்லாம் அமர்ந்தவாக ஏறிட்டுப் பார்த்தான். முத்துசிவனே கூச்சப் புன்னகையுடன் தயங்கித் தயங்கிப் பின்னல் வந்து நின்முன்.

மறுகணம், ஓர் அதிசயம் நிகழ்ந்தது! ஆமாம்; சற்றும் எதிர்பாராத விதமாக ரட்சகன் தடாலென்று முத்துசிவனின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினன். இதைக் கண்டு திடுக்குற்றுப் போன முத்துசிவன் சட்டென்று பின்னல் நகர்ந்து பதற்றத்துடன் குனிந்து, ''அடடே, என்னப்பா இது?'' என்று குழறிக் கொண்டே அவனேத் தூக்கி நிறுத்திஞன். பதிலேதும் சொல்லாமல், தன் உடம்பில் அப்பிக் கொண்டுவிட்ட தும்பு தூசுகளேத் தட்டித் துடைத்தவாறு புன்முறுவலுடன் சற்று ஒதுங்கிப் போய் நின்று கொண்டான் ரட்சகன்.

அடுத்து, அங்கிருந்த நடிகர்களும், ஒருவர்பின் ஒருவராக வந்து முத்துசிவனே வணங்கினர். ஆனல் எல்லாரும் ரட்சகனேப் போல் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிடவில்லே; சிலர் ஒற்றை முழந்தாளிட்டு ஒரு ஸ்டைலாகக் கும்பிட்டனர். மற்றும் சிலர் குனிந்து வணங்கினர். வேறு சிலர் கையைமட்டும் குவித்து நமஸ்காரம் பண்ணினர். அந்த இரு நடிகைகளும் அவனுடைய காலேத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

வெலவெலத்துப் போன முத்துசிவன் அப்படியே பிரமித்து நின்ருன். நடிக — நடிகையர் நடிக்கப் போகு முன், அல்லது நடித்து முடித்தபின் தங்கள் மதிப்புக்குரிய பெரிய மனிதர் யாரையாவது பார்க்க நேர்ந்தால் அவரது காலில் விழுந்து வணங்கி ஆசி பெறுவது என்ற நாடகக் கலே உலகச் சம்பிரதாயத்தைக் கேள்விப் பட்டிராததாலேயே திகைத்துத் திக்குமுக்காடிப் போனுன் அவன்.

அவனுடைய கையைப் பிடித்துச் சற்றே முன்னல் இழுத்து நிறுத்திய ரட்சகன் தன் சகாக்களே நோக்கி, ''இவர்தான் நான் அடிக்கடி உங்களிடமெல்லாம் புகழ்ந்து பேசி வரும் மிஸ்டர் முத்துசிவன்! நகரில் பிரபலமான கால்நடைத் தீவன உற்பத்திக் கம்பெனியின் விநியோகப் பிரிவில் உதவி மானேஜராகப் பணியாற்றுகிருர். எனது முன்னுள் அதிகாரியாக இருந்தவர்; இந்நாள் ஆத்ம நண்பராக இருப்பவர். நல்ல கலாரசிகர். நாடகக் கலே வளர வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் உள்ளவர். அதற்காகப் பல வகையிலும் உதவி செய்து என்னே ஊக்கி வருபவர். ஆனல் அடக்கத்தின் காரணமாய் அதையெல்லாம் வெளியில் சொல்லிக் கொள்ள விரும்பாதவர்'' என்று நாடக வசனம் பேசுவதுபோல் கிடுகிடுவெனச் சொல்லி நிறுத்திவிட்டு முத்துசிவனேத் திரும்பிப் பார்த்து ஒரு பெருமிதப் புன்முறுவல் பூத்தான்.

'தன்னேப் பற்றித் தனக்கே தெரியாத சங்கதிகளேயெல்லாம் இவன் இப்படி இஷ்டத்துக்கும் சரடு விட்டுப் புகழ்கிருனே!' என்று உள்ளூறச் சங்கடப்பட்டுக் கொண்ட முத்துசிவன் பார்வையைக் கீழே தாழ்த்தியபடி இளநகை புரிந்தான்.


ரட்சகன் தன் சகாக்களே இப்போது முத்துசிவனுக்கு அறிமுகப் படுத்தத் தொடங்கினன். முதலில், கண் தெரியாத பிச்சைக்காரன் வேடத்தில் இருந்த நடிகரைக் காட்டி, ''இவர் பெயர் விசுவநாதன்....'' என்று ஆரம்பிப்பதற்குள் முத்துசிவன், ''ஓகோ!'' என்று அலட்சியமாகத் தலேயாட்டினன். ரட்சகன் சிரித்துக் கொண்டே தொடர்ந்து, ''இவர் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் இஞ்சினியராயிருக்கிருர்! இவரோட தந்தை பெரிய வக்கீல்!'' என்ருன்.

திடுக்குற்றுப் போன முத்துசிவன் அந்தப் 'பிச்சைக்கார' வேடத்தில் இருந்த இஞ்சினியரை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான். 'அடடா, ஒரு பெரிய இடத்துப் பெரிய மனிதரை இந்த நாடக வேடத்தில் பார்த்து ஏமாந்து அலட்சியமாகத் தலேயாட்டிவிட்டேனே!' என்று வருந்தியவனுய் அவருடைய கையைப் பற்றிக் குலுக்கி, அன்பும் மரியாதையுமாகப் புன்முறுவல் பூத்தான்.

அடுத்து, நீதிபதி வேடத்தில் கம்பீரமாக நின்றிருந்த ஓர் ஆசாமியைக் காட்டி, ''இவன் பெயர் மாணிக்கம்....'' என்று ரட்சகன் ஆரம்பித்த உடனேயே முத்துசிவன் அந்த

உங்களுக்கென சொந்தமாக ஒரு வீடு

இப்பொழுது இந்தக் கனவை நனவாக்க உதவுகிறது எல்.ஐ.சி. வீடு கட்டிக்கொள்வதற்கென, அல்லது குடியிருப்பதற்கு ஒரு புது வீடு வாங்க நியாயமான வட்டிக்கு கணிசமான கடனைத் தருகிறது. நிபந்தனைகள் சுலபமானவை. உங்களுக்கு ஒரு மனை இருக்க வேண்டும். வீடு கட்டும் செலவுக்கென்றும், இதர சில்லறைச் செலவுகளுக்கும் சுமாரான ஆரம்ப



முதலீடும், அங்கீகாரம் பெற்ற திட்டங்களின் கீழ், போதுமான தொகைக்கு ஆயுள் இன்சூரன்சுப் பாலிசியும் இருக்க வேண்டும். கடனை அடைப்பதற்கான தவணைக் காலம் முடியும்வரை நீங்கள் உயிருடனில்லாவிட்டால்கூட, உங்கள் அன்புக் குடும்பத்தினர், சொந்த வீட்டில் பத்திரமாக இருப்பார்கள். நினைக்கும்போதே மனதிற்கு நிம்மதியாக இருக்கிறது, இல்லையா?



இந்தத் திட்டம் குறிப்பிட்ட சில நகரப் பகுதிகளில்தான் அமலில் இருக்கிறது. மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து அருகிலுள்ள எல்.ஐ.சி. டிவிஷனல் ஆபீசை அணுகுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு

போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை

'நீதிபதி'யைப் பணிவும் குழைவுமாகப் பார்த்து இரு கரங்களையும் குவித்து, ''வணக்கம், சார்!'' என்றான். ரட்சகன் கலகலவெனச் சிரித்துக் கொண்டே, ''இவன் ஒரு பாங்கியிலே அட்டெண்டராயிருக்கிறான் சார்! இவனுடை ஆத்தாக்காரி என் மாமனார் வீட்டில் வேலை செய்கிறாள்!'' என்றான்.

இதைக் கேட்ட முத்துசிவன் குவித்த கரங்களைச் சட்டென்று தொங்கப் போட்டுக் கொண்டான். அவன் முகத்தில் அசடு வழிந்தது. ''அப்படியா? ரொம்ப சந்தோஷம்!'' என்றவாறு அந்த 'நீதிபதி'யின் முதுகைத் தட்டிக் கொடுத்து விட்டு அப்பால் நகர்ந்தான்.

இவ்வாறே இன்னும் சில நடிகர்களை ரட்சகன் அறிமுகப்படுத்த, அவர்களில் யார் யாருக்கு எந்தெந்த மரியாதை கொடுப்பது என்று புரியாமல் தட்டுத் தடுமாறித் திணறிப் போனான் முத்துசிவன்.

நடிகர்களை அறிமுகப்படுத்திய பின் நடிகைகள் பக்கம் திரும்பினான் ரட்சகன். ''இதுவும், அதுவும்... வந்து...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அம்மாமி வேடத்திலிருந்த நடிகையும், காலேஜ் குமாரி வேடத்திலிருந்த நடிகையும், முத்துசிவனின் கரங்களை ஆளுக்கொருவராகப் பிடித்துக் குலுக்க ஆரம்பித்து விட்டனர்.

முத்துசிவனுக்குக் குப்பென்று வேர்த்துக் கொட்டியது. வெட்கத்தால் உடல் கூசிக் குறுகி, முகம் ஜிவ்வென்று சிவந்து கன்றியது. இவ்வளவு பேர் முன்னிலையில் அந்தப் பெண்கள் இப்படித் தன் கையைப் பிடித்து விட்டார்களே என்று தவிப்படைந்த அவன், அவர்களுடைய பிடியிலிருந்து நழுவிக் கொள்ள முயன்றான்.

அவனுடைய திண்டாட்டத்தைக் கண்டு உரக்கச் சிரித்த ரட்சகன், ''ஆமாம், சார்! இவன் ஒரு ரேடியோ கம்பெனியிலே கிளார்க் வேலை பார்க்கிறான்; பெயர் வரதராஜன்! அவன் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அரசிதழ் பதிவுபெறு ஊழியனாகப் பணியாற்றுகிறான்; பெயர் துரைராசன்!'' என்றான்.


அந்த 'அம்மாமி'யும், 'காலேஜ் குமாரி'யும் ஒருவரோடொருவர் தோள்களை இடித்துக் கொண்டு ஆண் குரலில் சிரித்ததைக் கேட்டு முத்துசிவனும் வாய் விட்டு நகைத்தான்.

அறிமுகப் படலம் ஆனபின் ரட்சகன் தன் சகாக்களிடம் போய் ஏதோ இரகசியம் பேசினான். அவர்களில் சிலர் மேடையின் கடைசித் திரையை விலக்கிப் பிடித்து எதையோ கவலையுடன் எட்டி எட்டிப் பார்த்துவிட்டு வந்தனர். ஜனக்கூட்டம் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கிறார்கள் போலும்! தியேட்டர்தான் நிரம்பி வழிகிறதே, இவர்கள் வேறு எதற்காகக் கவலைப்படுகிறார்கள்?

முத்துசிவன் அந்த அமெச்சூர் நடிகர்களை உள்ளார்ந்த வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தான். அவர்களெல்லாம் மாலை மூன்று அல்லது நான்கு மணிக்கே காரியாலயங்களில் லீவு போட்டு விட்டு வந்து இம்மாதிரியான வேஷங்களை ஒப்பனை செய்துகொள்வதில் ஈடு பட்டிருப்பார்கள் போல் தோன்றியது. ஏனென்றால், வர்ணப் பவுடரைக் குழைத்துப் பூசி விதம் விதமான மீசையும் தாடியும் 'கம்' போட்டு ஒட்டிக் கொண்டிருந்ததால் அந்த ஒட்டுப் பிசினும், பவுடர் பசையும் காயக் காய முகச் சருமம் வறண்டு வலிக்க, அவ்வேதனையை அவர்கள் மிகப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது அவர்களின் வாடிய முகங்களைப் பார்க்கும்போதே நன்றாகத்

எழுத்தாள நண்பர்களுக்கு

பெர்க்லி - கல்கி சிறுகதைப் போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான ஒரு நற்செய்தி. போட்டிக்கு வந்த கதைகளின் பூர்வாங்கப் பரிசீலனை முடியும் தறுவாயில் உள்ளது. பஞ்சாயத்தார்களின் முடிவினைத் தமிழ்ப் புத்தாண்டையொட்டி வெளியிட இயலும் என்று நம்புகிறோம்.— ஆசிரியர்



தெரிந்தது. இவர்களுக்கு ஏன் இந்தத் தலையெழுத்து?...ஆனாலும், அடடா! அவர்கள்தான் எவ்வளவு உற்சாகத்தோடும் பரபரப்போடும் தாங்கள் மேடையில் நடிக்கவிருக்கும் அந்தப் பொன்னான நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

''வாங்க, சார்! இன்னும் ஒரே ஒருத்தரை உங்களுக்கு அறிமுகப்படுத்திடறேன்!'' என்று சொல்லிக் கொண்டே ஒட்டுப் பலகையால் தடுப்புக் கட்டியிருந்த அறைக்குள் நுழைந்தான் ரட்சகன். அந்த அறை வாசலில் தொங்கிய அழுக்குத் திரை தன் மீது பட்டுவிடாதபடி இடது கையால் மெல்ல ஒதுக்கிப் பிடித்து ஒதுங்கிக் குனிந்து உள்ளே சென்ற முத்துசிவன், ஏதோ தான் வரக் கூடாத இடத்துக்கு வந்துவிட்டாற் போன்ற கூச்ச மிரட்சியுடன் அப்படியே திகைத்து நின்றான்.

காரணம், அங்கே மின்விளக்குகளின் சூழலில் நிறுத்தப் பட்டிருந்த பெரியதொரு நிலைக்கண்ணாடியின் எதிரில் ஓர் அதிரூப லாவண்யமான நங்கை ஒயிலாக நின்று தன்னை ஒப்பனை செய்து கொள்வதில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தாள். பளபளப்பான சாட்டின் பாவாடையும், ஜிகினா வேலைப்பாடு செய்த கிரேப் சில்க் சோளியும் அணிந்திருந்த அவள், இனிமேல்தான் தாவணியை உடுத்த வேண்டும் — அந்த மெல்லிய நைலான் தாவணி அவளது இடது தோளில் சும்மா ஒப்புக்குத் தொற்றிச் சரிந்து கிடந்தது.

நிலைக்கண்ணாடி வைக்கப் பட்டிருந்த மேசைக்குப் பக்கவாட்டில் ஒரு பழைய சோபா கிடந்தது. அதில் வயதான பெண்மணியொருத்தி செருக்கும், மிடுக்குமாக அமர்ந்து, வெள்ளியாலான சிறு பெட்டியைத் திறந்து மடியின் மீது வைத்துக் கொண்டு சுவாரசியமாக வெற்றிலை போடுவதில் கவனமாயிருந்தாள்.

''என்ன, மேக்—கப் எல்லாம் முடிஞ்சுதா? இன்னும் அஞ்சு நிமிஷத்திலே நாடகத்தை ஆரம்பிச்சுடப் போறேன்! நீ ரெண்டாவது சீன்லே என்டராகணும்; ஞாபகமிருக்குது இல்லே?'' என்றான் ரட்சகன் அமர்த்தலாக.

ஆனால் அவளோ அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் நிலைக்கண்ணாடியிலே பிரதிபலித்த முத்துசிவனின் உருவத்தைக் கண்டு வியப்படைந்தவளாய்த் தன் தோளில் தொங்கிய தாவணித் துண்டைச் சாவதானமாக இடுப்பில் சுற்றி மேலாக்குப் போட்டுச் செருகிக்கொண்டு, தன் நெற்றி மேட்டில் தீட்டியிருந்த விற்புருவங்களை அழகாக வளைத்தபடி மெல்லத் திரும்பினாள். அதே சமயம் அந்த முதியவளும் நிமிர்ந்து முத்துசிவனைப் பார்த்தாள்.

திடுமென்று நினைவு வந்தவன்போல் ஒரு துள்ளுத் துள்ளிய ரட்சகன், ''அடடே! நிற்கிறீங்களே சார்! இப்படி உட்காருங்கள் சார்!'' என்றவாறு அவசரமாக ஓடிப் போய், மூலையில் கிடந்த ஒரு மடக்கு நாற்காலியைத் தூக்கி வந்து, பிரித்துப் போட்டு, அதிலிருந்த தூசு தும்புகளைத் தட்டித் துடைத்தான்.

இந்நேரம் வானுலகத்திலிருந்து வழி தப்பி வந்துவிட்ட தேவதையைத் திடீரென்று தரிசித்துவிட்டாற் போன்ற பிரமிப்புடன் அப்பெண்ணையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''ஹோ, பரவாயில்லை ரட்சகன்! இருக்கட்டும், இருக்கட்டும்!'' என்று புன்னகையுடன் தலையசைத்தவாறு ஓரடி பின்னால் நகர்ந்து நின்று கொண்டான்.

ரட்சகன் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்து ஒரு குலுக்குச் சிரிப்புச் சிரித்துவிட்டுத் தொண்டையை மெல்லச் செருமிக் கொண்டு சற்று முன் தன் சகாக்களுக்கு முத்துசிவனை அறிமுகப் படுத்திய அதே தோரணையில் — அதே 'வசனங்களால்' — அந்தப் பெண்ணுக்கு அறிமுகப்படுத்தினான்.

அவள் ஒயிலாகத் தலையைச் சாய்த்து ஓரக் கண்களால் முத்துசிவனை நோக்கி இரு கரங்களையும் நிதானமாகக் குவித்து நெஞ்சுக்கு நேரே நிமிர்த்தி வைத்து ''நமஸ்தே!'' என்றாள். முத்துசிவனும் பதிலுக்குக் கைகுவித்தான்.

அடுத்து, அந்தப் பெண்ணை அவனுக்கு அறிமுகப்படுத்துவதற்காகத் தன் தொண்டையை மீண்டும் கமகப் படுத்திக் கொண்டான் ரட்சகன்.


முத்துசிவன் உஷாரானான். காரணம், பார்ப்பதற்கு நூற்றுக்கு நூறு பெண்ணாகவே தோற்றமளிக்கும் அவளை ரட்சகன் ஆண் என்று சொல்லி, பெயரையும் சுப்பிரமணி என்றோ, கோவிந்தன் என்றோ குறிப்பிட்டு அறிமுகப் படுத்திவிட்டால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள வேண்டும் அல்லவா?

ரட்சகன் பெருமை கலந்த குரலில் கூறினான்: ''இது மிஸ் வந்தனா! நாடக உலகிலே தங்கச்சிக்கு ரொம்ப நல்ல பேரு! எந்த மாதிரி 'ரோல்' கொடுத்தாலும் அதை அப்படியே பிய்ச்சு உதறிப்பிடும்! அவ்வளவு அபாரமான நடிப்புத் திறமை! பெரிய பெரிய சினி ஸ்டார்களெல்லாம் இதுகிட்ட பிச்சை வாங்கணும்! என்னோட நாடக மன்றத்துக்கே இதுதான் ஜீவநாடி!''


(தொடரும்)

ஸதர்ன் ரோட்வேஸ்

இயக்குபவை



- 366 பஸ்கள்
- 225 லாரிகள்
- 48 ட்ரைலர்கள்
- 135 லாரி மார்க்கங்கள்
- 147 பஸ் மார்க்கங்கள்
- 1,56,290 கிலோமீட்டர்கள் தினத்திற்கு



உடைமை


- 443 கிடங்கு வசதியுடன் கூடிய காரியாலயங்கள்
- 4599 பயிற்சி பெற்ற சிப்பந்திகள்

சென்னை, ஆந்திரபிரதேசம், மைசூர் மற்றும்
கேரள மக்களுக்கு சேவை புரிகிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS



உன்னைப் போல்..

கோமதி சுப்பிரமணியம்

சென்னை எழும்பூர் நிலைய ஆரவாரத்தை விட, அவள் இதயத்துள் எழுந்த ஆனந்த ஆரவாரம் பேரிரைச்சல் நிறைந்ததாக இருந்தது.

வெளியே எப்படிப் பல வகையான கதம்பக் குரல்கள் ஒன்றோடொன்று சம்பந்தா சம்பந்தமற்றுப் பின்னிப் பிணைந்து கிடந்தனவோ, அப்படித்தான் கங்காவின் இதயத்துக்குள்ளும் ஆயிரமாயிரம் எண்ணக் கலைவைகள் முட்டி மோதி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

இரவு ஒன்பது பத்துக்குப் புறப்படுகிற தூத்துக்குடி எக்ஸ்பிரஸ், மறுநாள் திருச்சி சென்றடையும் போது காலை 6—30 ஆகிவிடும். என்னதான் வேகமாகப் புறப்பட்டாலும், வண்டி பிடித்துக் கொண்டு அவள் வீட்டை அடையும்போது, தங்கை ஜானகி ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்று விடுவாளா? அல்லது எதிர்பாராமல் சந்திப்பதால் அதிர்ந்து போய் விடுவாளா? அல்லது ஆனந்த மிகுதியால் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொள்ளுவாளா?



இன்னும் இது போன்று எத்தனை எத்தனையோ பூச்சிதறல்கள்.

எட்டு வயதுச் சிறுமியான பானுவை அம்மா அவள் கையிலே ஒப்படைத்துச் செல்லும்போது அப்படியொன்றும் கங்காவுக்கு வயதாகி விடவில்லை.

பதினெட்டு வயதே நிரம்பிய கங்காவைப் பெரிய மனுஷியாக மதித்து, அவளிடம் இந்த உலகமறியாப் பெண்ணை ஒப்படைத்துச் சென்ற போது, கங்கா இறுதி வகுப்பு முடித்துவிட்டு 'டீச்சர் டிரெயினிங்'குக்காக மனுப் போட்டுக் கொண்டிருந்த காலம்.

கங்காவுக்குப் பயிற்சி முடிந்து அவள் உபாத்தியாயினியாக நியமனமாகி, சம்பளத்தைக் கையால் பெறும்வரை, ஏதோ பூர்வீகச் சொத்து என்ற பெயரால் சிறு வீடும், சொற்ப நிலமும் இருந்ததுதான் சகோதரிகள் இருவருக்கும் கைகொடுத்தது.

பானுவுக்குத் திருமணமாகிப் பத்து மாதங்களில் எத்தனையோ முறை அக்காவைத் தன் வீட்டுக்கு வந்து போகும்படி வரிந்து வரிந்து கடிதம் எழுதியிருக்கிறாள்.

பாழாய்ப் போன வயிற்றுப் பிழைப்புன்னு ஒன்று இல்லாவிட்டால் அவளும் தன் தங்கையின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து இதற்குள் எத்தனையோ முறை போய் வந்திருப்பாள்.

உபாத்திமைத் தொழில் என்ன மற்ற ஆபீஸ் உத்தியோகத்தைப் போல் ஆபீஸ் மேஜையடியிலே மட்டும் பார்த்து முடிக்கிற உத்தியோகமா ?

விடுமுறை நாட்களில்கூடத் தலைக்குப் பாரமாகத் திருத்த வேண்டிய நோட்டுகளும், தயாரிக்க வேண்டிய பாடங்களும் கனமாய்ச் சேர்ந்து கிடக்குமே....

எது எப்படிப் போனாலும் சரி என்று இந்த டிசம்பர் விடுமுறையில் எல்லாவற்றையும் உதறியெறிந்துவிட்டுத் தங்கையைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறாள்.

கங்கா அமர்ந்திருந்த பகுதிக்குள்ளும் காலியாகிக் கிடந்த இடங்களெல்லாம் நிரம்பிக் கொண்டிருந்தன.

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர், கங்காவுக்கு அடுத்துள்ள நம்பரையும், தன் கையிலுள்ள ரிசர்வேஷன் டிக்கெட்டையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டுச் சரியாக இருக்கவே, தமக்குப் பின்னால் தூரத்தே வந்து கொண்டிருந்த மனைவியைக் கையசைத்து அந்த இடத்துக்கு அழைத்தார்.

அந்த அம்மாளைத் தொடர்ந்து போர்ட்டர் சாமான்களோடு வந்து கொண்டிருந்தார். என்னதான் பெண்கள் ஒப்புக் கொள்ள மறுத்தாலும், அவர்கள் செய்கிற பிரயாணத்தில் மூட்டை முடிச்சுகள் ஏகமாய்க் கூடித்தான் விடுகிறது. ஒரு வேளை அவர்கள் இருவரும் மாற்றலாகிப் போகிறார்களோ என்னவோ என்று எண்ணினாள் கங்கா. ஆனால் பாத்திரங்களும் பண்டங்களும் அத்தனையும் புத்தம் புதுக் கருக்கழியாமல் இருந்தன.

மார்கழி மாதமல்லவா ? பெண்ணுக்குப் பொங்கல் சீர் கொண்டு போகிறவர்களாகவும் இருக்கலாம் என்று எண்ணிய போது, அவளுக்குத் தன் தங்கையின் நினைவு வந்தது: அவள் இப்பொழுது பிரயாணம் செய்வது உறுதியாகத் தீர்மானிக்கப்படாமல் இருந்ததால் முன்னதாகவே, அதாவது சம்பளம் வாங்கிய கையோடேயே பணமாகப் பொங்கல் சீர் அனுப்பி விட்டாள்.

தாமதமின்றிப் பொங்கல் சீரை முன்னதாகவே அனுப்பி விட்டதைப் பாராட்டித் தங்கை எத்தனை அழகாகக் கடிதம் எழுதியிருந்தாள்.

''சின்னவளாக இருந்தும் எத்தனை புத்திசாலியாக நடந்து கொண்டிருக்கிறாள் உன் அக்கா' என்று என் மாமியார் உன்னைப் புகழ்ந்து பாராட்டியதை என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை'' என்று எழுதியிருந்த வரிகளைப் படித்த பூரிப்பு நெஞ்சிலே சுழல் வட்டம் அடிக்கிறது.

வண்டி புறப்பட்டு வெகுநேரமாகியும் யாரும் யாரோடும் பேசவில்லை.

கங்காவுக்கு உள்ளுக்குள் ஒரே குறுகுறுப்பு. அவர்களோடு பேச்சுக் கொடுத்து, அவர்கள் பெண்ணின் புது வாழ்வைக் கேட்பதின் மூலம் தன் தங்கையின் வாழ்க்கையையே நேரில் காணுகிற நிறைவைத் தேட விழைந்தாள்.

''உங்கள் பெண்ணுக்குப் பொங்கல் சீர் கொண்டு செல்லுகிறீர்கள் போலிருக்கிறது'' என்று கேட்டுவிட்டு அவர்கள் பதிலை எதிர் நோக்கி நின்றாள் கங்கா.

மலர்ச்சி பிறக்க வேண்டிய முகத்திலே கருமை படர்வதைக் கண்டதும், தான் அசம்பாவிதமாக எதையாவது கேட்டுவிட்டோமோ என்ற திகைப்புடன், ''மன்னிக்கணும். நான் கேட்டது தவறாக இருந்தால்..'' என்று கூறினாள்.

அப்பொழுதும்கூட அந்தம்மாளால் எதுவும் பேச முடியவில்லை. எதையோ சொல்ல விழைந்து மறைக்க முயன்று, பின் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

தாழ்ந்த அந்தப் பார்வை அருகாக இருக்கும் மூட்டை முடிச்சுகளின் மீது பதியும் போது, அவளையுமறியாது கண்கள் கலங்கித் ததும்பின.


நிலைமையைச் சமாளிக்க அவர்தான் பேசினார். ''பெண் வீட்டுக்குச் சீர் கொண்டு போய்விட்டுத்தான் வருகிறோம். அன்பே இன்னதெனத் தெரியாத அரக்கர் கூட்டத்தின் மத்தியிலே அந்த அப்பாவிப் பெண் அகப்பட்டுப் பரிதவித்துக் கொண்டிருக்கிறாள்...'' என்று சொல்லி விட்டுத் தம் நெஞ்சிலே நெருப்பாகக் கவியும் வேதனையின் வெந்தழலை மேலும் கொட்ட விரும்பாது தமக்குள் விழுங்கிக் கொண்டார்.

தன்னுடைய பானு கொடுத்து வைத்தவள் என்பதை நினைக்கும்போது, நினைவின் பெருமிதம் நெஞ்சை நிறைத்தது. ஒரு முறை பானுவே, சகோதரிக்கு எழுதிய கடிதத்தில், எழுதியிருந்தாளே — 'அக்கா, என்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் அன்பெனும் பாசச் சிறைக்குள் சிக்கித் திணறுகிறேன் என்று.'

பெண்ணுக்கு இதைவிடப் பெரும் பேறும் ஒன்றுண்டோ.... ?

''வயதிலே சின்னவள்தான். ஆனாலும் நீயே சொல்லும்மா, பெண்ணுக்குப் பொன்னும் பொருளும் குவிந்த வாழ்க்கை

பயர்ஸ்டோன் பொறுப்பு:
நீங்கள் இலகுவாக ஓட்ட ஆதரவு



உயரிய நிலைப்புறுதி உடைய டயர்களைப் படைப்பதன் மூலம் இதை நிரூபிக்கிறோம்!

கார் டயர்களிலே அமைந்த விசேஷமான பயர்ஸ்டோன் 'ராப்—அரவுண்ட்' டிரெட் டிசைன், 18% அதிக அகலம் உள்ளது— எந்த வேகத்திலும் உன்னதமான நிலைப்புறுதியோடு ஓட்டுவதற்கு உகந்தவாறு சாலைமீது அதிக ரப்பரைப் பதியச் செய்கிறது.

கூடுதலான செலவு ஏதுமின்றியே ஆயிரக்கணக்கிலே அதிக மைலோட்டம் தரும் விசேஷமான ரப்பர் கலவையான 'ஸுப்பர்-டப்' விந்தை ரப்பரினால் எல்லா பயர்ஸ்டோன் டயர்களுமே உருவாக்கப்படுகின்றன என்பதையும் இத்துடன் கருத்திற்கொண்டு பாருங்கள்.

உங்கள் பணத்திற்கு உரிய மதிப்பை அளிக்க எல்லா வகையிலும் உறுதிதருகிறது பயர்ஸ்டோன் என்பதை நீங்களே கண்டுகொள்வீர்கள்.

Firestone

பயர்ஸ்டோன் டீலக்ஸ் சாம்பியன் டயர் *ராப்-அரவுண்ட்* டிரெட் பொருந்தியது.

பயர்ஸ்டோன் டயர்களுக்குத் தரம், சேவை [illegible]

மறைந்த மருங்காபுரி வித்வானுக்கு அஞ்சலி



கர்நாடக சங்கீதத்தைப் போஷித்து வந்த முதுபெரும் வித்வான்களில் ஒருவரும் வயலின் வாத்தியத்தை இனிமையுடன் ஆளுமையையும் கலந்து பல்லாண்டுகளாக இசை ரசிகர்களுக்கு வழங்கி மகிழ்வித்த மருங்காபுரி சமஸ்தான வித்வான் ஸங்கீத கலாநிதி கோபாலகிருஷ்ணய்யரின் மறைவு குறித்து அவரது குடும்பத்துக்குக் கல்கி தனது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னரே ஸ்ரீரங்கத்துப் பெருமக்களால் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட திரு கோபாலகிருஷ்ணய்யர், பல வித்வான்களுக்குத் துணையாகவும் தனியாகவும் வயலின் வாசித்துப் பிரக்யாதி அடைந்தவர். ''மைக்'' படையெடுக்காத காலத்திலேயே தனிக் கச்சேரி செய்தவராதலால் தமது வாத்தியத்தின் நயங்களையும் வாசிப்பின் நுட்பங்களையும் நன்றாகக் கேட்கச் செய்ய அவர் தமது வாத்தியத்திலேயே ஒலிபெருக்கி சாதனத்தைப் பொருத்தி வெற்றிகரமாக இசை வழங்கியவர். முதிய வித்வத்துடன் இனிய சுபாவமும் கூடிய திரு கோபாலகிருஷ்ணய்யரின் மறைவு இசை உலகுக்குப் பெருநஷ்டம்.

தேவையா ? அன்பும் அனுசரணையும் மிகுந்த அமைதியான சூழ்நிலை நல்லதா என்பதை?'' என்று பெரியவர் கேட்ட போது, அதுவரையில் பேசாதிருந்த அந்த அம்மாள் சொன்னாள்:

''என்னங்க நீங்க? நம்ம வேதனை நம்மளோடு போகட்டுமே. பாவம், அந்தப் பெண்ணையும் போட்டு ஏன் குழப்புறீங்க?''

''ஒருத்தருக்கொருத்தர் பழகினால், மனம் விட்டுப் பேசினால், அதிலே ஓரளவு ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்னு அதுக்கு ஏனம்மா தடை போடணும்?'' என்று கங்கா சொன்ன போது, பெரியவளுக்கே கங்காவிடம் ஏதோ கொட்டித் தீர்த்துட வேண்டுமென்ற துடிப்பு பிறந்தது.

''பெண்ணைப் பெற்ற நாங்க சாதாரணப் பித்தளையையும் வெண்கலத்தையும் சுமந்து செல்லலேம்மா.... எங்க ரெண்டு பேரோட நெஞ்சு கொள்ளாம நிறைஞ்சு நிற்கிற அன்பைத்தான் பெருந்தனமாகக் கொண்டு சென்றோமென்கிறதை அந்தப் புண்ணியவதி, அதுதான் பிள்ளையைப் பெத்த மகராசி புரிஞ்சுக்கலேயென்னு வருத்தப்படலேம்மா. மனத்துக்கு மனமே உணரக்கூடிய பாச உணர்வைச் சாதாரண காசு பணத்தாலே எடை போட்டு அவமதிச்சதைத்தான் எங்களாலே தாள முடியலே.... எங்களை அவமதிச்சது பெரிசில்லே. நாலு பேருக்கு முன்னாலே நல்லவராக உயர்ந்தோர் பலரும் வாழ்த்தும் உத்தமரான இவர்—பெண்ணைப் பெற்ற ஒரே பாவத்துக்காகத் தலை குனிந்து நிற்க நேர்ந்ததே அந்த நிலையை நினைக்கும் போதுதான் என் நெஞ்சு கொதிக்கிறது. மனம் குமுறுகிறது......''

'ஆண்டவனே! என் அப்பாவித் தங்கைக்கு இந்தப் பெரியவர் பெண்ணுக்குக் கிடைத்த கேடான வாழ்க்கை கிடைக்காது காப்பாற்றிய உன் பெருங் கருணைக்கு நன்றி' யென இறைவனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்து முணுமுணுத்துக் கொண்டாள்.

கங்காவின் கண் முன்னால் தன் தங்கையின் அமைதியான வாழ்க்கை ஆனந்த கங்கையாகப் பிரவாகம் எடுத்து ஓடியது:

பெரியவர் சொல்லிக் கொண்டிருந்தார், பெண்ணுக்கு ஆசையாகச் சீர் எடுத்துச் சென்றதையும், அதைப் பிள்ளையைப் பெற்றவள் அலட்சியமாக எடைவிட்டதையும், பின்னர் அவர்கள் ரயிலுக்காகப் புறப்படுகிற நேரத்திலே, அவர்கள் கொண்டு சென்றிருந்த சீர் சாமான்களை அவர்களுக்காக வந்த டாக்ஸியிலே வேலைக்காரர்களை விட்டு ஏற்றி அனுப்பியதையும் நெஞ்சு குமுறச் சொன்னார்.

கங்கா தனது நினைவுத் தடத்தை வேறு புறத்தே திருப்பிக் கொண்டாள். மறந்தும் கூடப் பெரியவரின் பெண்ணுடைய வாழ்க்கைக் காற்று, தன் தங்கையின் பக்கம் திரும்பி விடக் கூடாது என்று எண்ணம் தோன்றியது. அந்த எண்ணம் தோன்றிய அந்தக் கணமே அந்தப் பெண்ணைப் பற்றியோ அவள் அவல வாழ்வைப் பற்றியோ கேட்கவே விரும்பாதவளாய் நித்திரை வயப்பட்டவள் போன்று கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கங்காவின் நித்திரைக்கு இடையூறாக இருக்க வேண்டாமென்று பெரியவர் மேல் பலகையில் தமது படுக்கையை விரித்துக் கொண்டு மனைவிக்கு நடுப் பெஞ்சியில் படுத்துக் கொள்ள வசதி செய்து கொடுத்தார்.

கங்காவின் படுக்கை என்ன அவள் அமர்ந்திருந்த இடமாகவே இருந்து விட்டதால் அதன் மீதே படுக்கையை விரித்துக் கொண்டு படுத்து விட்டாள்;

அவள் கண்களுக்குள் தங்கையின் மங்கள வாழ்வும் அதன் வளமும் மலர் விரித்தன. அதன் இன்ப மணத்தைச் சுவைத்தவாறு கண்களை மூடிக் கொண்டாள். காலையில் கண் விழித்தபோது, தன்னைச் சுற்றி மல்லிகை மணம் பரப்பி நிற்பதை உணர்ந்தாள்.

ஸ்ரீரங்கம் வந்துவிட்டது.

சட்டென எழுந்து வெளியே விற்பனையான மல்லிகைப் பந்து ஒன்றை வாங்கிக் கொண்டாள். மல்லிகைப் பூ என்றால் தங்கைக்கு உயிராயிற்றே !

படுக்கை சுருட்டி வைக்கப்பட்டது. மூட்டை முடிச்சுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. திருச்சி சந்திப்பு வந்ததும் இறங்குவதற்குத் தயாராகத் தன்னையும் தயார் செய்து கொண்டாள்.

வண்டி சந்திப்பில் நின்றதுதான் தெரியும். சாமான்களை இறக்கியது, பிளாட்பாரத்தைவிட்டு வெளியேறியது, வாடகைக்கு வண்டி பிடித்தது — எல்லாமே துரிதத்தில் முடிந்தன. சாமான்களை ஏற்றி வைத்துவிட்டு அவள் வண்டியில் ஏறப் போகும் சமயம் ''டீச்சர்'' என்ற குரலைக் கேட்டுச் சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.

'டீச்சர்' என்னும் உத்தியோக உறவு சென்னையைத் தாண்டித் திருச்சி வரை தன்னைத் துரத்தியடிக்கும் புதுமையில் ஒரு கணம் வியப்புற்று நின்றவள், மறுகணம் தன்னை அழைத்த குரலுக்குரியவர் யாரென்று அடையாளம் காண விழைந்தாள்.

'' என்னைத் தெரியலே ?'' என உரிமையோடு கேட்டு நின்றவளை உற்று நோக்கினாள்.

டீச்சர் டிரெயினிங் படித்த காலத்துத் தன்னோடு சேர்ந்து படித்த மாணவிகளில் ஒருத்தியான ராதாவை அங்கே சந்திக்கப் போகிறோம் என்று எதிர்பார்த்திராத மலைப்பிலே சற்றுத் தடுமாறிவிட்டு, ''நலம் தானே ?'' என்று குசலம் விசாரித்தாள்.

''கடவுள் கிருபையால் நலமாகத்தான் இருக்கிறேன். அது சரி, நீங்கள் எங்கே இப்படி....!''

''என் தங்கை இந்த ஊரில் இருக்கிறாள்.''

'' ஓ, உங்கள் உயிருக்குயிரானவளாயிற்றே ! இங்கே எந்த இடத்தில்...?'' என்று கேட்டாள் ராதா.

''கண்டோன்மெண்டில்.... நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள் ?''

''திருச்சியில்தான்.... ஆமாம், உங்கள் தங்கை வீடு எங்கே என்று சொன்னீர்கள்?''

மனத்திலே டேப் ரிக்கார்டரைப் போல் பதிவாகிக் கிடக்கும் தங்கையின் விலாசத்தைச் சொன்னாள்.

''போகலாமாம்மா....?'' வண்டிக்காரன் குரல் கொடுத்தான்.

'' ஓ, போக வேண்டியதுதான்'' என்று கூறியவள் ராதாவின் பக்கம் திரும்பி, ''நான் திரும்பிச் செல்லுவதற்குள் அவசியம் உங்களைச் சந்திக்க வருகிறேன். உங்கள் விலாசம்.....?'' என்று கேட்டாள்.

'' என்னுடைய வீடும் கண்டோன்மெண்டிலேதான் இருக்கிறது. நீங்கள் போய்க் கொண்டிருங்கள். நான் ரிக்ஷா வைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று கூறிய ராதா தன் மனத்துள் தெளியும் வேதனைக் கோடுகளைக் கங்காவிடமிருந்து மறைக்க முயன்றவளாய்த் தூரத்தே போகும் ரிக்ஷா ஒன்றைத் தட்டி அழைத்துக் கொண்டிருந்தாள்.

''நீங்கள் யாருக்காகவாவது காத்திருக்க வேண்டுமா ?''

''இல்லே, வெளியூர் செல்லுகிற என் கணவரை வழியனுப்புவதற்காக வந்தேன். நான் மட்டும்தான்.....''

'' அப்படியானால் வேறு ரிக்ஷா எதற்கு ? இந்த வண்டியிலேயே போய் விடலாம் ; வாருங்கள். நெடுநாளைக்குப் பின் சந்தித்திருக்கிறோம். பேசிக் கொண்டே போகலாம்'' என்று அழைத்த கங்காவை மறுக்க முடியாது வண்டியில் ஏறிக் கொண்டாள் ராதா.

'ஐயோ, நாம் சந்திக்காமலே இருந்திருக்கலாமே' என்று ஓலமிடும் உள்மனத்தை அடக்கியவாறு வண்டிக்குள் அமர்ந்திருந்தாள்.

''உங்கள் வீடு கண்டோன்மெண்டிலே இருப்பதாகச் சொன்னீர்களே. எந்த இடம்? என் தங்கை வீட்டிற்கு அருகிலா, தள்ளியா?''

''தள்ளி இருந்திருக்கக் கூடாதா என்று இப்பொழுது வேதனைப்படுகிறேன் டீச்சர் !''

''ஏன் ராதா ! என் தங்கை வீட்டுக்கும் உங்கள் குடும்பத்துக்கும்....?''

''எந்த உறவுமில்லே, பகையுமில்லே'' என்றவள், ''உங்கள் தங்கை தன் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு என்ன விவரம் தெரிவித்திருக்கிறாள் ?'' என்று கேட்டாள்.

'' 'சுவர்க்கமே தன் கைக்குள் அடக்கம்' என்பதைத்தான் வரிக்கு வரி எழுதியிருக்கிறாள்'' என்பதைச் சொன்னவள், தங்கையின் கணவரும் அவர்களது குடும்பத்தாரும் அவளிடம் காட்டுகிற அன்புக்கும் பரிவுக்கும் பாசத்துக்கும் முன்னால், எடுத்து வளர்த்து ஆளாக்கிய கங்காவின் அன்பு ஒரு மாற்று குறைவாகத்தான் இருக்க முடியும் என்னும் பொருள்பட எழுதியுள்ள கடிதங்களைப் பற்றி நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''என் தங்கை கொடுத்து வைத்தவள். உலகத்திலே எத்தனை எத்தனையோ அக்கிரமங்கள் மலிந்து கிடக்கின்றன'' என்ற கங்கா, நேற்று ரயிலில் தன்னோடு வந்தவர்களின் நிலையைச் சொல்லி, அவர்களது பெண் அநுபவிக்கும் அவல வாழ்க்கைக்கான தனது அனுதாபத்தையும் இரக்கத்தையும் வேதனையோடு தெரிவித்தாள்.

''உங்கள் அனுதாபத்துக்குப் பாத்திரமான அந்தப் பெண்ணாவது ஒரு வகையிலே அதிர்ஷ்டசாலிதான்.....''

''எதைச் சொல்கிறீர்கள் ?''

''அந்தப் பெண்ணின் கணவன் வீட்டார், பெண்ணைப் பெற்றவர்களை மட்டும்தான் அவமதித்தார்கள்....''

'' என் தங்கை....''

''சித்திரவதைப் பட்டுக் கொண்டிருக்கிறாள். ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் எந்தத் துரதிர்ஷ்டம் நேரக் கூடாதோ, அது உங்கள் தங்கைக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது.....''

''இருக்காது. இருக்க முடியாது. வேறு யாரையோ என் தங்கையாக நினைத்துக் கொண்டு வீணாக என்னைக் குழப்பிவிட்டீர்கள்.....!''





"உங்களுக்கு வேதனை தர நேரிடுவதற்காக என் உள்ளம் பொங்கி அழுவதை என்னால் உங்களுக்கு உணர்த்த முடியாது, டீச்சர். கொடுமை நிறைந்த கும்பலின் மத்தியில் அவதிப்படும் ஓர் அப்பாவிப் பெண்ணுக்காக நான் தினம் தினம் கண்ணீர் வடிப்பதுண்டு டீச்சர். அது உங்கள் தங்கை என்று தெரிய நேர்ந்த கணத்திலிருந்து என் உள்ளம் அழுவதை நிறுத்தி விட்டது. கண்ணீருக்குப் பதிலாக, செந்நீர் சிந்துகிறேன் டீச்சர்.....!''

ஆடிக் காற்றிலே அவதிப்படும் சருகாகத் துடிதுடித்தது கங்காவின் உள்ளம்.

விவரம் தெரியாத பருவத்திலேயே திருமணம் என்ற சடங்கின் பெயரால் தாலியை ஏந்தி, அதன் மகத்துவம் இன்னதென்று உணராமுன்னமே அதைப் பறி கொடுத்தும் விட்டவள் கங்கா.

அவளைப் பொறுத்தவரையில் கனவு போன்ற அந்த விபரீதச் சம்பவங்களோடு முடிந்து விட்டது திருமணம்.

தனக்கு வாழ்க்கையில் கிடைக்காத ஒரு நிலையை — தான் பெற முடியாது பறி கொடுத்துவிட்ட பேரின்ப நிலையை, தன் உயிருக்குயிரான தங்கை பூரணமாகப் பெற வேண்டுமென்ற பேராசையால் தன் சக்திக்கு மீறியதான பெரிய இடத்தைத் தேடிப் பெண்ணைக் கொடுத்து விட்டாள்.

ஊர்க்குருவி உயரப் பறக்க முயன்ற கதையாக முடிந்திருக்குமென்பதை அவள் கனவிலும் கற்பனை செய்து பார்த்ததேயில்லை. பார்க்கத் தோன்றாத நிலையைத் தங்கையின் ஒவ்வொரு கடிதமும் அழுத்தமாகப் பதித்து வைத்திருந்ததே.

'அடி பாவிப் பெண்ணே! இறைவன் இனமறியாப் பருவத்தே என் வாழ்க்கையைத் தட்டிப் பறித்ததைக்கூட இத்தகைய பேரதிர்ச்சியாக நினைத்திருக்க மாட்டேனே! பொய்யான போலியான உன் வாழ்க்கையைப் போலவே உன் எழுத்தும் என்னை ஏமாற்றி விட்டதேடி.....!'

கங்காவின் மனம் எதையெதையோ நினைத்துக் குமுறிக் கொண்டிருந்தது.

வண்டி ராதாவின் வீட்டை நெருங்கிய பொழுது, "டீச்சர்! நான் இங்கேயே இறங்கிக் கொள்ளுகிறேன். அடுத்தது உங்கள் தங்கையின் நரகம். நீங்கள் போய் வாருங்கள். உங்களுக்கு எப்பொழுது வரத் தோன்றினாலும் என்னுடைய வீட்டுக்கு வரலாம்'' என்று சொல்லிக் கீழே இறங்கிக் கொண்டாள்.

அவளைத் தொடர்ந்து கங்காவும் இறங்கி விட்டாள். சாமான்களையும் இறக்கினாள்.

"டீச்சர்....!''

வண்டிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்து அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்த கங்கா சொன்னாள்:

"என் தங்கைக்குச் சுவையான வாழ்க்கை கிடைக்காவிட்டாலும், கிடைத்திருப்பதாக நான் நம்ப வேண்டும் என்பதற்காக அவள் பொய்யாக, போலியாக நடித்துக் கொண்டிருக்கிறாள். இந்த நிலையில் நான் அவள் முன் போய் நின்று உன்னுடைய அவலநிலை எனக்கும் தெரியும் என்பதைக் காட்டி, வாழ்க்கையில் அவளுக்குக் கிடைக்கும் அந்த ஒரே நிறைவையும் நிம்மதியையும் துடைக்க வேண்டாமல்லவா? அதனால்தான் நான் வந்ததுகூட தெரியாமல் திரும்பிப் போய்விட விரும்புகிறேன். போகுமுன் ஓர் ஆசை. உங்கள் வீட்டில் இருந்தபடியே என் தங்கைக்குத் தெரியாமல் அவளை ஒரே ஒரு முறை என் கண் குளிரக் கண்டுவிட்டுச் செல்கிறேன் ராதா!'' என்றபோது ராதை மலைத்துநின்றாள்.

அட்டைப்பட விளக்கம்

ஜனாதிபதி நிக்ஸன்

அமெரிக்க நாட்டின் 37வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரிச்சர்டு நிக்ஸன் இம்மாதம் 20ம் தேதி அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் பதவி ஏற்கிறார். அமெரிக்க ஜனாதிபதிகள் வசிக்கும் வெள்ளை மாளிகையில் குடி புகுகிறார்.

ஐம்பத்தாறு வயது நிரம்பிய நிக்ஸன் வாழ்க்கையில் பல மேடு பள்ளங்களைப் பார்த்தவர். "இனி அவர் அரசியல் வாழ்வு முடிந்தது'' என்று சோதிடம் சொன்னவர்கள் எல்லாம் வியக்கும்படி, நிதானமாகப் பாடுபட்டு, படிப்படியாக மீண்டும் மேல் பதவிக்கு வந்திருக்கிறார். "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்'' என்ற பழமொழிக்கு அவரே ஓர் எடுத்துக்காட்டாவார். அமெரிக்க ஜனாதிபதிக்கு அளவு கடந்த அதிகாரங்களும் செல்வாக்கும் இருந்தாலும் அவர் செயல்களைச் சட்டசபை அங்கீகரித்தாக வேண்டும். நிக்ஸன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் அமெரிக்க மக்கள் பிரதிநிதி சபையிலோ, ஜனநாயகக் கட்சி அங்கத்தினர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள், நிக்ஸனின் நிர்வாகத்துக்கு உதவும் வகையிலே பணியாற்றப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஜனநாயகப் பண்பு என்பது இதுவே அல்லவா? எதிர்க் கட்சி என்பது எப்பொழுதும் எதிரிக் கட்சியாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆளும் கட்சி நல்ல திட்டங்கள் கொண்டு வந்தால் ஆதரிக்கவும், தவறான திட்டங்களும், காரியங்களும் செய்யும்போது கண்டிக்கவும்தான் ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு வியட்நாம் விவகாரத்தோடு, இஸ்ரேல் — எகிப்து அடிபிடிச் சண்டையும் சேர்ந்து வரும் நாட்களில் பெரும் தலைவேதனை அளிக்கப் போகிறது என்று அரசியல் ஜோதிடர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஜோதிடங்கள் பொய்க்காதா; புதிய ஜனாதிபதி நிக்ஸனின் பதவிக் காலத்தில் உலகில் போர்க்குரிய அறிகுறிகள் தணிந்து சாந்திக்கும் சமாதானத்துக்குமுரிய அறிகுறிகள் பெருகாதா என்றே உலகம் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

அமிர்தாஞ்சனம்



இதமாகவும் துரிதமாகவும் உடல் வலியைப்போக்கி நிம்மதியளிக்கிறது



75 வருடங்களுக்கும் மேலாக புகழ்வாய்ந்தது.

- அமிர்தாஞ்சனம் எந்த விதத்திலும் தீங்கு செய்யாது. வலியுள்ள இடத்தில் சிறிதளவே தடவினால் போதும்.
- அமிர்தாஞ்சனம் வலியைத் துரிதமாகப் போக்குகிறது. ஏனெனில் இதில் சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் உள்ளன.
- அமிர்தாஞ்சனம் தடவிக் கொண்டால் இதமான நிம்மதியளிக்கிறது. ஏனெனில் இதில் மெந்தால், கற்பூரம் ஆகியவை கலந்துள்ளன.
- அமிர்தாஞ்சனம் சிக்கனமானது. ஏனெனில் ஒரு பாட்டில் மருந்தை வெகுநாட்களுக்கு உபயோகிக்கலாம்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் . பம்பாய் . கல்கத்தா

புது டில்லி . ஹைதராபாத்



AMR - 14Tam



ஏட்டிக்கு ...

நேரம் கழித்து வரும் கணவர்கள் சத்தம் போடாமல் கதவைத் திறக்க உதவியாகக் குலுங்காத பிளாஸ்டிக் சாவிகளையும் அமைதியாகத் திறக்கும் பூட்டுக்களையும் ஜெர்மனியில் கண்டுபிடித்திருக்கிறார்கள் !

...போட்டி !

இரவு எந்த நேரத்தில் கதவு திறக்கப் பட்டாலும் சரி, அந்தப் பூட்டுக்களுடன் தொடர்பு கொண்ட கடிகாரம் ஒன்று உடனே நின்றுவிடும். இத்தகைய நூதனப் பூட்டை பிரான்ஸில் கண்டுபிடித்திருக்கிறார்கள். கணவர் வீடு திரும்பிய நேரத்தை அது மனைவிக்குக் காட்டிக் கொடுத்து விடுகிறது!

-'பேஜண்ட்' - எஸ். ஜெயஸ்ரீ

பல வர்ணச் சாலைகள்

★

கருமையான தார்ச் சாலைகளைப் பார்த்து வெறுத்து விட்டதா? பல வர்ணங்களில் சாலைகள் ஏற்படக்கூடிய காலம் வரப் போகிறது. ஜெர்மனியில் பிராங்க்பர்ட் நகரைச் சேர்ந்த ஒங்கல் என்ற எஞ்சினியர் அதிசயமான செயற்கைக் கற்களைத் தயாரித்திருக்கிறார். வோர்ட்ஸ்மன், இரும்பு கனி வகைகள் போன்றவற்றைக் கலந்து 'சின்டரைட்' எனப்படும் செயற்கைக் கற்களைத் தயாரித்திருக்கிறார். இது அழுத்தத்தைத் தாங்கக் கூடியது. பனிக்கும் சூடு கொடுக்கும்; நீண்ட காலத்துக்குச் சேதம் இன்றி உழைக்கும். இதனை எந்த வர்ணத்திலும் தயாரிக்கலாம். இந்தச் செயற்கைக் கற்களைக் கொண்டு விரும்பிய வர்ணங்களில் சாலைகள் போடலாம். கருமையாக இல்லாமல் சிறிது வெண்மையாகச் சாலைகளை அமைத்தால் இரவில் சாலைகளுக்கு அதிகமாக விளக்குகள் தேவைப்படாது. ஹாம்பர்க் நகரில் சோதனை முறையில் இச்செயற்கைக் கற்களைக் கொண்டு சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

--யூ. பி. எஸ்.



லிப்ஸ்டிக் சாப்பாடு !

அண்மையில் பிராங்க்பர்ட் நகரத்தில் நடந்த ஓர் ஆராய்ச்சியில் தெரிய வந்தது : ஒரு பெண் ஒரு நாளைக்கு மூன்று முறை 'லிப்ஸ்டிக்' தடவிக்கொண்டால் அவள் அன்று சாப்பிடும் போது எட்டு மில்லிகிராம் லிப்ஸ்டிக் உணவுடன் சேர்ந்து உள்ளே போகிறது. அப்படி அவள் ஒரு வருஷத்தில் மொத்தம் 12 கிராம் லிப்ஸ்டிக் சாப்பிடுகிறாள் !

ஆதாரம்: பெமீனு

தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

இங்கிதம் !

தமிழழகன்


நகரில் ஓடும் அரசாங்க பஸ் ஒன்றில், நானும் நண்பருமாக ஓர் இடத்துக்குச் செல்ல ஏறினோம். அங்கே ஒரே ஓர் இடம்தான் உட்காருவதற்கான காலி இடமாக அமைந்தது.

நண்பரை உட்காரச் சொன்னேன் நான். என்னை உட்காரச் சொன்னார் அவர். அவரையே உட்காரக் கேட்டுக் கொண்டேன், நான்; அவரும் "நீங்களே உட்காருங்கள்" என்று வேண்டிக் கொண்டார்.

இவ்வாறு எங்களின் அன்பை ஒருவருக்கொருவர் உட்காரும் இடத்தைப் பொருட்டாக வைத்துப் பரிமாறிக் கொண்டிருக்கும்போதே பஸ்ஸில் ஏறிய மற்றொரு நபர் அதே இடத்தில் உட்கார்ந்து வளைத்துக் கொண்டார்.

இருவருக்குமே ஆத்திரம் பொங்கிவிட்டது. கோபமாக அவரை முறைத்தோம்.

"தயவுசெய்து இத்தனை நேரம் நீங்கள் உங்களுக்குள்ளேயே காட்டிக்கொண்ட அன்பை இப்போது என்மீது மாற்றிக் காட்டுங்கள் !" என்று, சாதாரணமாகப் பதில் தந்தார், அந்தப் புதிய நபர் !



இயந்திர மூக்குகள் !


உலகில் பத்தாயிரத்துக்கும் மேலான வெவ்வேறு விதமான நறுமணங்கள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். மனிதனின் மூக்கு இந்த நறுமணங்களுள் சிலவற்றையே நுகர்ந்து இனம் கண்டறியும் ஆற்றல் வாய்ந்தது.



ஆனால் மேற்கு ஜெர்மனியில் பல்லாயிரக் கணக்கான நறுமணங்களையும் துல்லியமாக நுகர்ந்தறியும் சக்தி வாய்ந்த "இயந்திர மூக்குகள்" உள்ளன. வாசனைகளைத் தரம் பிரித்துத்தரும் இந்தக் கம்ப்யூட்டர் கருவிகள் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெரிதும் துணை புரிந்து வருகின்றன. - ருத் ஹெய்சி - (யூ.பி.எஸ்.)

விருதா மூவிஸ் மோசடி வழக்கு..

இருகூரான்





நடிப்பதற்காகச் சான்ஸ் தேடிக் கையில் பத்தாயிரம் ரூபாயோடு வந்த நல்லதம்பியைத் தயாரிப்பாளர் ஆக்குவதாகச் சொல்லி விருத்தாசலம் என்னும் விருதா மூவிஸ் பங்குதாரர் நம்பிக்கை மோசடி செய்த வழக்கு.

(விருத்தாசலம் கூண்டில் நிற்கிறார். 'பிராசிக்யூஷன்' வக்கீல் பிச்சமணி 'டிபன்ஸ்' வக்கீல் டில்லி நாயுடுவை ஒரு முறை பார்த்துக் கனைத்து விட்டுத் தம் விசாரணையை ஆரம்பிக்கிறார்.)

பிச்சமணி: உம்முடைய பெயர் டா. விருத்தாசலம்தானே?

விருத்தாசலம்: ஆமாம்.

பிச்சமணி: மிஸ்டர் விருத்தாசலம்! நீங்கள் நல்லதம்பியை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து எட்டாம் வருஷம் ஜனவரி முதல் தேதியன்று கோடம்பாக்கம் மேம்பாலத்தருகே சந்தித்ததுண்டா?

விருத்தா: உண்டு.

பிச்ச: அவரை வெகுநாள் பழகின நண்பரைப்போல் அணுகி அவர் நோக்கத்தைத் தெரிந்து கொண்டு நீங்கள் அப்போதே அவரை மின்மினி ஸ்டுடியோவுக்கு ஷூட்டிங் காட்டுகிறேன் என்று அழைத்துப் போனதுண்டா?

விருத்தா: உண்டு.

பிச்ச: அப்படியானால் நீங்கள், நடிக்க வந்திருந்த அவரிடம் உங்களுக்குப் படத் தொழிலில் சம்பந்தமுண்டு என்று கூறினதுண்டா?

விருத்தா: உண்டு.

பிச்ச: நீங்கள் ஒரு 'போகஸ்' ஆசாமி. உங்களுக்குப் படத் தொழிலில் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. இப்படியெல்லாம் உங்களைப் பற்றி வதந்தி உலவுகிறதே, அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

விருத்தா: ருஜுப்பிக்க முடியாத வதந்திகளைப் பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. நான் படத் தொழிலில் சம்பந்தப்பட்டிருந்தது உண்மை...உண்மை...உண்மை.

பிச்ச: என்னென்ன படங்களை எடுத்திருக்கிறீர்கள்?

விருத்தா: சொந்தமாக எதையும் எடுக்கவில்லை. ரூபாய்க்கு நான்கு விதப் படங்கள் எடுக்கிறார்களே, அப்படிக் கூட எதையும் எடுத்துக் கொண்டதில்லை.

பிச்ச: அப்படியானால் உமக்கும் படத் தொழிலுக்கும் எப்படிச் சம்பந்தம்?

விருத்தா: சொந்தமாகப் படத் தொழிலில் ஈடுபட்டிருந்தேன். அதாவது சாமி படங்கள், தலைவர்களின் படங்கள் முதலியவற்றுக்குப் பிரேம் போடும் படத் தொழில்.

பிச்சு: யுவர் ஆனர்! இது பெரிய ஏமாற்று வித்தை இல்லையா... யுவர் ஆனர்? எவ்வளவு பெரிய நம்பிக்கை மோசடி இது?

நீதிபதி: இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமா மிஸ்டர் பிச்சுமணி?

பிச்சு: நோ... நோ யுவர் ஆனர்! நான் குற்றவாளியைக் கேட்கிறேன்.

நீதிபதி: அதைக் கூண்டைப் பார்த்துக் கேளுங்கள்.

பிச்சு: எஸ் யுவர் ஆனர். (கூண்டருகே நெருங்கி) எப்படியெல்லாமோ சிலேடை பேசி என் கட்சிக்காரரை நீர் ஹீரோ ஆக்கிவிடப் போவதாகச் சொன்னீர். அப்படித்தானே?

விருத்தா: ஆமாம். ஆனால் உறுதி கொடுக்கவில்லை.

பிச்சு: விருதா மூவிஸ் என்கிற படக் கம்பெனிக்கு அவரை வெறும் பங்குதாரராக மட்டும்தான் வைத்துக் கொண்டீர்; வேறு எந்த உறுதிகளும் கொடுக்கவில்லையா?

விருத்தா: ஆம். எந்த உறுதியும் அளித்த தாக நினைவில்லை. இருக்கிற பணம் போதாது; பைனான்ஸ் தேடுவோம். அகப் பட்டதும் எடுப்போம் என்றேன். அவ்வளவு தான்!

பிச்சு: பைனான்ஸ் தேடினீரா?

விருத்தா: தேடிக் கொண்டுதான் இருக் கிறேன். செண்ட் பர்ஸெண்ட் வட்டி கொடுக் கிறேன் என்று மிண்ட் தெரு முழுக்க அலேந் தேன். கொஞ்சம் வட்டி கூடுதல் ஆனாலும் பரவாயில்லை. எங்காவது கிடைக்குமா?

பிச்சு: நான் என்ன பைனான்ஸ் புரோக் கரா?

விருத்தா: சேச்சே! உங்களைக் கேட்க வில்லை. 'கொஞ்சம் கூடப் போனாலும் எங்காவது கிடைக்குமா' என்று தேடிக் கொண்டிருக்கிறேன், அவ்வளவுதான்.

பிச்சு: அப்படியானால் நீர் பைனான்ஸ் தேடுவதற்காக அழைத்துப் போன இருவரை யும் நடுவில் 'அம்போ' என்று விட்டு விட்டுத் தலை மறைவான நோக்கம் என்ன?

விருத்தா: கூடவே அவர் களையும் அழைத்துப் போன தால் செலவு கட்டி வரவில்லை. அதனால் 'கட்' பண்ணிவிட்டுக் கோவை போய்விட்டேன்.

பிச்சு: அது ஏமாற்றும் நோக் கத்தோடுதானே?

விருத்தா: இல்லை.

பிச்சு: பத்தாயிரம் ரூபா யைக் கூட்டாளியிடமிருந்து சுருட்டிஆயிற்று. படம் எடுத்து பிலிமைச் சுருட்டுவதற்கு முன் னால் அகப்பட்டவரையில் சுருட் டியதே லாபம் என்று கட்டை அவிழ்த்துக் கொண்டு நீங்கள் ஓடி விட்டீர்கள்.

விருத்தா: இல்லை.

பிச்சு: இல்லையா? யுவர் ஆனர் (நீதிபதியிடம் வந்து) குற்றவாளி தம் குற்றத்தை மழுப்புகிறார். சாட்சிகளை விசாரிக்க அனு மதி கொடுங்கள்....இவரது மழுப்பலையெல் லாம் அம்பலப்படுத்துகிறேன்!

காட்சி — 2

(இரண்டாவது நாள் கோர்ட். விருதா மூவிஸ் மோசடி வழக்கு, விசாரணைக்கு வரு கிறது. அப்பொழுது சாட்சிகளை விசாரிக்கும் படி பிராஸிக்யூஷன் பிச்சுமணிக்கு அனு மதி அளிக்கிறார் நீதிபதி. விருதா மூவிஸ் படத்துக்குக் கதை சொல்ல வந்த கதாசிரி யர் சாவேரி விசாரிக்கப்படுகிறார்.)

பிச்சுமணி: கதாசிரியர் சாவேரி நீர்தானே?

சாவேரி: நானேதான்.

பிச்சுமணி: நீர் எத்தனை படங்களுக்குக் கதை எழுதியிருக்கிறீர்?

சாவேரி: படங்களுக்கா? படங்களுக்கு எதுவும் எழுதிப் பெயர் வந்ததில்லை. ஆனால் பத்துப் பன்னிரண்டு படங்களுக்கு 'வொர்க்' பண்ணியிருக்கிறேன்.

பிச்சு: எழுதுவது வேறு; வொர்க் பண்ணுவது வேறு?

சாவேரி: இரண்டும் வேறு வேறுதான்.

பிச்சு: சரி, 'வொர்க்' பண்ணினேன் என் கிறீர்களே.... அதை விளக்கமாகச் சொல் லும்.

சாவேரி: ஒரிஜின லாக ஒரே ஒரு கதை எழுதின நான் 'ஒவ் வொரு பட முதலாளி







கல்கி காரியாலயம்: விலாசம் மாறுதல்

கல்கி காரியாலயம் இத்தனை நாட்களாக இருந்து வந்த இடத்திலேயேதான் 20, டாக்டர் குருசாமி முதலியார் ரோடில் தொடர்ந்து இருந்து வரும். எனினும், தபால் இலாக்காவினர் கல்கி காரியாலயம் இருந்து வரும் பகுதியை இனி சேத்துப்பட்டு எனக் குறிப்பிட முடிவு செய்திருக்கின்றனர். ஆகவே கடிதம் எழுதுவோரும், கதை, கட்டுரைகள், துணுக்குகள் அனுப்புவோரும், **ஆசிரியர் கல்கி, சேத்துப்பட்டு, சென்னை - 31** என்று விலாசம் எழுதுமாறு கோருகிறோம்.

மானேஜர், கல்கி காரியாலயம்

யிடமும் போய்க் கதையைச் சொல்ல நேர்வதுதான் 'வொர்க்' பண்ணுவது. அதாவது அந்த ஒரிஜினல் கதையைக் கதாநாயகன் கதாநாயகி, காமெடியன், காமிராமேன், டைரக்டர் ஆகியோரிடம் சொல்லும் போதெல்லாம், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனப் போக்குப்படி மாற்றும்போது உருவாகிற வேறொரு கதை படம் ஆகும். இப்படியே என் ஒரே ஒரு கதை பன்னிரண்டு படங்களாகி யிருக்கின்றன. ஆனால் இன்னும் ஒரிஜினல் கதை அப்படியே இருக்கிறது. இது மாதிரி கதை பண்ணுவதை 'வொர்க்' பண்ணுவது என்பார்கள். அதற்கு ஒரு தொகை உண்டு: ஆனால் எவ்ராவது ஒருத்தரின் பெயரைப் படத்துக்குக் கதை வசனம் என்று போட்டுக் கொள்வார்கள்.

பிச்சு: விருதா மூவிக்கும் இதுபோலவே தான் ஒரு கதை 'பண்ண' வந்தீர்களா ?

சாவேரி: இல்லை; கதை வசனமே எழுதச் சொன்னார்கள். அந்த ஒரிஜினல் கதையையே படம் ஆக்கப் போவதாக என்னிடம் விருத்தாசலம் சொன்னார்.

பிச்சு : படம் ஆக்கப் போவதாகச் சொன்னவர் கதையைக் கேட்டாரா ?

சாவேரி: சாவகாசமாகக் கேட்பதாகச் சொல்லி விட்டார்.

பிச்சு: தட்ஸ் ஆல் யுவர் ஆனர் (நீதிபதியை நோக்கி வந்து) படம் எடுக்கப் போவதாகச் சொன்ன விருத்தாசலம், படத்துக்குக் கதையைக்கூடச் சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளலாம் என்று ஒத்திப் போட்டிருக்கிறார். இதிலிருந்தே ஒரு விஷயம் நன்றாக விளங்குகிறது. படக் கம்பெனியை ஆரம்பித்தவர் படத்துக்கான கதையைக்கூட முதலில் கேட்கவில்லை என்றால் என்ன அர்த்தம் ? 'நான் படம் எடுக்கப் போவதில்லை. கூட்டாளிகளை ஏமாற்றத்தான் கம்பெனி வைத்திருக்கிறேன்' என்றுதானே?

நாயுடு: யுவர் ஆனர் ! (எழுந்து வந்து) சாட்சியைச் சில குறுக்குக் கேள்விகள் கேட்க எனக்கு அனுமதி தர வேண்டுகிறேன்.

நீதிபதி : எஸ், புரொஸீட்.

நாயுடு (கூண்டருகே வந்து): நீர்தானே கதாசிரியர் சாவேரி ?

சாவேரி: அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம் ?

நாயுடு: நீர் பட முதலாளிகளிடம் எப்படிக் கதை சொல்லுவீர் ? அதை அப்படியே சொல்லும் !

பிச்சு (எழுந்து): யுவர் ஆனர் ! கதையைக் கேட்க நாம் இங்கே கூடவில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நாயுடு: அவர் கதை பண்ணும் கதையைக் கேட்ட வக்கீலுக்கு — அவர் பண்ணின கதையைக் கேட்க ஏன் விருப்பமில்லை என்பது விசித்திரமாக இருக்கிறது. யுவர் ஆனர், நான் கோர்ட்டின் பொன்னான நேரத்தைப் பாழாக்க இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை; இதில் ஒரு முக்கிய பாயிண்ட் இருக்கிறது : அதனால் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன், யுவர் ஆனர்.

நீதிபதி: எஸ் யு புரொஸீட் மிஸ்டர் நாயுடு.

நாயுடு: சொல்லும். நீர் ஒரு தடவை புரொட்யூஸர் புண்ணியகோடியிடத்திலே சொன்னதை அப்படியே சொல்லும்.

சாவேரி: கதையைச் சொல்கிறதுக்கு முன்னாலே நான் சில கண்டிஷன்கள் போடறதுண்டு.

நாயுடு: என்னென்ன கண்டிஷன்கள் ?

சாவேரி: கதையைச் சொல்ற போது யாரும் குறுக்கே பேசக் கூடாது, கேள்வி கேட்கக் கூடாது என்பதுதான்.

நாயுடு: புண்ணியகோடி என்பவரிடம் இதே கண்டிஷன்கள் போட்டீரா ?

சாவேரி: போட்டுவிட்டுத்தான் கதையைச் சொன்னேன்.

நாயுடு: இது கோர்ட். யாரும் உம்மிடம் கேள்வி கேட்கவோ, குறுக்கே பேசவோ மாட்டார்கள். நீர் கதையைச் சொல்லும். புண்ணியகோடி இடத்தில் சொன்ன கதையைச் சொல்லும். (உரக்க) சொன்ன மாதிரியே சொல்லும் !

சாவேரி (குரலைக் கனைத்து): இருட்டு, கும்மிருட்டு — அமாவாசை இருட்டு — ராத்திரி நடுச் சாமம் — எப்படி இருட்டு — கும்மிருட்டு ; அமாவாசை இருட்டு — எப்படி வேளை ? ராத்திரி நடுச் சாமம்; வானத்திலே



அஞ்சலி



ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்து விட்டன. ஆயினும் அவர் நினைவு எங்கள் உள்ளத்தில் மாண்டுவிடவில்லை. 18-12-68 அவர் நினைவு நாள். ஆனால் அது எங்களால் மறக்க முடியாத நாள். மதிப்புக்குரிய எங்கள் தந்தையார் திரு வி. சுப்பையா முதலியார் இறைவன் திருவடியை அடைந்து விட்டாலும் அவர் என்றும் எங்கள் நினைவிலேயே இருப்பார்.

பணிவன்பு கலந்த எங்கள் மனப்பூர்வமான அஞ்சலியை அன்புத் தந்தைக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எஸ். வையாபுரி. B. E., சென்னை
எஸ். ராஜசேகரன், பெங்களூர்

மாணவர் திட்டம்

மாணவர்களுக்கென்று ஏற்படுத்தி உள்ள 'சிறப்புச் சிறுகதை' திறனாய்வுப் போட்டியில் கலந்துகொள்ள விழையும் மாணவர்களில் நானும் ஒருவன். ஆனால் போன மாதம் நடந்த இரு கல்லூரிகளின் கலவரத்தின் காரணமாக 11-ந் தேதி முதலே கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டு விட்டது. அரையாண்டுத் தேர்வும் நடக்கவில்லை. அந்த அரையாண்டுத் தேர்வு சில கல்லூரிகளில் இந்த மாதத் தொடக்கத்தில் நடந்து கொண்டிருக்கிறது. சிலவற்றில் இனிதான் நடக்கப் போகிறது. இதனால் மாணவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள இப்போட்டியில் மாணவர்கள் கலந்துகொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே என் போன்ற மாணவர்களின் நிலைமையை உணர்ந்து ஜனவரி மாதம் 15 ஆம் தேதிக்குள் அனுப்பவேண்டும் என்று குறித்திருக்கும் முடிவுத் தேதியைச் சிறிது நாட்கள் ஒத்திப்போடுமாறு கோருகிறேன்.

கிழக்குத் தாம்பரம்
சென்னை — 59

சுவாமிநாதன்

[திரு சுவாமிநாதனைப் போன்று பல மாணவர்கள் திறனாய்வுப் போட்டியில் ஆர்வம் காட்டிக் கடிதம் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் முடிவுத் தேதியை மேலும் ஒரு மாதம் மகிழ்ச்சியுடன் ஒத்திப் போடுகிறோம். 15-2-'69க்குள் கட்டுரைகள் 'கல்கி' அலுவலகத்துக்கு வந்து சேர வேணும் என்பதை மாணவ சமுதாயத்துக்கு நினைவுபடுத்துகிறோம். — ஆசிரியர்]

நட்சத்திரம் இல்லே; பூமியிலே வெளிச்சம் இல்லே. அப்படி இருட்டு; கும்மிருட்டு. பளிச்சின்னு ஒரு மின்னல் — என்ன — மின்னல் — பளிச்சின்னு மின்னல் எப்ப மின்னுது? இருட்டிலே — அமாவாசை இருட்டிலே — எப்படிப்பட்ட இருட்டிலே — நட்ட நடுச்சாம இருட்டிலே! பளீர்னு மின்னுது. வானத்திலே நட்சத்திரம் இல்லே — பூமியிலே வெளிச்சம் இல்லே....! இவ்வளவுதான் அந்தப் புண்ணியகோடிகிட்டே என் ஒரிஜினல் கதையைச் சொன்னேங்க.... அதற்குள்ளே அந்த மனுஷனுக்குக் கேட்கப் பொறுமை இல்லே! 'ஏய்யா... நான் படம் எடுக்கவா.... இல்லே எக்ஸ்போஸ் பண்ணின அந்தக் கறுப்பு பிலிமைப் பை தைச்சு விக்கவா'ன்னு கேட்டுட்டு எழுந்திட்டாருங்க.

(இப்போது கோர்ட்டில் நாயுடுவும், சாவேரியும் மட்டும்தான் நின்றிருந்தார்கள்.)

நாயுடு: யுவர் ஆனர்! படக் கதையை இவர் சொன்ன போதே, கோர்ட்டிலே நம்மைத் தவிர வேறே ஆள் இல்லையே! இவர் கதையைப் படமாக்கியிருந்தால் தியேட்டரில் ஆபரேட்டரைத் தவிர வேறு யார் இருப்பார்கள் யுவர் ஆனர்? இப்படிப்பட்ட கதாசிரியரிடம் என் கட்சிக்காரர் கதை கேட்கவில்லை என்பது ஒரு தப்பா? யுவர் ஆனர்..... சாட்சியை நான் விசாரித்து முடித்துவிட்டேன்.

காட்சி — 3

(மூன்றாவது நாள் கோர்ட். விருதாசலம் மோசடி வழக்கு சம்பந்தமாக டாக்ஸி டிரைவர் பலவேசம் பிராசிக்யூஷன் தரப்பில் விசாரிக்கப்படுகிறார். விருத்தாசலம் படக் கம்பெனி ஏற்படுத்தப் போவதாகக் கூறித் தனக்குக் காமெடியன் வேஷம் தருவதாக வாக்களித்தார் என்றும், அதற்காகவே தன்னையும் ஒரு கூட்டாளியாக வைத்துக் கொள்வதாகச் சொல்லிக் கம்பெனி வேலைகளுக்காகப் பணமில்லாமல் டாக்ஸி ஓட்டச் சொன்னதாகவும் குறிப்பிடுகிறார் டிரைவர் பலவேசம்... விசாரணை புரிந்த பிச்சமணி உட்கார்ந்த உடனே, 'டிபன்ஸ்' தரப்பில் நாயுடு எழுகிறார்.)

நாயுடு: மிஸ்டர் பலவேஷம்! உமக்கு விருதாசலம் கொடுப்பதாகச் சொன்ன வேஷம் என்ன?

பலவேசம்: காமெடி வேஷங்க!

நாயுடு: அதற்காகவே நீர் டாக்ஸியை ஓசியில் ஓட்டினதாகச் சொன்னீர்களே..... அது உம்முடைய சொந்த வண்டியா?

பலவேசம்: எனக்கேதுங்க சொந்த வண்டி? நீங்ககூட அடிக்கடி வருவீங்களே, அந்த அம்பாஸிடர் வண்டிதாங்க!.... ஓனர் வேறே.....

நாயுடு: ஓனர் வண்டியை நீர் ஓசியில் இவர்களுக்கு எப்படி ஓட்டினீர்?

பலவேசம்: வழக்கமா எல்லாரும் செய்யறதுங்களே.... அப்படித்தாங்க. மீட்டருக்குத் துணியைக் கட்டிக்கிறது; வண்டியை ஓனருக்கு அடிக்கறமாதிரி இவுங்களுக்கு அடிக்கிறது. ஓனர் கேட்டா.... வண்டி லைன்லே 'எம்டி'யா ஓடிச்சுன்னு சொல்லிச் சமாளிக்கிறதுதாங்க! ஆனாப் பாருங்க! அதுக்கூட நான் பெரிசா நினைக்கல்லே! பைனான்ஸ் தேடுவோம்னுட்டு விருத்தாசலம் கும்பகோணம் போலான்னு என்கிட்டே ஒரு பிரைவேட் வண்டியைக் கொணரச் சொன்னப்போ, நான் என் பெண்டாட்டி கழுத்துச் சங்கிலியை வித்தேனே, வேஷம் கிடைக்கிற ஆசையாலே. அத்தே நினைச்சாதாங்க வயிறு எரியுது! ஏமாத்திப்புட்டானுக எல்லாருமாக் கூடி!

நாயுடு: உம்மை விருத்தாசலம் ஏமாற்றினதாகச் சொல்கிறீரே! நீர் ஏன் விருத்தாசலத்தின் மீது வழக்குப் போடவில்லை?

பிச்சுமணி (எழுந்து): ஐ அப்ஜெட் யுவர் ஆனர்! சாட்சியைப் பார்த்து நண்பர் வழக்குப் போடச் சொல்லித் தூண்டுவது ஆட்சேபகரமான விஷயம்! நண்பர் கோர்ட் வராந்தாவில் கட்சிக்காரர்களைக் கன்வாஸ் செய்து கொண்டிருந்தது போக இப்போது கோர்ட்டுக்குள்ளேயே ஆரம்பித்து விட்டார்.

நாயுடு: யுவர் ஆனர்! என் கேள்வியின் நோக்கம் அதுவல்ல. விருத்தாசலத்தால் இவரும் பாதிக்கப்பட்டிருக்கிறாரே....வேஷம் கிடைக்கும் என்று நம்பி ஏமாந்து போயிருக்கிறாரே.... ஏன் இவர் அந்த நஷ்டத்துக்காகக் கேஸ் போடவில்லே என்பதுதான் என் கேள்வி!

நீதிபதி: எஸ். புரொஸீட்.

நாயுடு: சொல்லும் ஐயா! நீர் ஏன் வழக்குப் போடல்லே.

பலவேசம்: நான் பேசாமல் ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டிக்கினு இருக்க வேண்டியவன், சினிமா ரோஜுக்கு ஆசைப் பட்டேன். அப்படி ஆசைப்பட்டுத் தப்புத் தண்டாக் காரியங்களிலே இறங்கினேன். அதுக்குத் தண்டனையை ஆண்டவன் கொடுத்துப்புட்டான். 'வீட்டருக்குத் துணியைக் கட்டலாண்டா, என் கண்ணைக் கட்ட முடியாது'ன்னுட்டு ஆண்டவன் முழிச்சிருந்து பார்த்துப்புட்டான். இனிமேல் எதுக்குங்க வழக்கு?

நாயுடு: தட்ஸால் யுவர் ஆனர்!

காட்சி — 4

(இடைவேளைக்குப் பிறகு கோர்ட் கூடியிருக்கிறது. குமாரி விஜயசபலஸ்ரீ விசாரணைக்கு வந்திருக்கிறாள்.)

பெஞ்ச் கிளார்க்: அடுத்த சாட்சி குமாரி விஜயசபலஸ்ரீ — கூப்பிடய்யா.... (பியூனைப் பார்த்து) கூப்பிடு! குமாரி விஜயசபலஸ்ரீ...

பியூன்: அதென்னமோ பேர் சொன்னீங்களே.... என் வாயிலே நொழைய மாட்டேங்குதே!

கிளார்க்: ஏய்யா, நுழையாது? அந்தம்மா தான் பட உலகிலே நுழையப் போறாங்களாமே.... சொல்லுமய்யா.... நல்லா கவனிச்சுச் சொல்லு. குமாரி விஜயசபலஸ்ரீ.... (உரக்க) சொல்லுமய்யா.... குமாரி..... விஜயசபலஸ்ரீ.... சொல்லும். குமாரி விஜயசபலஸ்ரீ.... (பியூன் அருகே வந்து நின்று ஆத்திரத்தோடு) சொல்லுமய்யா! குமாரி விஜயசபலஸ்ரீ!

பியூன்: அதுதான், நீங்களே மூணு தபா சொல்லிட்டீங்களே..... அதோ அவுங்களே வந்துட்டாங்க.

பிச்சுமணி: உங்கள் சொந்தப் பெயர் என்ன?

விஜயசபலா: என் சொந்தப் பெயர் கமலாங்க. சினிமாப் பேரு...

பிச்சுமணி: 'விஜய சபலஸ்ரீ' அது போகட்டும். இப்போ எத்தனை படங்களிலே நடிச்சிகிட்டிருக்கீங்க?

வி.ச.ஸ்ரீ.: படங்களா? விஜயசபலஸ்ரீன்னு பேரை வைச்சுட்ட பின்னாலே கிடைச்ச முதல் சான்ஸே விருத்தாசலம் சான்ஸ் தானுங்களே.....

பிச்சு: சரி! உங்களுக்கு விருத்தாசலத்தை எப்படிப் பழக்கம்?

வி. ச. ஸ்ரீ.: எனக்கு நல்லதம்பியை வெகு நாளாத் தெரியும்!

பிச்சு: நான் விருத்தாசலத்தைக் கேட்கிறேன்.... நீங்கள் நல்லதம்பியைச் சொல்றீங்க.....!

வி.ச.ஸ்ரீ.: அதைச் சொல்லத்தானுங்களே. அப்படி வரேன்.

பிச்சு: சரி, வாங்க!

வி. ச. ஸ்ரீ.: வெகு நாளா நானும் நல்ல தம்பியும் நாடகத்திலே நடிச்சுக்கிட்டிருந்தோம். அவர்தான் ஹீரோ. நான் ஹீரோயினி. ஒகோன்னு பேருள்ள நாடகம். ஒரு சீன்லே வில்லன் என்னைக் கட்டிப் போய்ப் பாதாளக் கிடங்கிலே போட்டு, ஹஹ்ஹஹா ஹஹ்ஹஹான்னு சிரிக்கிறார்; இந்தாடி, என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா இல்லையான்னு என் காலை மிதிக்கிறார். கையைப் பிடிச்சுக் கட்டி அணைக்க வரார்! அப்ப நான் திமிறணும். கதைப்படி அப்படி. ஆனால் அன்னைக்கு அவர் பிடிச்ச பிடியிலேருந்து என்னாலே திமிற முடியல்லே! சரிதான் கல்யாணமே பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டேன். என்னைக் காப்பாற்ற வந்த ஹீரோ அப்படியே மரமா நின்னுட்டார்!

பிச்சுமணி: ஏன் அப்படி?

வி.ச.ஸ்ரீ.: கதைதான் மாறிப் போச்சுங்களே! நான் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லணும்; அதுக்குப் பிறகுதான் ஸ்டோரியே!

நீதிபதி (தம்மை மறந்து): அடடா!

பிச்சுமணி: யுவர் ஆனர்!

நீதிபதி: யூ புரொஸீட்.

பிச்சுமணி: அப்புறம் என்ன ஆச்சு?

வி. ச. ஸ்ரீ.: என்ன ஆகணும்? அத்தோட சீனும் குளோஸ்; நாடகமும் குளோஸ். அன்னையிலேருந்தே என் மேலே நல்ல தம்பிக்கு மனஸ்தாபம்.

பிச்சுமணி: சரிதான்! நீங்க நல்லதம்பியைப் பற்றியே சொல்லி வர்றீங்களே.... உங்க கதையிலே இதுவரையிலே விருத்தாசலமே வரலேயே!

வி.ச.ஸ்ரீ: அதுதான் வராருங்களே, இப்ப ஒரு நாள், விருத்தாசலத்தைக் கூட்டிக்கினு நல்லதம்பி என் வீட்டுக்கு வந்தார். இந்தாம்மா, பழைய மனஸ்தாபத்தையெல்லாம் மனசிலே வைக்காதே.... நாங்க படம் எடுக்கப் போறோம்....! இவருதான் எல்லா ஏற்பாடும் செய்யப் போறார்'னு விருத்தாசலத்தை நல்லதம்பி அறிமுகப்படுத்தி வைத்தார். நான் கொஞ்சம் பணம் போடறேன். ஹீரோவா நடிக்கறேன்; நீ கொஞ்சம் பணம் போடு, ஹீரோயினா நடின்னு சொன்னாரு. நம்பிப் பணத்தைப் போட்டேன். படம் எடுக்கறதாச் சொல்லிட்டு, மேக்கப் போட்டு ஒரு ஸ்டில் எடுத்தாங்க. அவ்வளவுதாங்க. கடைசிலே ஏமாத்திப்புட்டாங்க!

பிச்சு: இத்தனையையும் நல்லதம்பி விருத்தாசலத்தை நம்பித்தானே செய்தார்?

வி. ச. ஸ்ரீ.: அதிலென்னங்க சந்தேகம்? பாவம், நம்பி ஏமாந்திட்டு நல்லதம்பி இப்ப ஒரு ஹோட்டல்லே சர்வரா இருக்கறதுக்குக் காரணமே விருத்தாசலம்தானுங்களே?

பிச்சு: தட்ஸ் ஆல் யுவர் ஆனர்!

தொழில்
மந்த
தொழில்
சமாளிக்க
தொழில்
தேவைப்படுகிறது
தொழில்

எமது தொழிலிலும் மந்த நிலை கடுமையாகத்தான் இருக்கிறது. நாங்களும் மந்த நிலையை எப்படி சமாளித்து நிலைபெறச் செய்கிறது என்று கவலைப்படலாம். ஆனால் இண்டியன் ஆக்ஸிஜன் ஸ்தாபனத்தில் அப்படி ஓய்ந்துவிடுவது பழக்கமில்லை. தொழிலில் மந்த நிலை என்றாலே அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு விடுவோம். நாங்கள் இந்நிலையை சமாளிக்கும் முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

உதாரணமாக எமது மார்கெடிங் பிரிவில் தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் ஏற்றுமதி செய்வதை மேன்மேலும் அதிகரிக்க ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

எமது என்ஜினியர்களும் விஞ்ஞானிகளும் விரிவான ஆராய்ச்சியின் மூலம் சிறப்பு மிக்க அநேக புதிய தயாரிப்புகளை உருவாக்கி அந்நிய செலாவணியை நிறைய சேமிக்க முயற்சித்து வருகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டுமே இறக்குமதி செய்யப்படவேண்டிய அநேக பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்து ரூ. 36 லட்சத்திற்கு அதிகமான அந்நிய செலாவணியை மிச்சமாக்கியிருக்கிறோம். தொழில் துறைகளுக்காக இந்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டே இண்டியன் ஆக்ஸிஜன் முதன் முறையாகத் தயாரித்து வழங்கிய புத்தம் புதிய தயாரிப்பு வெல்டிங் வேலைக்காகவுள்ள இண்டார்க ஜாம்ஆர் 300 ஸெலேனியம் ரெக்டிபையர் செட், இண்டார்க் ஸபமர்ஜ்ட் ஆர்க் வெல்டிங் வயர் மற்றும் ப்ளூஸார்க்/ஸிஓ2 ஆடொமாடிக் ஆர்க் வெல்டிங் வேலைக்கான தொடர்பான கவசமுள்ள எலக்டிரோடு முதலியவை.

இந்தியத் தொழில்களில் உற்பத்தியை அதிகரிக்கவும், தயாரிப்பு நுட்பங்களை அபிவிருத்தி செய்யவும் சிறப்பாக உதவும் வகையில் ஆக்ஸிஜன், நைட்ரோஜன் மற்றும் இதர வாயுக்களுக்கு புதிய உபயோக முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இன்னும் அநேக துறைகளில் புதிய சிருஷ்டிகள் தொழில் திறமையை விருத்தி செய்து, தொழில் மந்தத்தின் விளைவுகளை ஜயிக்க உதவுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்திற்கு சேவை புரிவதில் அநேக மார்க்கங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இண்டியன் ஆக்ஸிஜன் தன்னுடைய எதிர்கால வளர்ச்சியில் மட்டுமின்றி நாட்டின் எதிர்கால மேன்மையிலும் நம்பிக்கை வைத்திருக்கின்றது

IOL இண்டியன் ஆக்ஸிஜன் லிமிடெட்

IOC-149 TAM

இந்திய தபால்
தந்தி இலாகா
நாட்டில் ஒற்றுமை
வளரவும், பிற
தேசங்களை அறியவும்
உதவுகிறது



தமது 1,00,000 தபால் நிலையங்கள், 10,000 தந்தி நிலையங்கள், மற்றும் 10 லட்சம் தொலைபேசிகள் ஆகியவற்றின் மூலம் பாரதத்தின் 50 கோடி மக்களையும் உலகத்தின் 300 கோடி மக்களையும் கடிதங்களின்மூலம் பிணைக்கப் பணியாற்றுவதை இந்திய தபால் தந்தி இலாகா ஒரு பெரும் பேறாகக் கருதுகிறது.

இந்திய தபால் தந்தி இலாகா

(பெருமிதமாகப் பிச்சுமணி அமருகிறார். கணேத் தூக்கொண்டு எழுகிறார் நாயுடு.)

நாயுடு: ஏனம்மா... உன் பணத்தை உனக்குச் சான்ஸ் தர்றதாச் சொல்லி விருத்தாசலம் ஏமாத்திட்டார்னு சொல்றயே.... நீயும் ஏன் விருத்தாசலத்து மேலே கேஸ் போடக் கூடாது?''

வி.ச.ஸ்ரீ.: விருத்தாசலம் யாரு? அவரை எனக்கு முன்னே பின்னே தெரியுமா? அதனாலே, நல்லதம்பிக்கே நோட்டீஸ் விட்டேன்.

பிச்சு : வக்கீல் யாரு ?

நாயுடு: அது கண்டிப்பா நீர் இல்லே..... நானும் இல்லே....

வி. ச. ஸ்ரீ.: வக்கீல் யாருமில்லிங்க. நானேதான் நோட்டீஸ் விட்டேன். ஒரு லட்டர்லே செமத்தியாக் கொடுத்தேன்..... அவரு பதில் நோட்டீஸ் கொடுக்க, நான் அதற்குப் பதில் நோட்டீஸ், கடைசியிலே அது கல்யாண நோட்டீசா மாறிடிச்சுங்க. இப்ப நானும் அவரும் கணவன் மனைவிங்க.

பிச்சு : மிஸ்டர் நல்லதம்பி! நீங்கள் உங்கள் சொந்த ஊரான கோவையை விட்டு எதற்காகச் சென்னை வந்தீர்கள்?

நல்லதம்பி: நல்லதொரு கலைத் துறையில் நற்புகழ் எடுத்து, நடிகனுகிப் பொருள் ஈட்டிச் செல்வந்தனுகலாம் என்றுதான் கையில் பத்தாயிரம் ரூபாய் கொண்டு வந்தேன். ஆனல் அடுத்துக் கெடுக்கும் பாவி என்னை வஞ்சித்து விட்டான். என் நெஞ்சின் ஆசைக் கோட்டைகளைச் சுக்கல் சுக்கலாகச் சிதறிச் சின்னபின்னம் அடையச் செய்துவிட்டான்!

பிச்சு : உம் ஆசைக் கோட்டைகள் என்ன?

நல்ல: அன்புத் தங்கை. ஒரே ஒரு அன்புத் தங்கை. பெயரைச் சொன்னுல் வாயெல்லாம் மணக்கும். பதினெட்டுப் பருவத்தாள் : பசுங் கிளிபோல் உருவத்தாள் — மனேரஞ்சிதம் ! அவள் எதிர்காலத்துக்குக் கண்ணுக்கு நிறைவான கணவனைத் தேர்ந்தெடுத்து, கன்னூறு மங்கல நாண் பூட்டி இந்தக் கண் குளிரக் கல்யாணம் செய்து வைக்க மனக்கோட்டை கட்டினேன் ! அலங்கார விளக்குகள் அதியற்புதமான ஜோடனைகள் செய்து அவள் திருமணத்தை ஆபட்ஸ்பரியிலே நடத்தலாம் என்று ஆகாசக் கோட்டை கட்டினேன். ஆனல் யாருக்கோ சமீபத்தில் ஆபட்ஸ்பரியில் நடந்த ஒரு திருமணத்துக்கு இந்த அருமை அண்ணன் இட்டிலிக்கு மாவரைத்துக் கொண்டிருந்தான் என் பதை அந்தத் தங்கை — மனேரஞ்சிதம் அறிந்தால் என்னமாகத் துடிப்பாளோ.... ஓ ! விதியே.... ஏ.... (அலறுகிறான்)

பிச்சு : இதற்கெல்லாம் காரணம் யார் ?

நல்ல: யார் காரணம்? நடிப்பதற்காக வந்தவனை, படத்தில் நடிப்பதைவிட நாமே ஒரு படம் எடுத்து விடலாம் என்று நம்பச் செய்தானே, அவன்தான் ! நடிகனுக வந்தவனை புரொட்யூஸர் ஆகச் செய்து, பைனான்ஸ் கிடைக்கும் என்று பத்தாயிரத்தைப் பார்னிச்சருக்கும், கம்பெனி வாடகைக்குமாக வாரிக் கொடுக்க வைத்தானே, அவன்தான் ! ஜாலக்காகப் பேசி, தனக்காக ஏமாற்றி பைனான்ஸ் தேடப் போன வழியில், எங்களை ஏமாற்றிவிட்டு நழுவி ஓடினனே! அவன்தான்! கண்ணியமாக வாழ்ந்தவனை, கடமை குலையாதவனை, கட்டுப்பாடில்லாதவனுக்கிக் கைப் பொருளை இழக்கச் செய்து என்னை நடுத் தெருவில் நிறுத்தி ஓர் ஹோட்டலில் சர்வராகும்படி நிர்ப்பந்தப்படுத்தினனே.... அவன்தான் !

(இது நேரம் வரையில் பைலைப் பார்த்து ஏதோ சிந்தித்தவாறு நடமாடிக் கொண்டிருக்கிறார் 'டிபன்ஸ்' வக்கீல் நாயுடு.)

நீதிபதி: மிஸ்டர் நாயுடு. யு கேன் கிராஸ் எக்ஸாமின் !

நாயுடு (பைலில் கவனமாக): தேங்க்யு யுவர் ஆனர் ! சென்னைக்கு வரும் பொழுது உம்மிடம் பத்தாயிரம் ரூபாய் இருந்ததாகச் சொல்கிறீர் அல்லவா ?

நல்லதம்பி: ஆமாம்.

நாயுடு: அது யாருடைய பணம் ?

நல்லதம்பி: என் பணம்தான். வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வந்தது.

நாயுடு: விருத்தாசலம் உம்மை ஏமாற்றி விட்டதாகவும், பத்தாயிரம் ரூபாயை இழந்து விட்டதாகவும் சொல்லும் நீர், அதற்குப் பிறகு ஏன் திரும்பக் கோயமுத்தூருக்குப் போகவில்லை ?

நல்லதம்பி: பணம் இல்லாமல் போனுல், என்னை வீட்டிலே சேர்ப்பார்களா ? சின்ன வயதிலிருந்தே சினிமாவில் நடிக்கும் என் ஆசையை வரவேற்காத என் வீட்டாருக்குத் தெரியாமல் என் தங்கையின் திருமணத்துக்காக வைத்திருந்த பணத்தைக் கொண்டு வந்து பொருளீட்ட வந்தவன் வெறுங் கையோடு வேதனையைச் சுமந்து கொண்டு போனுல் விடுவார்களா, உள்ளே? விசித்திரமாக இருக்கிறதே உங்கள் கேள்வி ?

நாயுடு: தட்ஸ் ஆல் யுவர் ஆனர்! வாதியே தன் பெற்றோரை ஏமாற்றிப் பெற்றோருக்குத் தெரியாமல் பத்தாயிரத்தைத் திருடிக் கொண்டு வந்தவர். இவர் இன்னொருத்தரால் ஏமாற்றப்பட்டதாகச் சொல்வதை எப்படி ஒப்புக் கொள்வது, யுவர் ஆனர் ?

நீதிபதி (எரிச்சலோடு): சரிதான் உட்காருமய்யா. டாக்ஸி டிரைவர் பலவேசம் தன் முதலாளியின் வண்டிக்குத் துணியைக் கட்டி ஏமாற்றி ஏமாந்திருக்கிறார். நல்லதம்பி தன் பெற்றோரை ஏமாற்றி வந்து இங்கே எதையோ பெரிசாக எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறார். விருத்தாசலம் இவர்களை வைத்து ஏதாவது செய்யலாமா என்று எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறார். தனக்கு ஹீரோயின் சான்ஸ் கிடைக்கும் என்று நடிகை குமாரி விஜய சபலா ஸ்ரீ விருதாஜலத்தை நம்பி ஏமாந்திருக்கிறுள். ஒவ்வொருவரும் அவரவர்கள் செய்த பாவத்துக்குத் தண்டனையை அவ்வப்போது அனுபவித்து விட்டிருக்கிறார்கள். எனவே, இந்தக் கேஸை ஒரு நிபந்தனையோடு டிஸ்மிஸ் செய்கிறேன். நிபந்தனை மட்டுமல்ல; அதுவேதான் தண்டனையும். விருத்தாசலம் பைனான்ஸ் தேடித் தமிழ்ப் படம் எடுத்தால், நல்லதம்பியைத்தான் ஹீரோவாகப் போட வேண்டும்; டாக்சி டிரைவர் பலவேசத்துக்குத்தான் காமெடி வேஷம் கொடுக்க வேண்டும். எத்தனை வருஷங்கள் ஆனுலும் சரி; அப்போது எந்நிலைமையில் யார் இருந்தாலும் சரி.... நடிகை சபலாவுக்குத்தான் ஹீரோயின் வேஷம் கொடுக்க வேண்டும். அப்பொழுது சபலாவின் வயசு குறுக்கே நிற்கக் கூடாது. இதுவே நிபந்தனை. □

எனக்கு மட்டும் சட்டம் இயற்றும் அதிகாரம் இருந்து, நான் இயற்றுகிற சட்டத்தை மதிக்கிற மக்களும் இருந்தால் 'பிரீஃப் கேஸ்களை எடுத்துக் கொண்டு யாரும் பஸ்ஸில் பிரயாணம்செய்யக்கூடாது!' என்று சட்டம் போடுவேன். அப்போதுதானே என் போன்றவர்கள் முழங்கால் இல், விலா, மூக்கு, பாதம் — எல்லாம் பிரீஃப் கேஸினால் பதம் பார்க்கப்படாமல் பத்திரமாகப் பஸ்ஸில் பிரயாணம் செய்ய முடியும்?

இந்தப் பிரீஃப் — கேஸ்'களுக்குத் தாத்தா என்கிற பெருமை துணிப் பைகளுக்கே போய்ச் சேர வேண்டும். முப்பது வருடங்களுக்கு முன்னால் ஆபீசுக்குப் போனவர்கள் அத்தனை பேர் கையிலும் துணிப் பைகள்தாம் இருந்தன. சிலர் கையில் மட்டும் சாக்குப் பை — 'அ. ஆ. இ. ச.'வோ, 'கந்தசாமி மளிகைக் கடை' என்றோ சிவப்பிலும் பச்சையிலும் அச்சிடப்பட்டது — காட்சியளிக்கும். இந்தப் பைகளுக்குள்தான் அந்தக் காலத்து ஆசாமிகள் மத்தியானச் சிற்றுண்டி, வெற்றிலைச் செல்லம், தினசரிப் பத்திரிகை, எல்லாவற்றையும் அடைத்துக் கொண்டு போவார்கள். சாக்குப் பைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறையவும் துணிப் பைகள் மட்டும் நிலைத்தன. அவற்றுக்கும் தலைவலி பிடித்தது, தோல் பை வருகையால்!

இருபது வருடங்களுக்கு முன்னால் — அதாவது முதல் முதலில் தோல் பை நாகரிகம் தொடங்கியபோது— ஒருத்தர் கையிலே தோல்பையை வைத்துக் கொண்டிருந்தாரானால் அவர் நிச்சயம் ஓர் எழுத்தாளர் என்றோ பத்திரிகைக்காரர் என்றோ சொல்லிவிட முடியும். வறுமை, வெற்றிலை பாக்கு, ஜிப்பா ஆகியவற்றுடன் தோல் பையும் எழுத்தாளர்களின் ஆபரணங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

எழுத்தாளர்களில் ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சினிமாக்காரர்கள், வியாபாரிகள், அரசியல்வாதிகள் ஆகியவர்கள் கைகளுக்குத் தாவியது தோல்பை! எத்தனை நாட்கள்தான் தோல் பை தாக்குப் பிடிக்கமுடியும்? விலை

மாடர்ன் மடிசஞ்சிகள்

முகுந்தன்

குறைவான பிளாஸ்டிக் கைப் பைகள் வந்து, தோல் பைகளை விரட்டியடித்தன. மலிவு; பளபளப்பான தோற்றம்; தோல் பையில் இருந்த அதே வசதிகள், பல வண்ணங்கள் — இத்தனை காரணங்களுக்காகவும் பிளாஸ்டிக் பைகளைப் போட்டி போட்டுக் கொண்டு எல்லோரும் வாங்கினார்கள். அதன் உபயோகம் இன்னும் கீழ் மட்டத்துக்கு இறங்கி வரவும் பெட்டிக் கடைக்காரரின் கையில் கூடப் பிளாஸ்டிக் பை காட்சியளிக்க ஆரம்பித்தது!

பிளாஸ்டிக் பை சகாப்தம் முடிவடைவதற்கான அறிகுறியே இப்போது 'பிரீஃப் கேஸ்'கள் தலைகாட்டியிருப்பது. பெரிய பெரிய கம்பெனிகளிலெல்லாம் அவர்களே தங்களது செலவில் அதிகாரிகளுக்கு இந்தக் 'கேஸ்'களை வாங்கித் தருகிறார்கள். இன்னும் சில பேர் தங்கள் கம்பெனிப் பெயர் பொறித்த பெட்டிகளை விசேஷமாகத் தயாரித்து வழங்குகிறார்கள். சாதாரண



மாக மூடித் திறப்பது, சாவி போட்டுத் திறப்பது என்றெல்லாம் ரக ரகமாக இந்தப் பெட்டிகள் புழங்குகின்றன. பெட்டியின் மேலே போட்டிருக்கிற ரெக்ஸின், கைப்பிடி, பூட்டு அமைப்பு இவற்றுக்கேற்றபடி விலை ஏறிக்கொண்டேபோகிறது.

கம்பெனி அதிகாரிகள் ஊர் விட்டு ஊர் போகும்போது மட்டுமல்ல; உள்ளூரிலேயே இன்னொரு கம்பெனியைச் சேர்ந்தவரைச் சந்திக்கப் போகும்போதும் அவருக்குத் துணை போவது இந்தப் 'பிரீஃப் — கேஸ்'தான். சிலருக்கு அதுதான் தோழன்; அணிகலன்; தத்துப் புத்திரன்!

இந்தப் பிரீஃப் கேஸ்களில் அப்படி என்னதான் எடுத்துக் கொண்டு போகலாம்?.... ஆபீஸ் சம்பந்தப்பட்ட கடிதங்கள், குறிப்புக்கள், நோட்டுப் புத்தகம், விலைப் பட்டியல்கள், 'கேட்லாக்கு'கள் — இவை தவிர பத்திரிகைகள், கார்ட்னர் அல்லது கிறிஸ்டி அல்லது மைக் ஷெய்ன் துப்பறியும் நாவல்கள், பேனா, — பென்சில், சாவிக் கொத்து, மூக்குக் கண்ணாடி, சோப்புக் கட்டி, சீப்பு, பற்பசை, பிரஷ் அத்தனைக்கும் இடமுண்டு பெட்டியிலே. இனியோ இனியென்று திணித்துக் கொள்ளலாம். என்னுடைய நண்பர் ஒருவருக்கு விதம் விதமான மருந்துகளை வாங்கிச் சாப்பிடுவதென்றால் அலாதிப் பிரியம். அவர்



பெட்டியை எப்போது திறந்தாலும் உள்ளே சின்னஞ் சிறு மருந்துப் புட்டிகள் இரண்டு மூன்றைப் பார்க்கலாம். இன்னொருத்தர் மோர்ச் சாதப் பொட்டலத்தைப் பெட்டிக்குள் வைத்து எடுத்து வருவார்.

இந்தப் பெட்டிகளை வேறெந்தெந்த விதங்களில் உபயோகப்படுத்தலாம் என்று யோசித்துப் பார்த்ததில் தோன்றிய சில யோசனைகள்:

1. நாக்குக்கு அடிமையானவர்கள் அப்பளக்கட்டுகளையும், வற்றல் வடகங்களையும் வாங்கிப் பெட்டியில் அடுக்கி வீட்டுக்குக் கொண்டு போகலாம்; வீட்டுச் சாப்பாட்டின்போது ஹோட்டல் பண்டம் வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள் வீடு திரும்பும்போது மசால் தோசையையோ மைசூர் போண்டாவையோ, கரம் பக்கோடாவையோ திணித்துக் கொண்டு வரலாம்.




2. சலவைக்குப் போட்டிருக்கிற குழந்தைகளின் துணிமணிகளையும், [மனைவியின் புடவை, ஜாக்கெட் முதலியவற்றையும் கௌரவமாக மூன்றும் பேருக்குத் தெரியாமல் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கலாம்.

3. சூப்பர் மார்க்கெட்டுக்குப் போகிறவர்கள், அங்கே அவர்கள் அழகாகப் பாலிதீன் பைகளில் போட்டுத் தருகிற மிளகாய் வற்றலையும், கொத்தமல்லி விதையை யும் வாங்கிக் கொண்டு வர இந்தப் பெட்டியைப் பயன்படுத்தலாம்.

4. பழைய பேப்பர்காரனுக்குப் போடுவதற்குப் பத்திரிகைகளை அடைத்துக் கொண்டு போனால் ஜம்மென்று இருக்காதா?

5. கல்யாணத் தரகர்கள் ஜாதகக் கட்டுகளையும், ஒரு ரீல் மட்டுமே எடுத்துவிட்டு, ஃபைனான்சுக்காகக் காத்திருக்கும் படத் தயாரிப்பாளர்கள் தங்கள் முதல் ரீலையும்; புரோகிதர்கள் தர்ப்பைக் கட்டுகளையும் இந்தப் பிரீஃப் கேஸுக்குள் வைத்து எடுத்துக் கொண்டு போகலாம்!

இதையெல்லாம் சொல்லிக் கொண்டே வரும்போது என்னுள் ஒரு பயம் தலைகாட்டுகிறது.



அந்தக் காலத்திலெல்லாம் மிகவும் ஆசார சீலர்களாக இருப்பவர்கள் தங்கள் உடைமைகளை ஒரு நார்ப் பையில் சுற்றி, போகிற இடமெல்லாம் அதையும் கொண்டு போவது வழக்கம். அவர்கள் இப்படிக் கொண்டு போனவைகளுக்கு 'மடிசஞ்சி' என்று பெயர். ஒரு காலத்தில் உயர்வாகத் திகழ்ந்த இந்தச் சொல், காலக்கிரமத்தில் தேய்ந்து இரிந்து போய், கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய ஒன்றாக மாறி விட்டது. அவர்களை 'மடி சஞ்சிகள்' என்று அழைத்த நம்மைப் பற்றி இருபது முப்பது வருடங்களுக்குப் பின்னால் வருகிற சந்ததியினர் என்ன சொல்வார்கள்?........ "அது ஒரு சுத்த பிரீஃப் — கேஸ்......." என்று சொல்லலாம் அல்லவா?

எனக்குப் பயமாக இருக்கிறது, சுவாமி!

ஓவியர் மணியம் நினைவு நிதி

ஓவியர் மணியத்தின் நினைவு நிதிக்கு மன நிறைவோடு வழங்கிய அன்பர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உடல்நலக் குறைவினால் சோர்வுற்றிருந்த மணியம் ஜீவியவந்தராயிருந்தபோதே அவருக்கு உதவி நிதி வழங்கி உற்சாகப்படுத்த நினைத்திருந்தபோது நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்து விட்டது. மணியம் இயற்கை எய்திவிட்டார். நாம் அவருக்கு அளிக்க இருந்த உதவி நிதியை நினைவு நிதியாக மாற்ற நேர்ந்தது.

நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து நன்கொடை வழங்கிய அன்பர்கள் அனைவரும் மறைந்த ஓவியக் கலைஞரின் குடும்பத்துக்குத் தருணம் அறிந்து உதவிய நற்கருமத்தின் பயனை அடைவார்கள் என்பது திண்ணம்.

இதுவரையில் சேர்ந்த தொகையின் விவரத்தைக் கீழே காணலாம். இத்துடன் மேற்படி நிதியைப் பூர்த்தி செய்து மறைந்த ஓவியக் கலைஞரின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளோம். நிதியைப் பூர்த்தி செய்ய மனநிறைவோடு வழங்கிய அன்பர்களுக்கு மீண்டும் ஒரு முறை எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3-11-68 கல்கியில் வசூல் வரவு ரூ. 1017 - 35

பாரதி அன்பர்கள், மதுரை-1 50.00, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி சிப்பந்திகள், சென்னை 26.00, அகிலன், சென்னை-14 25.00, ஆரணி அன்பர்கள் 20.00, ஸ்ரீமதி கே. சண்பகாம்பாள், சென்னை-4 20.00, தமிழக அரசு நலநிதித் தணிக்கைத் துறை அலுவலர் மனமகிழ் மன்றம், சேலம்-7 15.50, மல்லிகை மன்றம், ராயப்பேட்டை, சென்னை 12.00, ஸ்ரீமதி விமலா ரமணி, கோயமுத்தூர் 10.00, ஆனைமலை எஸ்டேட் தொழிலாளர் கூட்டுறவு அர்பன் பாங்க் லிமிடெட், வால்பாறை 10.00, பி. எஸ். சண்முகநாதன் அண்ட் கோ., ஹைதராபாத் 10.00, ஆர். கண்ணன், மதுரை-9 10.00, கலைக் கல்லூரி முதல் வருஷ மாணவர், சென்னை-3 10.00, டாக்டர் ஏ. வி. ராஜகோபால், சென்னை-34 10.00, ஓர் அன்பர், காருகோத்தான் 10.00, மிஸ் எஸ். பி. லலிதா, சென்னை-32 10.00, எஸ். விசுவநாதன், சென்னை-17 10.00, அனந்தசுப்பிரமணியம், சென்னை-4 10.00, என். எஸ். சுப்பிரமணியன், கோயமுத்தூர்-18 7.00

ரூபாய் 5-00 கொடுத்த அன்பர்கள்: திருவாளர்கள் ப. க. வைத்தியநாதன், தூத்துக்குடி; எம். கே. மணி, ஆத்தூர்; பி. என். சேஷாத்திரி, பம்பாய்; வி. சங்கரன், சென்னை-33; கே. எம். ராஜு, ஹைதராபாத்; பி. சந்திரசேகரன், நாகர்கோயில்; என். கிருஷ்ணன், ராஞ்சி-4; விசுவநாதன், திருவான்மியூர்; எஸ். சிவராமகிருஷ்ணன், கோத்தகூடம்; எஸ். நடராஜன், பங்களூர்-1; ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை-2; ஏ. எல். நரசிம்மன், சென்னை-11; வி. ஜயராமன், டெந்திரி; சீனி விசுவநாதன், சென்னை-1; என். சுப்பிரமணியன், மதுரை-1; டி. எம். ராமநாதன், குடியாத்தம்; திரு எம். சீதாராமன், திருமங்கலக்குடி; ஸ்ரீமதிகள் எஸ். ரங்கநாயகி, சென்னை-18; நினா ராமமூர்த்தி, சென்னை-28; லட்சுமி சபேசன், வேலூர்; ஆர். சரோஜா, கோதாகூடம். ஸ்ரீமதி ஆர். லலிதா, மதுரை 4.00

ரூபாய் 3-00 கொடுத்த அன்பர்கள்: திருவாளர்கள் வி. வேங்கடேசுவர ஐயர், அழகியபாண்டியபுரம்; எம். சுப்பிரமணியம், நான்குநேரி; கே. ஆர். எஸ். மணியம், சென்னை-32; குமாரி சந்திரா ராணி, வேலூர்.

ராஞ்சி அன்பர்கள் ரூ. 32. விவரம்: எம். எஸ். சங்கரன் 3-00. ரூபாய் 2-00 கொடுத்தவர்கள்: ராமமூர்த்தி, சுப்பிரமணியம், விஜயராகவன், ஆர். நடராஜன், ஜி. ஸ்ரீகண்டன், எஸ். வி. எஸ். நாகராஜ்; எஸ். கிருஷ்ணமூர்த்தி; பி. ராமசுப்பிரமணியம்; எம். சந்திரமோகன்; எம். தங்கராஜ்; எஸ். எம். சுவாமி, எஸ். ராமானுஜம்; கே. பாலசுப்பிரமணியம். ரூ. 1-00 கொடுத்தவர்கள்: எஸ். சுவாமிநாதன்; எஸ். எம். வடிவேல்; டி. ஆர். சத்தியநாராயணன்.

ரூபாய் 2 - 00 கொடுத்த அன்பர்கள்: குமாரி எஸ். யோகாம்பாள், திருவண்ணாமலை; ஜுஜுப் ஷைக் மொகைதீன், வத்தலக்குண்டு; ஆர். சம்பத்குமார், சேலம்-1; ஸ்ரீமதி ஓ. என். எஸ். ராணி, லக்ஷ்மி மில்ஸ், அரசூர்; எம். கே. பரத, கிருஷ்ணகிரி, வி. கே. மூர்த்தி, கோயமுத்தூர்; கே. எஸ். கோவிந்தராஜன், கனியூர்; எஸ். புவனேந்திரன், மதுரை-1; ஆர். ராமமூர்த்தி, கல்யாண்; வி. என். வாசுதேவன், குன்னத்தூர்; எஸ். சைலேந்திரநாத், சென்னை-14; ஜி. ஸ்ரீதரன், ஈரோடு-1; இமான், பங்களூர்-2.

திரு வி. கோபாலகிருஷ்ணன், திருச்சி-6 1-08; முருகேசன், அவனாசி 1-06. ரூபாய் 1-00 கொடுத்த அன்பர்கள்: ரெங்கநாத ராகுலையா, விருத்தாசலம்; வி. சம்பத்குமார், மதுரை-1; டி. எஸ். ராஜசேகரன், தாம்பரம்; வி. சுப்பிரமணியம், வீரவிடங்கன்; கே. வீரபாண்டி, மதுரை-1; கே. கிருஷ்ணமூர்த்தி, அரியலூர்.

கல்கி அச்சகத் தொழிலாளர் அன்பளிப்பு 325.50 விவரம்: டி. எம். ராஜபாதர் 10.00, ஆர். மணவாள நாயுடு 10.00, ஏ. கேசவன் 16.00; வி. ராதாகிருஷ்ணன் 9.00, பி. ஆதிசேஷன் 8-00, வி. கோதண்டராமன் 7.00.

ரூபாய் 5 - 00 கொடுத்த அன்பர்கள்: திரு பி. ஆர். நடராஜன்; பி. எம். முத்து; ஏ. சஞ்சீவி; பி. என். பக்தவத்சலு; சி. எஸ். நாகலிங்கம்; டி. எம். சுந்தரமூர்த்தி; ஏ. பார்த்தசாரதி; என். மணி; பி. குப்புசாமி; எம். எல்லப்பன்; வி. சுந்தரராஜன்; ஜி. ஏழுமலை; கே. விசுவநாதன்; வி. முனுசாமி; பி. சிட்டிபாபு; என். ஏகாம்பரம்; ஆர். ஜானகிராமன்; வி. வஜ்ஜிரம்; எம். ஏ. ரஹீம்; பிச்சமணி ஐயர்; சி. வி. துரைசாமி ஐயர்.

ரூபாய் 4 - 00 கொடுத்த அன்பர்கள்: ஏ. குப்புசாமி; பி. வி. ராகவன்; ஏ. சி. பத்மநாபன் எம். ஜெ. ஜானகிராமன் 3.50

ரூபாய் 3 - 00 கொடுத்த அன்பர்கள்: ஆ. ஏழுமலை பொ. வரதராஜன்; டி. விஸ்வநாதன்; கே. வீரராகவன்; பி. என். சீனிவாசன்; என். கணபதி; கே. சங்கரன்; ஆர். எம். சீனிவாசன்; வி. சுந்தரபாபு; வி. முனுசாமி; எஸ். நாராயணன்; வி. கரியன்; எம். சுந்தரராஜன், டி. பலராமன்; ஆர். புருஷோத்தமன்; எம். வெங்கரன்; வி. லோகநாதன்; சி. துரைசாமி; டி. முனுசாமி, பி. என். நரசிம்மன்; பி. சின்னசாமி வி. கணேசன்.

ரூபாய் 2 - 00 கொடுத்த அன்பர்கள்: என். சிவலிங்கம்; எம். டில்லிராஜ்; எம். துரைசாமி; எஸ். டி. முத்து; ஆர். கோவிந்தசாமி; சி. முனுசாமி; கே. புண்ணியகோட்டி; வி. கணேசன்; எம். செல்வராஜ்; டி. ஜெயராமன்; என். புண்ணியகோட்டி; கே. விஜயரங்கம்; எம். கோவிந்தன்; எஸ். சுப்பிரமணி; ஏ. ஜீவரத்தினம்; டி. பாலாஜி சிங்; வி. மணி; எஸ். சௌந்தரராஜன்; ஆர். ராமன்; பி. பெருமாள்; வி. கந்தசாமி; எம். துரைராஜ்; வி. துரைசாமி; எம். கணேசன்; ஏ. பேட்ரிக்; எம். கே. சங்கரன்; ஜி. முத்துசாமி; எம். மாணிக்கம்; கே. வடிவேலு; வி. புருஷோத்தமன்; எம். நரசிம்மன்; வி. ஏ. வாசுதேவன்; டி. பாண்டுரங்கன்; எஸ். பாபு; கே. வடமலை; எம். பி. ஜமால்; வரதன்; ஆர். பழனி; டி. வெங்கடேசன். ஏ. நடராசன் 1-00.

ஆக மொத்தம் ரூ. 1804-88

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon